
மலர் : 21

# சத்தியத்தின் குரல்



# THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 21

# சத்தியத்தின் குரல்



**Editorial Team**

Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Translating Editor
**B.Benny Martin**

Guest Editors
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R.Swamy
P.C.Philemonrajah
B.Arjunan

Staff Writers
Wayne Barrier
Paula Bates
Bonnie Rushmore
Kingsly rajah
J.H. Rajkumar
Abel R. Nayagam

Publishing Consultant
**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...
தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
Cell : 98427 30382, 99655 30385

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
86-A, Dharapuram Road,
Kangayam - 638701. TN. India.
Cell : 98427 30382, 99655 30385

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
Cell : 92 4421 4421, 92 4420 4420

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
Cell : 94435 58041


ஆசிரியர் உரை

## மூப்பர்களைத் தெரிந்து கொள்வது சம்பந்தமாக சில அபிப்பிராயங்கள்

SOME OBSERVATIONS REGARDING THE SELECTION OF ELDERS

Byron Nichols

அமெரிக்க தேசத்தின் ஜனாதிபதியாக இருந்தபோது, ஜனாதிபதி மாளிகையில் இருந்த அறையில், பொறுப்புகளை நான் ஏற்றுக்கொள்கிறேன் மற்றவர்கள் மீது பழிபோடமாட்டேன் என்று எழுதப்பட்டிருந்த மரப்பலகையை தைரியமாக எடுத்துக் காட்டினார். அதை அவர் அகங்காரமாகச் செய்யாமல், மாறாக தேசத்தின் தலைவர் என்கிற நிலையில் தெளிவான முடிவுகள் எடுப்பதற்கும், அதன் விளைவுகளுக்கும் தான் பொறுப்பேற்பதாக ஒத்துக்கொண்டார்.

சபையில் மூப்பர்களாக நியமிக்கப்பட்டிருக்கம் சகோதரர்களுக்கு, மற்ற சகோதரர்களுக்கு இல்லாத சில பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற சகோதரர்கள் எவ்வளவு தேவபக்தியுள்ளனர்களாக இருந்தாலும் மூப்பர்களுக்குத்தான் பொறுப்புகள் அதிகம். கிறிஸ்துவின் மந்தையை மேய்ப்பது எவ்வளவு உன்னதமான வேலை. எபிரெயர் 13:17ல் அவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் காடுப்பதற்குப் பணிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று நாம் கற்றுக் கொள்கிறோம். ஒவ்வொரு மூப்பரும் (மேய்ப்பரும்) இவ்வார்த்தைகளை மனதில் பதிய வைத்து தன் பொறுப்புகளை அடிக்கடி நினைவுபடுத்தி, புதுப்பித்துக்கொள்ள வேண்டும். சபையிலுள்ள ஆடுகளுக்காகவும் (ஆத்துமாக்களு -க்காகவும்) தனக்காகவும் இவர்கள் இப்படிச் செய்ய வேண்டும்.

எந்த ஒரு சபையும் அதன் ஆவிக்குரிய நலனுக்காக செய்யும் வேலையில், மூப்பர்களைத் தெரிந்தெடுப்பதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை வேறு எதற்கும் கொடுப்பதில்லை என்று நான் நம்புகிறேன். மூப்பர்கள் தங்கள் பொறுப்புகளைச் சரியாகச் செய்யவில்லை அல்லது அவர்கள் தகுதியாக நடந்துகொள்ளவில்லை என்று அவர்களை நீக்குவதைவிட, அவர்களைத் தெரிந்து கொள்வது தான் கடினமானது.

வேத வாக்கியங்கள், மூப்பர்கள் மிகச்சிறந்த குணாதிசயங்களை உடையவர்களாகவும், ஞானவான்களாகவும், மிகச் சிறந்த வேத அறிவை உடையவர்களாகவும், தைரியமும் உறுதியும் மந்தையில் ஆத்துமாக்களை நேசிப்பவர்களாகவும், இழந்துபோனவர்களின் ஆத்துமாக்களை நேசிப்பவர்களாகவும் இருக்க வேண்டுமென்று எதிர் பார்க்கின்றன. வேதாகமத்தில் பல வசனங்கள் மூப்பர்கள் சம்பந்தமாக குறிக்கப்பட்டுள்ளன. (I தீமோத்தேயு 3:1-7; தீத்து 1:5;1பேதுரு 5:1-4; அப். 20:28-38; எபிரெயர்13:7,17; யாக்கோபு 5:13-15)

கோலப்போக்கில், சபைகளில் மூப்பர்களைத் தெரிந்தெடுப்பதில் ஒரு புதிய முறை பின்பற்றப்படுகிறது. அதென்னவென்றால், மூப்பர்களாவதற்குத் தகுதியில்லாவிட்டாலும் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதற்காக அவர்களைத் தெரிந்துகொள்ளும் வழக்கம் பின்பற்றப்படுகின்றது. சகோதரர்களே இப்படிப்பட்ட செயலுக்கு வேதாகமத்தில் எந்த அதிகாரமும் இல்லை. சிறந்தவர்களைத் தெரிந்தெடுப்பது என்பது வேதாகமத்திலிருந்து வந்த ஒன்றல்ல. மூப்பர்களைத் தெரிந்துகொள்வதற்கு அது ஓர் அளவுகோலாக இருக்குமென்றால், பரிசுத்த ஆவியானவர் பவுல் மற்றும் பேதுருவைக் கொண்டு மூப்பர்களின் தகுதியம்சங்களைப் பற்றி எழுதச் சொன்னதெல்லாம் நேரவிரயமாகும்.

அடுத்ததாக கடந்த பல வருடங்களாக சபையில் காணப்படும் ஒரு காரியம் என்னவென்றால், மூப்பராக ஒருவர் தெரிந்துகொள்ளப்படுகிறார் என்றால் அந்தச் சகோதரருக்கு விரோதமாக, சபையிலுள்ள அங்கத்தினர் சபையார் மத்தியில் நேரடியாக ஆட்சேபத்தைத் தெரிவிக்கக்கூடாது. ஆனால், மூப்பராக தெரிந்துகொள்ளப்படப்போகிறவரிடத்தில் சபை அங்கத்தினர் தவியாகப் போய் நேரடியாக தன்னுடைய ஆட்சேபவையைத் தெரிவிக்கலாம் என்கிற கருத்து நிலவுகிறது. வேதாகமத்தில் மூப்பர்களின் தகுதியம்சங்கள் கொடுக்கப்படவில்லை. எனவே, மற்றவர்களைக் கட்டுப்படுத்தும் செய்முறைகளைக் குறித்து நாம் ஜாக்கிறதையாக இருக்க வேண்டும். இருந்தபோதிலு இந்த குறிப்பிட்ட நடைமுறை பல காரணங்கமுக்காக பிரச்சனை மிகுந்ததாக இருக்கிறது. இந்த நடைமுறை மத்தேயு *18:15,17* ம் வசனங்களில் இயேசு என்ன சொன்னாரோ அதை ஆதாரமாக வைத்து நடத்தப்படுவது போல் தெரிகிறது. அங்கே இயேசு உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து என்று சொல்கிறார். மூப்பராகப்போகும் ஒரு சகோதரருக்கு விரோதமாகக் குற்றஞ்சாட்டுவதற்கு, மற்ற சகோதரர் ஒருவர் இதைப் பயன்படுத்துடது நியாயமல்ல. இந்த வசனப்பகுதியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, ஒரு சகோதரன் மற்றொரு சகோதரனுக்கு வேதாகமஅடிப்படையில் மூப்பர்ராவதற்குத தகுதியில்லாதவர் என்று நினைப்பதால், அந்த சகோதரன் அவருக்கு விரோதமாகக் குற்றஞ்செய்துவிட்டார் என்று பொருள்படாது. மத்தேயு 18ல் கர்த்தருடைய போதனையைத் தவறாகக் கிறிஸ்தவர்கள் மூப்பர்களைத் தெரிந்தெடுக்கும் செயல்முறையில் பங்கேற்கவிடாமல் தடுக்கிறது. ஒரு சிலரே அந்த சகோதரனிடத்தில் போய் தங்கள் மனசாட்சியின்படி, அவருக்கு வேதாகமத்தின் அடிப்படையில் மூப்பராகும் தகுதியில்லை என்று சொல்லி தங்களை அவரிடத்திலிருந்து பிரித்துக்கொள்ள விரும்புவார்கள். சபையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மூப்பர்கள், அடுத்ததாகத் தெரிந்தெடுக்கப்போகும் மூப்பர்களை தெரிந்தெடுக்கும் செயல்முறையில் கட்டுப்படுத்துவது நியாயமா? அதிலும், குறிப்பாக வேதாகமஆதாரம் இல்லாதபோது இப்படிச் செய்வது சரியா? †



நிர்வாக ஆசிரியர் உரை

# போர் வேண்டவே வேண்டாம்
## Never Fight Against God

E.Z.S.Rajanayagam.

பரிசுத்த வேதாகமத்தில் உள்ளஅனைத்து நூல்களிலுமே, அப்போஸ்தலர் நடபடிகள் நூலுக்குத் தனிச்சிறப்பு உண்டு. சுமார் 30 ஆண்டு கால சரித்திரத்தை உள்ளடக்கியுள்ள இந்நூலில் தான், "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்ற இயேசு பெருமானின் பிரதான கட்டளை நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பூவுலகில் பிறந்த ஒவ்வொருவரும், இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்க வேண்டிய கேள்வியும், அதற்கான தெளிவான பதிலும் இந்நூலில் தான் இடம் பெற்றுள்ளது. இப்படி சிறப்புகள் சிலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்நூலில்தான்"...தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடி பாருங்கள் என்ற (அப். 5 :39), போர் தவிர்ப்பு எச்சரிப்பும் இடம் பெற்றுள்ளது.

ஒரு சமயம் பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் ஆலோச சங்கத்தாருக்கு முன்பாக விசாரனைக்காக நிறுத்தப்பட்டனர். அங்கே ஆலோசனைச் சங்கத்தாரின் அடாவடித்தனம் அத்து மீறிப்போகிறதைக் கண்ணுற்ற, வயதில் முதிர்ந்தவனும், கல்வியில் சிறந்தவனும், வேதத்தில் தேறினவனும், மிகுந்த அனுபவசாலியுமான கனம்பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல் என்னும் பரிசேயன், சரித்திரத்தின் சில நிகழ்வுகளை எடுத்துக்காட்டாகக் கூறி, அவர்கள் செய்யத் தீர்மானித்திருந்த காரியத்தைக் குறித்து, "ஏற்ற சமயத்தில் சொல்லப்பட்ட வார்த்தை, வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்'' (நீதி.25:11). என்ற ஞானியின் வாக்குக்கிணங்க, இவ்விதம் புத்தி சொன்னான். இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றும் செய்யாமல் இவர்களை விட்டுவிட்டுங்கள். இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் அழிந்துபோம். தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடி பாருங்கள் என்றான் (அப் 5:38,39).

நமது தமிழ் வேதாகமத்தில், யோசனை என்று சொல்ல -ப்பட்டிருப்பதற்கு, ஆங்கிலத்தில் திட்டம் என்றுள்ளது. ஆம், அங்கே, இந்தத் திட்டமும், கிரியையும் என்று எழுதப்பட்டுள்ளது. இது, நமது தமிழ்

வேதாகமம் தரும் பொருளைக் காட்டிலும் சற்று ஆழமானது. அதன்படி பார்த்தால், அப்போஸ்தலருடைய பேச்சும், பிரசங்கமும் **தேவத்திட்டத்தின்படியானதாக இருக்கிறது.** அதை அழித்து ஒழித்துவிட உங்களால் கூடாது, கூடவே கூடாது. **அப்படி நீங்கள் முயற்சித்தால், அது தேவ திட்டத்தோடு போரிடுவதற்குச் சமம்.** அப்படிப்பட்ட போர் மிகவும் அபாயகரமானது. ஆகவே, ஆலோசனைச் சங்கத்தாரே, நீங்கள் தேவனோடே, தேவதிட்டத்தோடே போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடி பாருங்கள் என்று எச்சரித்தான்.

ஏன் கமாலியேல் அப்படிச் சொன்னான்? பரிசேய சமயத்தானாகவும், நியாயசாஸ்திரியாகவும் இருந்த காமலியேல், பழைய ஏற்பாட்டில் மிகவும் பரிச்சயம் உள்ளவனாகவே இருந்திருக்க வேண்டும். அதன் மூலம் தேவனுக்கு விரோதமான போரின் முடிவு பற்றி அவனுக்கு நன்றாகவே தெரிந்திருக்கும். ஏனெனில், II நாளாகமம். 13:12, **உங்கள் பிதாக்களின் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம் செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக்குச் சித்திக்காது என்று கூறுகிறது.** சித்திக்காது என்பதற்கு ஆங்கில வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைக்கான உண்மை நிலை இப்படியிருக்கும்போது, இன்றைய உலகத்தின் மற்றும் கிறிஸ்தவத்தின் நிலை நேர் எதிராக இருக்கிறது. ஆம், இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவரும், ஏதாவது ஒரு வகையில் சேனைகளின் கர்த்தரோடு யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை நாம் இவ்விதம் பிரிக்கலாம்.

1. தேவன் இல்லையென்று மதிகேடனைப் போல் சொல்லி, (சங்.14:1) அதன் மூலம் தேவனுக்கு விரோதமான போரில் ஈடுபட்டிருப்பவர்கள். நாத்திகர்கள் இவ்வகையைச் சேர்ந்தவர்கள்.

2. தேவ நம்பிக்கையிருந்தும், அந்தத் தேவன் யார் என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிக்காமல், சிருஷ்டிகரை மறந்து, சிருஷ்டியைத் தொழுது, ( ரோமர். 1:25) எப்படியோ அல்லது எதையோ வழிபட்டால் போதும் என்ற நினைப்பில் காரியங்களைச் செய்து, அதன் மூலம் தேவனுக்கு விரோதமான போரில் ஈடுபட்டிருப்பவர்கள். உலகில் உள்ள பல மதங்களும், அவைகளின் வழிபாடும் இவ்வகையைச் சேர்ந்தவை.

3. உண்மையான தேவன், இவர்தான் என்று அறிந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தும், அந்தத் தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படியான திட்டம் என்ன என்பதைப் புரிந்து, அதற்குத் தங்களை ஒப்புக்கொடாமல் அவரவர்களுடைய ஆதாயத்திற்கென்றும், பதவி பட்டங்களுக்கென்றும், பேர் புகழுக்கென்றும், கொள்கை கோட்பாடுகளை தங்களுக்குத் தாங்களே வகுத்து, சுய நீதி பேசித் திரிந்து,



குருடருக்கு வழிகாட்டுகிற குருடரைப் போன்று வாழ்ந்து, அதன் மூலம் தேவனுக்கு விரோதமான போரில் ஈடுபட்டிருப்பவர்கள். இயேசுவானவர் வாக்களித்து (மத்.16:18) கட்டின அவருடைய சபையைச் சேராத, ஏனைய சபைப் பிரிவுகள் அனைத்தும் இவ்வகையைச் சார்ந்தவை.

4. இறுதியாக, ஒன்றான மெய்த் தேவன் யார் என்பதையும் அறிந்து, அந்தத் தேவனுடைய மனிதனுக்கான இரட்சிப்பின் திட்டம் என்ன என்பதையும் புரிந்து, அதற்காகத் தங்களைக் கீழ்ப்படுத்தி, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானமும் பெற்று, இரட்சிப்படைந்து, கர்த்தரால் அவருடைய சபையிலும் சேர்க்கப்பட்டு, தேவன் எதிர்பார்க்கின்ற ஓர் உன்னதமான, பரிசுத்த வாழ்க்கை வாழாமல், தேவனுக்கு விரோதமாகப் போரிட்டுக் கொண்டிருப்பவர்கள். மெய் வாழ்வு வாழாத கிறிஸ்தவர்கள் இவ்வகையைச் சேர்ந்தவர்கள்.

இந்த நான்கில், பிரிவினைச் சபையாரின் போரை மாத்திரம் இப்பொழுது கவனிப்போம்.

## பிரிவினைச் சபையாரின் பகிரங்கப்போர்

தேவனுடைய திட்டத்துக்கு எதிராகச் செயல்படுவது, தேவனுடன் நடத்தும் போருக்குச் சமம் என்று கமாலியேல் சொல்வது மெய்யானால் இன்றைய பிரிவினைச் சபையாரின் செயல்கள் அனைத்தையுமே தேவனுக்கு எதிரான "பகிரங்கப் போர்" என்று கண்ணை மூடிக்கொண்டு சொல்லி விடலாம்.

எப்படியெனில், தேவன் ஆவியாயிருக்கிறார் என்று வசனத்தில் (யோவான் 4:24) தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தும், ரோமாபுரியைத் தலைமையிடமாகக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம் உருவ வழிபாடு செய்து கொண்டிருக்கிறது. இது, யாத் 20:4-ம் வசனத்தின்படி தேவ திட்டத்துக்கு எதிரானது.

கிறிஸ்து சபைக்குத் தலைவராயிருக்கிறார் என்று வசனத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தும், ஒரு மனிதனை, தங்களுடைய சபைப் பிரிவுக்குத் தலைவர் என்று வாய் கூசாமல் சொல்லிக் கொள்கிறார்கள். இது எபே. 5:23 ன்படி தேவ திட்டத்துக்கு முரணானது.

வேறு சில பிரிவினர் பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானத்தின் மூலம் தான் இரட்சிப்பு என்று வசனம் அழுத்தம் திருத்தமாகச் சொன்னாலும், இரட்சிப்புக்குப் பின் ஞானஸ்நானம் என்று திரித்துப் போதிக்கின்றனர். இன்னும் சில பிரிவினர், விசுவாசிப்பவர்களுக்குத்

தான் ஞானஸ்நானம் என்று வசனம் சொல்லும்போது, விசுவாசிக்க முடியாத குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் என்ற பெயரில் எதையோ செய்கின்றனர். இவ்விரண்டு போதனைகளும் மாற்கு 16:16 -ன் படி தேவ திட்டத்துக்கு விரோதமானது.

வாரத்தின் முதல் நாளில் தான் ஆராதிக்க வேண்டுமென்று வசனம் சொல்லும்போது, வாரத்தின் இறுதி நாளாகிய சனிக்கிழமையை இன்னுமொரு கூட்டத்தார், கெட்டியாகப் பிடித்துக் கொண்டுள்ளனர். இது அப்-20:7, Iகொரி16:2 போன்ற வசனங்களின் படி இது தேவதிட்டத்துக்குப் புறம்பானது.

விசுவாசிக்கிறவர்களால் செய்யப்படும் அற்புதங்களுக்கும், பேசப்படும் அந்நிய பாஷைகளுக்கும் ஒரு முடிவிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கும் போது, அற்புதம் என்ற பெயரில் ஏமாற்று வித்தைகளையும், அந்நிய பாஷை என்ற பெயரில் வினோத சத்தங்களையும் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இது I கொரி 13:8-10 வசனங்களின் படி தேவ திட்டத்தைக் கேலிக் கூத்தாக்குவதாக உள்ளது.

இப்படியே நான் சொல்லிக்கொண்டு போக ஆரம்பித்தால், இக்கட்டுரையை முடிப்பதற்குக் குறைந்தது ஒரு வார கால அவகாசமும், சில நூறு பக்கங்களும் தேவவைப்படும். உணர்வுள்ளவர்களுக்கு உதாரணம் ஒன்று போதும் என்ற எண்ணத்தோடு இங்கேயே நிறுத்திக் கொள்கிறேன்.

அருமையானவர்களே தேவனுக்கு எதிரான தேவ திட்டத்துக்கு எதிரான போர் வேண்டாம் என்று சொன்னபோது, உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாத சதுசேயர்களே உடனடியாகச் செவி கொடுத்திருக்கும்போது, கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்க்கிறோம் என்று வாய் நிறைய சொல்லிக்கொண்டு, மனம் குளிர பேசிக்கொண்டிருக்கும் நாம் தேவதிட்டத்துக்கு எதிராகச் செயல்பட்டு கொண்டிருக்கலாமா? சிந்திப்போம்! ✝

### ஆபகூக் நூலின் பாடம்

- கவனித்துப் பார் - 1-ம் அதிகாரம்
- நின்று பார் - 2-ம் அதிகாரம்
- முழங்காலிட்டுப் பார் - 3-ம் அதிகாரம்



# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| மூப்பர்களைத் தெரிந்து | ..... Byron Nichols | |
| போர் வேண்டவே வேண்டாம் | ..... E.Z.~~Selvanayagam~~ Rajsnayagam. | ... 3 |
| தேவன் அநீதியுள்ளவரல்லவே | ..... Jerry bates | ... 9 |
| நாம் மறவாதபடிக்கு | ..... J.C.Choate | ... 12 |
| பாவமும் பரிகாரமும் | ..... E.Z.Selvanayagam | ... 15 |
| கிறிஸ்தவ மனைவி | ..... P.C.Philemon Rajah | ... 20 |
| சந்தேகப்படுகிறவன் | ..... B.Arjunan | ... 23 |
| ஒத்திவைக்கலாமா? | ..... Benny Martin | ... 26 |
| **தேவன்** | **God** | |
| தேவனுடைய பராமரிப்பு | ..... Dalton key | ... 29 |
| பராமரிப்பு | ..... Kevin Rhodes | ... 31 |
| கிறிஸ்துவை மையமாகக் | ..... Kerry Halton | ... 32 |
| நீங்கள் பரிசுத்த ஆவியான | ..... Kevin L.Moore | ... 34 |
| **இரட்சிப்பு** | **Salvation** | |
| கிறிஸ்து ஏன் பிறந்தார்? | ..... Boobara Jones | ... 36 |
| வசன ஆராய்சி | ..... Jerry Bates | ... 40 |
| பிரசங்கபீடத்தில் அக்கினி | ..... J.J. Turner | ... 43 |
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine to Live by** | |
| அதே பழைய பாடல் | ..... Bobby Dockery | ... 48 |
| நான் பிரசங்கித்த நற்செய்தி | ..... Hollis Miller | ... 51 |
| பரிசுத்தமும் நடத்தையில் | ..... Rex Banks | ... 53 |
| **செயலில் கிறிஸ்தவம்** | **Christianity in Action** | |
| வழி தப்பிப் போனவர்களை | ..... Gany C. Hampton | ... 56 |
| சபையின் பணி | ..... Dale Grissom | ... 58 |
| பரலோகத்திற்கு நேராக | ..... Neal Pollard | ... 60 |

| | | | |
|---|---|---|---|
| **ஆராதனை** | **Worship** | | |
| வித்தியாசமாயிருப்பது | ..... Jimmy Jividen | ... 62 | |
| சில காரியங்கள் பலிகளை | ..... Cecil ray Jr. | ... 64 | |
| ஆராதனையில் | ..... Dalton key | ... 67 | |
| கர்த்தருடைய பத்தி | ..... Ardron hinton | ... 69 | |
| **அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை** | **Daily Christian living** | | |
| பொறாமை | ..... Willkin Tom o' Neal | ... 71 | |
| காலம் உருண்டோடும் போது | ..... David A. Sargent | ... 73 | |
| உங்கள் தெரிந்து கொள்ளுதல் | ..... Charles V. Cash | ... 75 | |
| **கிறிஸ்தவ இல்லம்** | **The Christian home** | | |
| அன்புச் சங்கிலிகள் | ..... Randall Caselman | ... 76 | |
| **ஹேய் குட்டீஸ்** | **Hey you kids** | | |
| நியாயமான உலகம் | ..... SPC Alex gibson | ... 79 | |
| நம் கிரியைகள் பரலோகத்திற்கு | ..... Ashley bates | ... 84 | |
| **வசனப் பகுதி பாடங்கள்** | **Textual studies** | | |
| சுவரில் கையெழுத்து | ..... Maxie B.Boren | ... 87 | |
| எபேசியர் நிருபத்தில் | ..... Albert Gardner | ... 90 | |
| **வேதாகம கதாபாத்திரங்கள்** | **Bible Characters** | | |
| மதியிலிருந்து மதியீனத்திற்கு | ..... Bonnie Rushmore | ... 92 | |
| தேவனைப்பிரியப்படுத்திய | ..... T.Pierce Brown | ... 97 | |
| பிரிஸ்கில்லா மற்றும் | ..... Harvey porter | ... 101 | |
| **வேதாகம கேள்விகள்** | **Bible questions** | | |
| நல்ல தேவனால் | ..... John Gipson | ... 104 | |
| வேதாகம கேள்விகள் | ..... Keith parker | ... 106 | |
| பிரச்சினையின் மையம் | .....Paul harvey | ... 108 | |




இணை ஆசிரியர் உரை

# தேவன் அநீதியுள்ளவரல்லவே

## GOD IS NOT UNJUST

***Jerry Bates***

இவ்வார்த்தைகள் எபிரெயர் 6:10 ல் இடம் பெற்றிருக்கிறது. ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத் தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அந்தியுள்ளவரல்லவே''. இவ்வார்த்தைகள் நம்மைஉற்சாகப்படுத்தவேண்டும். ஏனென்றால், இவைகள் நாம் கர்த்தருக்காகப் படும் பிரசாயங்கள் விருதாவாகப் போவதில்லையென்று நம்மைமறுபடியும் நிச்சயப்படுத்துகின்றன. சிலர் நாம் ஆதாய நம்பிக்கையுடன் தேவ னுக்கு சேவை செய்யக்கூடாது என்று செல்வார்கள், அது உண்மைதான், இருந் தாலும் நம் பிரயாசங்களுக்கு கடைசியாகப் பலனிக்கப்படும் என்று நாமெல்லாரும் விசுவாசிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் ( Iகொரிந்தியர் 15:19, இம்மைக் காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் என்று சொல்வதை நினைவில் கொள்ளுங்கள்.

இப்போது, எபிரெயர் 6:10 ல், சொல்லப்பட்டிருக்கிற வாக்கியத்தை நாம் சற்று சிந்திப்போம். தேவன் அந்தியுள்ளவரல்லவே. இதன் பொருள் தேவன் தம்முடைய மனதை மற்றும் திட்டத்தை மாற்றுவதில்லை, தம்முடைய முடிவுக்களுக்காக வருத்தப்படுவதுமில்லை என்பதாகும். தேவன் வாக்குத்தத்தம் செய்தால், அதை நிச்சயமாக நிறைவேற்றுவார். இது தேவன் மனிதனைப் போன்றவர் அல்ல என்பதை நமக்கு நிச்சயப்படுத்துகிறது. மனிதர்களாகிய நாம் அடிக்கடி நம் மனதை மாற்றகிறோம். நமமால் வருங்காலத்தை முன்னறிவிக்க முடியாது. ஆகவே, புதிய சூழலுக்கு நம்மைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. சில வேளைகளில் நம்மைவிட சக்திவாய்ந்தவர்கள் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. சில வேளைகளில் நம்மைவிட சக்திவாய்ந்தவர்களை எதிர் நம்மீது தாக்கத்தை ஏற்படுத்தும் போது நம் வாக்கை நம்மால் நிறைவேற்ற முடியாது. அவைகள் நமக்கு தடைக்கற்களாகி விடுகின்றன. சில வேளைகளில், நாம் நம் பேராசையால் கொடுத்த வாக்கை நிறைவேற்றாமல் போய்விடுகிறோம். காரணங்கள் எதுவாக இருந்தாலும், பெரும்பாலும் மனிதன் நம்பத்தகுந்தவனல்ல. ஆனால், தேவன் அப்படிப்பட்டவரல்ல.

தேவனுக்கு தம்மைப் புதிய சூழ்நிலைக்குப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியமில் லை. ஏனென்றால், வருங்காலத்தைப் பற்றி அவருக்குத் தெரியும், காரணம் அவர்தான் அதைக் கட்டுப்படுத்துகிறார். தேவன் தம்முடைய நோக்கத்தை நிறை வேற்றுவதை எந்தக் காரணியும் தடுக்க முடியாது. மேலும், தேவன் நம்பத் தகுந்தவர், நாம் அதை அறிந்து விசுவாசிக்க வேண்டுமென்று விரும்புகிறார். மாறாக, அவர் பேராசையால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. நாம் அவரை நம்பமுடியும்என்பதை நிச்சயப்படுத்த, எபிரெய ஆசிரியர், தேவன் ஆபிரகாமுக்குச் செய்த வாக்குத்தத்தத்தை நினைவுபடுத்தி அதை ஓர் ஆணையால் ஸ்திரப்படுத்தினதைக் குறிப்பிடுகிறார் (எபிரெயர் *6:13-18*). ஆகவே, இப்பூமியில் நம் வாழ்க்கை முடிந்த பிறகு, நமக்குப் பலன் காத்திருக்கிறது என்பதைக் குறித்து நாம் ஆச்சரியப்பட வேண்டிய அவசியமில்லை நமக்குப் பலன் உண்டு என்பதற்கு தேவன் உத்திரவாதம் கொடுக்கிறார். தேவனால் பொய் சொல்வது என்பது முடியாத காரியமாகும் (எபிரெயர் *6:18*)

அடுத்ததாக, தேவன் மறந்துவிடுவதற்கு அந்தியுள்ளவரல்லவே என்று நாம் காண்கிறோம். மனிதன் அடிக்கடி காரியங்களை மறந்து விடுகிறான். மனித மனம் பலவீனமானதும், தவறு செய்யக்கூடியதுமாயிருக்கிறது. சில வேளைகளில், சில காரியங்களை நாம் செய்யவிரும்பாதபடியால் வேண்டுமென்றே அவைகளை மறந்து விடுகிறோம். அப்படிக் காரியங்களை மறந்துவிட்டு, சௌகரியமாக மறந்துவிட்டோம் என்கிறோம். மறப்பது என்பது, காரியங்களைச் செய்ய அலட்சியம் காட்டுவது என்னும் பொருளையும் குறிக்கிறது. பெரும்பாலும் நாம் சிறந்த உள்நோக்கங்களை உடையவர்களாய் காணப்படுகிறோம். ஆனால் அவைகளைச் செயல்படுத்த அலட்சியம் காட்டுகிறோம். எபிரெயர் 5:12 ல் அந்நிருபம் யாருக்கு எழுதட்டதோ அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக வளரவேண்டிய அளவுக்கு வளராமல் அலட்சியம் காட்டினதை நாம் காண முடியும். எபிரெயர் *2:4* ல் பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றி -ருப்போமானால் அல்லது அலட்சியமாக நடந்து கொண்டால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம் என்ற எச்சரிக்கப்ப -ட்டிருக்கிறோம். எபிரெய நிருபத்தின் இறுதியில் அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள் என்று ஆவியானவர் உற்சாகப்படுத்துகிறார் (எபிரெயர் *13:2*). ஆம், மனிதர்களாகிய நாம் பெரும்பாலும் காரியங்களை அலட்சியப்படுத்துகிறோம். ஆனால், தேவன் அப்படிச் செய்வதில்லை. தேவன் ஒருபோதும் தம்முடைய வாக்குத்தத்தத்தை அலட்சியப்படுத்துவதோ அல்லது மறப்பதோ இல்லை



## தேவன் வாக்குத்தத்தம் பின்னினால், அதை நிச்சயமாக நிறைவேற்றுவார்

*அதே நேரத்தில், தேவன் சில காரியங்களை மறக்கிறார்.அவர் நம் கடந்த கால பாவங்களை மறக்கிறார் (ஏசாயா 43:25). எபிரெய ஆசிரியர் 8:12 ல் இவ்விதமாகச் சொல்கிறார், ஏனெனில், நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; மறுபடியும், இது மனிதன் என்ன செய்கிறானோ அதிலிருந்து முற்றிலும் மாறுபடுகிறது நாம் பெரும்பாலும் நன்மைகளை மறந்து, தீமைகளை மனதில் வைத்துக்கொள்கிறோம். அப்படியென்றால், பல பாவங்களைச் செய்திருக்கிற நமக்கு தேவன் எப்படிப் பலனளிப்பார் என்று நீங்கள் எண்ணினால், இனிமேல் அதைக்குறித்து நீங்கள் நிச்சயமில்லாமல் இருக்க வேண்டாம். தேவனுடைய ஜனங்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பும்போது தேவன் அவைகளை மன்னித்து மறந்து விடுகிறார் (அப். 8:22; யோவான் 1:9)*

*கடைசியாக, உங்கள் கிரியையும், அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்வே என்று நாம் வாசிக்கிறோம் (எபிரெயர் 6:10) இப்படிப்பட்ட கிரியைகள் செய்யப்படுவதற்கு அன்பு தான் தூண்டுகோலாக இருக்கிறது. நாம் கிரியைகளை கைமாறு கருதிச் செய்வதில்லை. நாம், பலன் கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் கிரியை நடப்பித்தால் அது அன்பின் பிரயாசமல்ல. நம் பிரயாசம் நம் அன்பை நிரூபிக்கிறது. நம் பிரயாசங்களைத் தேவன் ஒருபோதும் மறக்கமாட்டார் என்பதை நாம் அறிந்துகொள்வது நமக்கு ஆறுதலையும், உற்சாகத்தையும் அளிக்கிறது. ஏனென்றால், இது தேவன் நம் கிரியைகளைக் கண்டுகொள்ளாமல் இருக்கமாட்டார் என்பதை நிச்சயப்படுத்துகிறது. நான் செய்கிறதை யாரும் கண்டு கொள்வதில்லை என்று நாம் ஒருபோதும் நினைக்க வேண்டாம். தேவன் எல்லாவற்றையும் காண்கிறார்!.*

*நாம் உண்மையுள்ள, நம்பத்தகுந்த தேவனைப் பெற்றிருக்கிறோம். உண்மையாக நாம் அவருக்குச் சேவை செய்யும்போது, அதைப பாராட்டக்கூடிய நீதியுள்ள, அன்புள்ள தேவனை நாம் பெற்றிருக்கிறோம். ஆகையால், அவருடைய வாக்குத்தத்தங்களை நாம் முயற்சிப்போம். நம் பிரயாசங்கள் விருதாவாயிராது என்பதைக் குறித்து நாம் நிச்சயமடைவோம்.* †

**நீதியுள்ள தேவனுக்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால் இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுவோம்**

# நாம் மறவாதபடிக்கு..

## LEST WE FORGET

**J.C. Choate**

சபைகளில் ஏற்படும் பிரச்சனைகளைப் பார்த்துப் பதறி சோர்வடைவது இன்றைய நாட்களில் வழக்கமான ஒன்றாகிவிட்டது. சபைகளில் காணப்படும் தாராளமயக் கொள்கையால் பிரிவினைகள் உண்டாகி தனிநபர் மற்றும் சபையாக வழிவிலகிச் செல்வதை நாம் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம். இதனால் வருங்காலம் பிரகாசமற்றதாகத் தெரியலாம். சிலர் ஒட்டுமொத்த கிறிஸ்தவ முறைமையே தவறானதாகத்தானிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். அவர்கள் சிலவேளைகளில், கிறிஸ்தவத்தை விட்டே வெளியேறிவிடுகிறார்கள். இப்படிச் செய்வது பிரச்சனைக்குத் தீர்வாகுமா? இக்கேள்விக்கான பதில் ஆயிரமுறை சொன்னாலும் இல்லை என்பதாகத்தானிருக்கிறது.

நாம் நினைவில் கொள்ளவேண்டியது, தேவன் இன்றும் ஆளுகை செய்து, சகலவற்றையும் தம்முடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்பது தான். கிறிஸ்துவானவர், தம்மிடத்தில் வந்து தம்முடைய சித்தத்திற்குக் கீழ்ப்பவோருக்கு இன்றும் இரட்சகராகத்தான் இருக்கிறார். வேதாகமம் இன்றும் தேவனுடைய வார்த்தையாகத்தானிருக்கிறது. அது இன்றும் சத்தியமாக இருக்கிறபடியால் ஒருபோதும் மாறுவதில்லை. சபை இன்றும் கர்த்தருடைய ஆவிக்குரிய சரீரமாகத்தானிருக்கிறது. இரட்சிக்கப்பட்டவர்கள் மாத்திரமேஅதில் சேர்க்கப்படுகிறார்கள். அச்சரீரம் இன்றும் அழகாகவும், மகிமையாகவும், என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

சிலர் மாற்றம் வேண்டுமென்று எதிர்பார்க்கும் நிலையிலே, தேவனோ, கிறிஸ்துவோ, சத்தியமோ ஒருக்காலும் மாறுவதில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் . கர்த்தரும், அவருடைய வழியும் மாறாமல் எப்போதும், போல் அப்படியே உள்ளது. நம் தேவைகளுக்கு இதைவிட சிறந்த பதிலை நாம் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? சத்தியத்தை விட சபையை விட தேவன் அங்கீகரித்திருக்கிற ஆராதனையை விட, கிறிஸ்தவ வாழ்க்கை முறையை விட வேறொன்று எப்படி மேலானதாக இருக்க முடியும்?

எந்த ஒரு தேசத்திலும், சபையில் எண்ணிக்கை குறைவாக இருந்தால் நலமாயிருக்கும் என்று எண்ணத்தோன்றுகிறது. ஏனென்றால், சபை அங்கத்தினர்கள் பெருகப் பெருக அவர்களின் எண்ண ஓட்டத்தில் வேறு பாடுகள் உருவாகிறது. சபைகளில் தேவனுடைய வார்த்தையைச் சரியாகப் புரிந்துகொள்ளாத ஒரு



கூட்டம் இருந்து எப்போதுமே வருகிறது. அதே நேரத்தில் தேவனுடைய வார்த்தையை அதிகமாகத் தெரிந்தவர்கள் பெருமைகொண்டு வேதாகமத்தின் அடிப்படை உபதேசங்களில் தன்னிறைவு பெறாமல், ஒரு சாராரை தவறான பாதையில் வழி நடத்துகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நீண்ட நாட்கள் தேவனுடைய வார்த்தையை விட்டு வழிவிலகிச் சென்றுவிட்டால் காரியங்களைக் கர்த்தருடைய மாதிரியின் படி செய்யாமல் மத உலகினர் செய்யும் தவறில் விழுந்து விடுகிறார்கள்.

சில ஆத்துமாக்கள் விழுந்துபோவது நம்கமுப் பிடிக்காத காரியமாகும். தொடர்ந்து வழிவிலகிச் செல்பவர்களை அப்படியே விட்டுவிட்டு அவர்களிடமிருந்து ஒக்கியத்தை விலக்கிக் கொண்டு கர்த்தருடைய ஆவிக்குரிய சரீரத்தைப் பாதுகாக்க கர்த்தருடைய வேலையை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும். இதைக் குறித்து அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான், ( I யோவான் *2:18,19* -ம் வசனங்களில் மிகத்தெளிவாக விளக்கியுள்ளார். "பிள்ளைகளே இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம். அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார் -களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள்."

கர்த்தருடைய சபையில் ஆரம்பநாட்களிலிருந்தே சிலர், தாங்கள் வேதவாக்கியங்களால் ஆளப்பட விரும்பவில்லை. அப்போஸ்தலவாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் அசைவைத்து என்னை விட்டுப் பிரிந்து, தெசலோனிக்க பட்டணத்துக்குப் போய்விட்டான் ( II தீமோத்தேயு *4:1*) என்று எழுதுகிறார். அப்போஸ்தலனாகிய யோவான், IIIயோவான் *1:9,10* - ம் வசனங்களில், நான் சபைக்கு எழுதினேன்; ஆனாலும் அவர்களில் முதன்மையயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனபடியால் நான் வந்தால், அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தகளை அலப்பி, செய்து வருகிற கிரியைகளை நினைத்துக்கொள்வேன். அவன் இப்படிச் செய்துவருவதும் போதாமல், தன் சகோதரரை ஏற்றுக்கொள்ளாமலிருக்கிறதுமன்றி, ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறவர்களையும் தடைசெய்து சபைக்குப் புறம்பே தள்ளுகிறான் என்று எழுதுகிறார். இந்த தியோத்திரரேப்பு போன்றோர் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்த தாங்களும் இடறிவிழுந்து, மற்றவர்களையும் இடறிவிழச் செய்கிறார்கள். உண்மையைச் சொல்லப்போனால் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் மத்தியிலே, அங்கீகரிக்கப்பட்ட எல்லா மத அமைப்புகளும் இப்படித்தான் ஆரம்பிக்கப்பட்டன. எனவே, கிறிஸ்தவர்கள் மத்தியில் இதுபோன்ற சீர்கேடுகள் ஒன்றும் புதிய பிரச்சனைகளல்ல.

பல வேதாகமக் கல்லூரிகள் சத்தியத்தைவிட்டு விட்டுத் தங்கள் மாணவர்களுக்குத் தவறான உபதேசத்தைப் போதிக்கத் துவங்கிவிட்டன. அதிகமாணவர்கள் உள்ள வேதாகமக் கல்லூரிகளில் கர்த்தருடைய வழியைக் கேள்விகேட்கும் மனப்போக்கு உருவாகிவருகிறது. சிலர் வேதவாக்கியங்களை முறையாகக் கற்றுத்தேர்ந்தவுடனே பெருமை அடைந்து, இடுக்கமான வாசலைப் போதிக்கும் வேதவாக்கியங்களுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க மனதில்லாமல், புதிய உபதேசங்களைக் கண்டு பிடித்து சபையைத் தங்கள் விருப்பப்படி சீரமைக்கத் துணிந்து விடுகிறார்கள். அவர்கள் சபை அங்கத்தினர்களிடம், பழங்காலப் பாரம்பரியங்களை அறியாமையினால் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதாகக் கூறி அவர்களை வழிவிலகச் செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள், தாங்கள் ஊழியம் செய்வதை விட்டுவிட்டு, சபையில் சர்வாதிகாரம் பண்ணவும், சபையைத் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரவும் முயற்சிக்கிறார்கள். சத்தியத்திற்காக நிற்கும் வேதாகமக் கல்லூரிலிருந்து சத்தியத்தைவிட்டு வழி விலகிப் போனவர்களை நாம் அறவே வெறுத்து நிராகரித்து, அவர்கள் தங்களைத்தாமேஅழித்துக்கொள்ள ஒப்புக்கொடுப்பது நமக்கு ஞானமாயிருக்கும்.

நம்முடைய இரட்சிப்பு, நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிவதைச் சார்ந்திருக்கிறது என்பதை மனதில் கொண்டு, நாம் கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் சபையில் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாக, கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறபடி அவரை ஆராதிக்கிறவர்களாக மாத்திரம் இருக்க வேண்டும். மற்றவர்கள் சத்தியத்திற்காக நிற்கிறார்களோ இல்லையோ நாம் சத்தியத்திற்காக நிற்கவேண்டும். நாம் தேவனுடைய வார்த்தைகளைப் படித்து, அதை உண்மையாக அறிவிக்கிறவர்களாக இருக்கவேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து செய்து, பெரும்பாலானோர் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட, உலகத்துக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். இவ்விதமாக மட்டுமேநாம் தேவனுடைய ஜனங்களாகி, தேவ ஆசீர்வாதங்களைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

இல்லை, சபை இன்னும் மரிக்கவில்லை, அது மரிக்கப் போவதுமில்லை. மேலும், இன்றும் பல கிறிஸ்தவர்கள் உண்மையாகத் தேவனுக்கு ஊழியம் செய்து கொண்டும், ஆராதித்துக் கொண்டும் இருக்கிறார்கள். தேவன் இன்றும் ஆளுகை செய்து கொண்டுதான் இருக்கிறார். அவர் இன்றும், எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். கடந்த காலங்களிலும் தேவன் தம்முடைய ஜனங்களை ஆசீர்வதித்திருக்கிறார். வருகின்ற நாட்களிலும் அவர் தம்முடைய ஜனங்களை ஆசீர்வதிப்பார். இறுதியில் சபைதான் வெற்றிபெறும். மனிதர்கள் தான் தவறு செய்கிறார்கள். ஆனால் தேவனுடைய வாக்கியங்களில் விவரிக்கப்பட்டிருக்கிற அவருடைய சபையைப் பற்றி, அவருடைய ஜனங்களைப் பற்றிய தேவனுடைய திட்டத்தில் பிழைகளே இருப்பதில்லை. †



# பாவமும், பரிகாரமும்

## SIN AND ITS REMEDY

E.Z. Selvanayagam

தற்காலத்தில் பாவத்தைப் பற்றி யாரும் அதிகமாகக் கவலைபடுவதாகத் தெரியவில்லை. அது கவலைப்பட வேண்டிய பிரச்சனை என்று பலர் நினைப்பதுமில்லை. தங்களுக்கு விருப்பமான, சௌகரியான எதையும். எப்படியும் செய்யலாம்; அதை நியாயப்படுத்துவதற்கு பின்னர் ஆதாரங்களையும், ஆட்களையும் தேடிக் கொள்ளலாம். என்று நினைக்க ஆரம்பித்து விட்டனர். சமீப காலத்தில் மக்களைப் பயமுறுத்துவது எய்ட்ஸ் என்னும் நோய். இந்நோயைப் பற்றி மக்கள் மிகவும் பீதியடைந்துள்ளனர் அந்தக்கவலை இந்த நோயோடு சம்பந்தப்பட்டிருக்கும் ஒழுக்கக் கேட்டினால் சமுதாயம் சீரழிகிறதே என்பதினால் ஏற்படுகிற கவலை அல்ல. அதற்குப் போதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லையே என்ற கவலை தான். இந்தக் கொடிய நோய், சுபாவத்துக்கு விரோதமான ஆண்புணர்ச்சி காரணமாக உண்டாகிறது. ஆகவே, அவ்விதமான ஒழுக்கக் கேடுகளைச் செய்யலாகாது என்று கடிந்து புத்தி சொல்லி எச்சரிக்கிறார்களா? என்றால் அப்படிப் பட்ட வார்த்தைகளோ, எச்சரிப்பகளோ கிடையாது. ஆண் புணர்ச்சி கடவுளால் வெறுக்கப்படுகிற காரியம். அது இயற்கைக்கு விரோதமானது என்று கண்டித்து உணர்த்துவதற்குப் பதிலாக அது பால் உறவு கொள்ளுகிற எவருக்கு வேண்டுமானாலும் வரலாம் என்று நியாயப்படுத்துகின்றனர்.

அதே போல, கருக்கலைப்பு ( **Abortion** ). அது பாவமான காரியம் என்ற எண்ணம் மறைந்து கொண்டு வருகிறது. சொல்லப்போனால் அப்படிச் செய்யாமல் இருப்பது தான் சமுதாயத்துக்கு நாம் இழைக்கும் தீங்கு எண்ணத் துவங்கி விட்டனர். அது ஒரு வகையில் சிசு கொலை. அதற்குப் பதிலாக புலன்களை அடக்கி ஆளவும், கருத்தரிக்காமல் இருக்கக் கூடிய தடுப்பு முறைகளைப் பின்பற்றலாம் என்ற உணர்வும் இல்லை. இன்னும் லஞ்சம் அல்லது கையூட்டை எடுத்துக் கொள்வோம். நீங்கள் யாரைக் கேட்டாலும் சரி, அது குற்றம் என்று தயங்காமல் சொல்லுவார்கள். ஆனால், எல்லோருமே அதைச் செய்கிறார்கள். ஒரு பத்து இருவது ஆண்டுகளுக்கு முன்னர் அது தவிர்க்க முடியாத தீமை என்றாவது ஒத்துக்கொண்டார்கள். இன்றைக்கு அது தீமையே அல்ல; காலத்தின் கட்டாயம், தேவைப்படுகிற நடைமுறை என்ற நிலை வந்துவிட்டது. வர, வர லஞ்சத்துக்கு இரசீதே கூடக் கொடுப்பார்கள் போல் இருக்கிறது.

பல நாடுகளில் சன்மார்க்கத்தைப் பற்றிய போதனைகளை பள்ளிச் சிறுவர் சிறுமிகளுக்குப் போதிக்கும் யோக்கியதை யாருக்கும் கிடையாது என்று சிலர் வாதித்துத் திசை திருப்பிவிட்டு விட்டனர், அதன் விளைவு என்ன? ஒழுக்கமின்மை, பிறர் பொருள் மீது இச்சை, பொய் ஆகிய ஜென்ம சுபாவங்கள் கட்டுப்பாடின்றி இளைய சமுதாயத்தில் வளர்ச்சியடைந்துவிட்டன. இப்படிச் சில தலைமுறைகள் சென்ற பிறகு, காலம் கடந்து அவர்களுடைய வாழ்க்கை முறைகளை ஆராய்ந்து பார்த்தபொழுது பயப்படும் அளவுக்கு நிலைமை போய்விட்டது. இப்பொழுது ஒழுக்க நெறிகள் போதிக்கப்பட வேண்டும் என்கின்றனர். அதை அன்று சான்றாண்மையில் அக்கறையுள்ளவர்கள் கூறின பொழுது நிராகரித்தனர். சொல்லப்போனால், பள்ளிகளில் மட்டும் அல்ல; வீடுகளிலேயே தார்மீக, ஒழுக்க நெறிகள் போதிக்கப்பட வேண்டும். ஒருவேளை, படிப்பறிவில்லாத பெற்றோர்கள் உள்ள வீடுகளில் அது சாத்தியம் இல்லாவிட்டால் கூட அது பள்ளிகளில் போதிக்கப்பட வேண்டியது அவசியம்.

உலகம் ஏற்றுக்கொள்ளுகிறதோ இல்லையோ உலகில் நன்மையும் தீமையும் கலந்து கிடக்கிறது. சரி என்பவைகளும் உண்டு; தவறு என்பவைகளும் உண்டு. உண்மையும் உண்டு; எல்லாம் சம அளவிலும் இல்லை. ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் சிறப்பாக இருக்கிறது; ஒன்றுக்கு மற்றொன்றைக் காட்டிலும் அதிக கிராக்கியுமுண்டு அதே போல, மனிதர்களிலும் நல்லவர்கள் கெட்டவர்கள் உண்டு. நீங்கள் யாரை நல்ல குடிமகன் என்று சான்று பகர்வீர்கள்? யார் சிறந்த ஒழுக்க நெறிகளைக்கடைப் பிடிக்கிறார்களோ அவர்களையே நல்லவர்கள் என்பீர்கள். ஏனெனில், சிறந்த நற்பண்புகள் உண்மை பேசுகிறவர்கள், நாட்டின் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறவர்கள், எப்பொழுதுமே நல்லவைகளையே செய்ய நாடுவார்கள்.

யாரை மோசமானவர்கள் என்று கூறுவீர்கள்? பாவம் செய்கிறவர்களை. அப்படியானால், பாவம் என்பது என்ன? எதெல்லாம் தீமை பயக்குமோ, கேடுள்ளதோ அவைகளே பாவங்கள் அநீதி, தேவபக்தியின்மை, ஒழுக்கக்கேடுகள், பொய்கள் யாவும் பாவப் பட்டியலில் உள்ள சில குணாதிசயங்கள். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய யோவான் பாவத்திற்கு இலக்கணம் கூறுகிறார்; பாவம் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் என்று *(1யோவான்3:4)* வேறு ஒரு இடத்தில் பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான். ஏனெனில், பிசாசானவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான்.*(1யோவான்3:8)* என்கிறார். ஆகவே, பாவம் என்பது "குறி தவறிய நிலை" என்றாகிறது. யோவான் மேலும் கூறுகிறார், "அநீதியெல்லாம் பாவம்"*(1யோவான்5:17)* மேலும் கூறுகிறார், "பாவம்



செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான். ஏனெனில், பிசாசானவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான்"*(1யோவான் 3:8)* என்கிறார்.

பொதுவாக, மக்கள் பலரும் பாவத்தைப் பற்றி பேசினாலோ அல்லது நம்முடைய வாழ்க்கையில் எங்கோ தவறு இருக்கிறது என்று கூறினாலோ கூடக் கோபித்துக் கொள்கின்றனர். அவர்கள் மனம் போன போக்கில் உல்லாசமாய் வாழ்வதற்கு, பாவம் பற்றிய போதனைகள் அவர்கள் மனச்சாட்சியை குற்றப்படுத்தும் என்ற எண்ணத்தால் அப்படி வெறுப்படைகின்றனர். கொஞ்ச காலமாகவே, "உனக்கு நல்லது என்று பட்டால் செய்; உனக்கு அப்படி ஒரு ஆசை இருந்தால், நிறைவேற்று" என்ற பாணி மனநிலை வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால், யார் என்ன நினைத்துக் கொண்டு எதைச் செய்தாலும் பாவத்தின் விளைவுகள் மனுக்குலத்தை அழிவுக்கு இழுத்துச் செல்லும் என்பதில் சந்தேகமே வேண்டாம். பால் உறவில் உள்ள கேடுபாடுகள் எய்ட்ஸ் மற்றும் பல கொடிய நோய்களைப் பிறப்பிக்கும் பொய் பேசுவது பலவிதமான துன்பங்களைத் தரும். சட்டத்தை மீறுகிறவன் சிறைத் தண்டனை அடைவான். மது அருந்துவது மூளையைப் பாதிக்கிறது. குடித்து விட்டு போதையில் வண்டி வாகனங்களை ஓட்டுகிறவன் நிலை தடுமாறி தனக்கும் மற்றவர்களுக்கும் அபாயத்தை உண்டாக்குகிறான். புகை பிடிப்பது நுரையீரலைப் பாதித்து புற்றுநோய் போன்ற கொடிய நோய்களுக்கு வித்திடுகின்றன. இருதய நோய்க்கும் காரணமாக இருக்கிறது. இப்படியே ஒவ்வொரு பாவத்தினால் விளையும் தீமைகளையும் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஒருவேளை ஒருமனிதன் தன்னுடைய பண பலத்தினாலும் புத்திசாலித்தனத்தினாலும் இம்மையில் பாவத்தின் விளைவுகளுக்கு தப்பிக் கொண்டாலும், மறுமையில் தேவனுடைய நியாயத்தீர்ப்பில் அவைகளுக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்,*(2கொர் 5 :10 ரோமர் 2:6)* அப்போஸ்தலனாகிய பவுல் பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் *(ரோமர்6:23)* அவரே, கலாத்தியத் திருச்சபைக்கு எழுதின நிருபத்தில் மோசம் போகாதிருங்கள்: தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாமிசத்துக்கென்று விதைக்கிறவன் மாமிசத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான் *(கலா 6:7,8)* என்று எழுதுகிறார்.

ஆக, பாவம் என்பது உண்மை. அது உலகத்தில் இருக்கிறது. அது நமக்குள்ளும் இருக்கிறது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்து, உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மாண்டு, நாம் பாவத்திலிருந்து விடுதலையாவதற்கு உதவினார். இது எப்படி ஆகும்?

முதலாவது, நாம் அவரை விசுவாசிக்கவேண்டும். கிறிஸ்துவே அப்படிச் சொல்லியிருக்கிறார் ........நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் (யோவான்8:24) நாம் விசுவாசித்த பிறகு நம்முடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட வேண்டும். "மனந்திரும்பாமற் போனால் மடிவது திண்ணம்" என்கிறார் இயேசு (லூக் 13:3) மனந்திரும்புதல் என்பது ஒன்றைச் செய்வதிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதோடு நின்று விடுவது மட்டும் அல்ல; போய்க் கொண்டிருக்கிற பாதையை மாற்றி சரியான பாதையில் நடப்பது - அதாவது பாவத்திலிருந்து விடுதலை, பாவம் செய்வதை அறவே விட்டுவிடுவதை வற்புறுத்துகிறது. அதன் பிறகு, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வேண்டும் என்று கூறுகிறது. குயேதஹனவர் சொல்வதைக் கவனியுங்கள் மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்.

மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் (மத் 10:32,33)

இறுதியாக, ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார். அவர் மரணம், அடக்கம் உயிர்த் தெழுதலுக்குப் பிறகு, பரமேறுவதற்கு முன்பாக தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளை நீங்கள் உலகம் எங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும், சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்றார்.(மாற்கு 16:15,16)

பின்னர் பெந்தெகொஸ்தே நாளன்று எருசலேமில் கூடி வந்திருந்த திரளான மக்களுக்கு சுவிசேஷப் பிரகடனம் செய்தார்கள். அதைக் கேட்ட மக்கள் பலபேர், இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, 'நாங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்' என்று கேட்டனர். அதற்கு:நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று பதில் அளிக்கப்பட்டது. (அப் 2:38) மேலும், கீழே, 41-ம் வசனத்தில் அவர்களுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்று கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள், அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். வசனம் 47-ல் இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று கூறுகிறது.



**இப்பொழுது நாம் புரிந்து கொண்டது என்ன?**

1) மனுக்குலம் பாவத்துக்குள் மூழ்கிக் கிடக்கிறது 2) அதனால் மனித வாழ்க்கைக்கு இம்மையில் ஏற்பட்ட இழப்பு ஈடு செய்ய முடியாதது. 3) அதோடு நில்லாமல், மறுமையிலும் நித்திய அழிவைச் சம்பாதித்துக் கொடுக்கக்கூடியது. ஆனால், கிறிஸ்துவானவர் உலகிற்கு இறங்கி வந்து சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டு உலகத்தின் பாவத்தைப் போக்க தம்மை ஒப்புக் கொடுத்தார். இவைகளை எவன் ஒருவன் விசுவாசித்து அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறானோ அப்படிப்பட்டவனை கர்த்தர் இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்கிறார். அதாவது, நம்முடைய பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கிறார். தேவனுடைய பிள்ளையாக கர்த்தருடைய குடும்ப அங்கமாக ஏற்றுக் கொள்கிறார். தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் அவருக்கு உண்மையாக நடந்து கொண்டால் இம்மையிலே மாத்திரமல்ல மறுமையிலும் சதாகாலமும் அவரோடே கூட இருக்கலாம். (வெளி 2 10).

நண்பரே! இவைகளெல்லாம் கற்பனை வளம் நிறைந்த ஒரு மனிதனால் புனையப்பட்ட கதை என்று எண்ணுகிறீரா? இவைகளெல்லாம் நடக்கக் கூடிய காரியமா? ஆம், நண்பர்களே! இது ஒரு கதை தான். ஆனால் உண்மையாக நடந்த கதை. பாவம் உலகத்தில் இருப்பதையும், அது உண்மையென்றும் நாம் காண்கிறோம்.

நமக்கும் நம்முடைய நண்பர்களுக்கும், பாவத்தால் ஏற்படுகிற துன்பங்களை நாம் பார்த்துக் கொண்டும் அனுபவித்துக் கொண்டும் இருக்கப் போகிறோமோ?

அதே போல இயேசு கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்தது உண்மை. அவரை விசுவாசித்து அவருக்குக் கீழ்படிகிறவர்களுக்கு பாவ மன்னிப்பு அளிப்பார் என்பதும் கூட உண்மை. பரலோகமும் உண்மை. கர்த்தருக்கு உண்மையாய் நடக்கிற அனைவரும் ஒரு நாளில் அதைச் சுதந்தித்துக் கொள்வார்கள். அதே போல. நரகம் இருப்பதும் உண்மை பாவவாழ்க்கையில் உழன்று மரிக்கிறவர்கள் அங்கேசென்று வேதனை அடைவார்கள்.

ஆகவே, நீங்கள் இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும். பாவமா, மன்னிப்பா? இரட்சிப்பா, இழப்பா? மோட்சமா, நரகமா? இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் புத்திமான்களாக நீங்கள் இருக்க வேண்டும் என்பதே எங்கள் மன்றாட்டும் ஜெபமும்.

✝

# கிறிஸ்தவ மனைவி

## CHRISTIAN WIFE

P.C. PHILEMONRAJAH

தேவன் தன்னுடைய அநாதி ஞானத்தின்படி மனிதனை, தன்னுடைய தயை மட்டும் அல்லாமல், பூமியில் ஒரு ஏற்ற ஆவிக்குரிய துணையின் தேவையோடும் படைத்தார். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (ஆதி2:24) என்பதாக மனுஷி மனுஷனுக்குக் கொடுக்கப்பட்டாள். துவக்கத்திலிருந்தே ஆணும்-பெண்ணும், கணவன் - மனைவியாக இணைந்து வாழ வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாகும்.

ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொண்டு புதிய குடும்பத்தை துவக்க வேண்டும் என்பதே, சில ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் தேவனுடைய திட்டம். அந்த அமைப்பிற்குள்ளாக ஒவ்வொரு தனிபட்ட குடும்ப அங்கத்தினருக்குமான தேவனுடைய சித்தம் இருக்கிறது. கிறிஸ்தவ மனைவியாக குடும்பத்தில் நம்முடைய பணியைக் குறித்து அக்கறை நமக்கு வேண்டும்.கிறிஸ்தவ பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்? கிறிஸ்தவப் மனைவிக்கான தேவனுடைய செய்தி என்ன?

### கிறிஸ்துவ மனைவி, தன்னுடைய கணவனுக்கு சொந்தமானவள்

*"அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும்'' என்றும், ஒவ்வொருவருடைய விருப்பத்திற்கும் மதிப்பு கொடுக்க வேண்டும் என்றும், பவுல் அப்போஸ்தலர் 1 கொரி 7:1,2ல் கூறுகிறார். மேலும் அவர், மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு ''அதிகாரி என்று கூறுகிறார். அதாவது நீங்கள் உங்கள் கணவனுடையவர்களே! அவர் உங்களுடையவர்! ஆகையால், மனைவியானவள் கணவனுடைய தேவைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.*

### கிறிஸ்துவ மனைவி, தன் திருமணத்தை பொக்கிஷப்படுத்துகிறாள்

*மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்துபோகக் கூடாது" என்று பவுல்,1 கொரி 7 :10- ல் கூறுகிறார். கணவனும் மனைவியும் தாங்கள் ஏற்படுத்திய இந்த குடும்பத்தை உடைத்துப்போடவோ, முறித்துப்போடவே கூடாது. 'தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதருக்ககடவன் " என்று இயேசு கூறினார்.*

*இதை கிறிஸ்தவ மனைவிகள் மனதில் கொள்ள வேண்டும். மேலும் இது ஒரு பரிசுத்த இணைப்பு. இதை சாதாரணமாக நினைக்கலாகாது. இது உதறித்தள்ளவோ, அழித்துப் போடவோ அல்ல; மாறாக, மேம்படுத்தி பொக்கிஷப்படுத்த வேண்டியது.*



### கிறிஸ்துவ மனைவி ஒரு அவிசுவாசியுடன் வாழ்வது

*தங்களை ஒத்த விசுவாசமில்லாத மனிதனுடன் இணைக்கப்பட்ட மனைவி என்ன செய்ய வேண்டும்? கிறஸ்தவ கணவனை உடையவர்களைப் போலவே அவர்கள் செய்ய வேண்டுமா? 1 கொரி 7 : 13-ல் இதைக் குறித்து பவுல் விவரிக்கிறார், ''அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும் அவளுடனே வாசமாயிருக்க அவனுக்கு சம்மதமிருந்தால், அவள் அவனைத் தள்ளிவிடாதிருக்கக்கடவள்.'' விசுவாசமுள்ள துணைவரின் / துணைவியின் மூலம் இந்த இணைப்பையும் தேவன் பரிசுத்தப்படுத்துகிறார்.*

### கிறிஸ்துவ மனைவி தன் செயலின் மூலம் கற்பிக்கிறாள்

*அந்தத் திருமணங்கள் தொடர்ந்து நிலை நிற்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். அதற்கான ஒரு காரணத்தை 1 கொரி 7 : 16-ல் பவுல் கூறுகிறார். மனைவியானளே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ யஸருக்குத் தெரியும்? அழுத்திக் கூறுவதினாலேயல்ல, மாறாக, ஒரு கிறிஸ்தவ மனைவியின் நடக்கையினாலேயே அவிசுவாசமுள்ள தன் கணவனை மாற்ற முடியும். இதையே அப்போஸ்தலனாகிய பேதுரு, 1 பேதுரு 3:1-2ல் முக்கியத்துவப்படுத்துகிறார். "அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்த புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்க கொள்ளப்படுவார்கள்"*

### கிறிஸ்துவ மனைவி தன் கணவனுக்கு பணிவுள்ளவள்

தன் கணவன் எந்தவித நம்பிக்கை உடையவனாக இருந்தாலும், இப்படிப்பட்ட கனமுள்ள, தூய்மையுள்ள நடக்கை கிறிஸ்துவ மனைவியின் வாழ்க்கையில் ஆளுகை செய்ய வேண்டும். அப். பவுல் எபே 5:21,22-ல், ''தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல உங்கள் சொந்த புருஷருக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவினிடத்தில் கொண்டிருக்கிற அன்பும், கனமும், தன் கணவருக்கு கீழ்ப்படிந்தும் மரியாதையும் கொடுக்கக்கூடியவர்களாய் தன்னை வழி நடத்த வேண்டும்.''நாம் அவர்களை விட மதிப்பு குறைந்தவர்கள் என்பதாய் அல்ல, கிறிஸ்து சபைக்கு தலையாய் இருப்பதினால், நாம் அப்படிச் செய்ய வேண்டும். கணவனை தேவன் அதிகாரியாக ஏற்படுத்தியிருக்கிறார். அதை மீற முயற்சிப்பது மனைவிக்குத் தகாது.

## கிறிஸ்துவ மனைவி தன் கணவனுக்கு நம்பிக்கைக்குரியவள்

தன் கணவருக்கு கனத்தை மட்டுமல்ல, மரியாதையுமுள்ள நடக்கை நம்மிடத்தில் காணப்பட வேண்டும் விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததுமாயிருப்பதாக வேசிக்கள்ளரையும், விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று எபி 3:4-ல் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் விரும்புகின்ற உண்மையான மரியாதையை நாம் நம் கணவருக்குத் தருவோமாகில், நாம் நம்பிக்கைக்குப் புறம்பான எந்த காரியத்தையும் செய்வதில்லை. அது தேவனுக்கும் கணவனுக்கும் எதிரான பாவம். இப்படிபட்ட தவறான நடக்கையிலிருந்து ஒரு கிறிஸ்தவ நடக்கையிலிருந்து ஒரு கிறிஸ்தவ மனைவி தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

## நல்ல மனைவி என்றால் என்ன?

சாலமோன் ராஜா, நல்ல மனைவியின் குணாதியசயங்களை நீதிமொழியில் விவரிக்கிறார். “அவள் உடை பலமும் அலங்காரமு -மாயிருக்கிறது. வருங்காலத்தைப் பற்றியும் மகிழ்கிறாள். தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள். தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்கிறது. அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல் தன் வீட்டுக் காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி அவளை பாக்கியவதி என்கிறார்கள். அவள் புருஷனும் அவளைப் பார்த்து அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருத்ததுண்டு. நீயோ அவர்கள் எல்லோருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறாள். சௌந்தரியம் வஞ்சனையுள்ளது. அழகும் வீண் கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்”. மரியாதை பணிவு நம்பிக்கைக்கு பாத்திரம். கணவனுக்கும் தேவனுக்கும் கீழ்ப்படிதல் இதைத்தான் தேவன் கிறிஸ்தவ மனைவியிடம் எதிர்பார்க்கிறார்.

**ஊழிய சிந்தை வீட்டிலிருந்து தான் ஆரம்பமாகிறது** †

**சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள். ஆகையால்....**
**உங்களுக்கும் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்.**
**[அப்.8:4 ;ரோமர்1:15]**



# சந்தேகப்படுகிறவன்
## *He who doubts*
*B.Arjunan*

சந்தேகம் என்பது மிகவும் மோசமான ஒன்று. இது எந்த ஒரு மனிதனுக்குள்ளும் ஏற்படக்கூடாது. ஏனெனில், விசுவாசமே கிறிஸ்துவத்தின் அடித்தளமாக இருக்கிறது. சந்தேகப்படுகிறவர்கள் யாரும் கிறிஸ்துவத்தில் இருக்கிமுடியாது. அப்படி சந்தேகப்படுகிறவர்களாயிருந்தால் அவர்களுடைய எண்ணங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். கர்த்தரிடத்திலிருந்து எதையாகிலும் பெறலாமென்று அவரை நோக்கி; விண்ணப்பம் பண்ணுகிறவன் விசுவாசத்தோட கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான் என்கிறார். (யாக் 1:6). ஒருவேளை கர்த்தரை நோக்கி பலமுறை விண்ணப்பம்பண்ணியும் பெற்றுக் கொள்ளாதவர்களாக அநேகர் இருக்கலாம், அவர்கள் எல்லாம் அவிசுவாசிகள் அல்ல. தேவன் ஏதோ ஒருநோக்கத்தோடு அவர்கள் கேட்டவைகளை அவர்களுக்குக் கொடுக்காமலிருக்கலாம். தேவன் தம்முடிடைய திருசித்தத்தின்படி ஒவ்வொருவரையும் நடத்திவருகிறார். இதை அறிந்தவர்கள் விசுவாசத்தோடே ஆபிரகாமைப்போல யேகோவாயீரே என்று சொல்லுவார்கள். ஈசாக்கு தன் தகப்பனை நோக்கி; தகப்பனே தகனபலிக்கு வேண்டிய ஆட்டுக்குட்டி எங்கே என்று கேட்டபோது அவன் என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்ளுவார் என்றான். அந்தப்படியாக ஒரு ஆட்டுக்கடா புதரிலே தன் கொம்புகள் சிக்கிக் கொண்டிருக்கிறதைக்கண்டு அதை தன் குமாரனுக்குப் பதிலாக தகன பலியாக அந்த ஆட்டுக்கடாவை பலியிட்டான். இது ஆபிரகாமுடைய ஆழமான விசுவாசத்தை வெளிப்படுத்துகிறான். அதைப்போல இன்னும் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறவர்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துகிறதாக அது இருக்கலாம். சில காரியங்களை பெற்றுக் கொள்ளாதிருக்கிற ஒரு சகோதரனையோ, ஒரு சகோதரியையோ பார்த்து உங்களுக்கு விசுவாசமில்லை நீங்கள் ஒரு சந்தேகப்பேர்வழி என்று நாம் மனதிற்கு வந்தபடியெல்லம் பேசிவிட முடியாது. அவன் நின்றாலும் விழுந்தாலும் தேவன் ஒருவருக்கே கணக்கு கொடுக்கவேண்டும். தேவன் அவர்களை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறார்.

இயேசு சொல்கிறார்: என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்கிறார் (யோவா. 14:14). எப்படிப்பட்ட நம்பிக்கையூட்டும் வசனமென்று பாருங்கள். என் நாமத்தினாலே நீங்கள் எதைகக் கேட்டாலும் என்று சொல்லுகிறார். கேட்கிற உங்களுக்கும், எனக்கும் நம்பிக்கை அவசியம். நான் சிலவேளைகளில் சபையில் பிரசங்கிக்கும்போது சொல்வதுண்டு; தேவனுடைய ஆசீர்வாதமான கரம் கடல் போன்றது.

அதில் ஒரு குடம் தண்ணீர்வேண்டும் ஆண்டவரே என்று கேட்கும்போது ஆண்டவர் ஐயோ கடல் நீர் குறைந்துபோய்விடும் என்று சொல்வரா என்ன? எவ்வளவு வேண்டுமானலும் மொண்டு கொள்ளுங்கள் என்பார் அல்லவா! நம்மிடத்தில் மொண்டு வைப்பதற்கு பாத்திரம் வேண்டும் ஆது உங்களிடம் இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளுங்கள். கர்த்தர் ஐசுவரிய சம்பண்னர். ஆகையால் நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்கிறார். அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணின ஒருவரும் பெற்றுக்கொள்ளாமலில்லை. எல்லோருமே பெற்றுக் கொண்டார்கள். சந்தேகப்படுகிறவர்களைத் தவிர. ஒருமுறை குஷ்டரோகி ஒருவன் அவரைப் பணிந்து, ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக உம்மால் ஆகும் என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகியின் நீங்கி அவன் சுத்தமானான் (மத். *8:2,3*). இந்த குஷ்டரோகியின் வேண்டுதல் உடனே கேட்கப்பட்டு அது நிறைவேற்றப்பட்டது. அநேகர் கண்களுக்கு முன்பாகவே இது நடந்தது. அவனுக்கு எந்தவிதமான வைத்தியமும் இயேசு செய்யவில்லை. இயேசுவை அவன் கேட்டுக்கொண்டபோது குஷ்டரோகியாக இருந்தான். ஆனால் அவனுடைய இருதயத்தில் குஷ்டமில்லை. இயேசுவினால் தம்மை சுத்தமாக்கமுடியும் என்ற நம்பிக்கை அவனுள்ளிருந்தது. எனவே, இயேசு அவனுடைய விசுவாசத்தை அறிந்து எனக்குச் சித்தமுண்டு நீ சுத்தமாகு என்று தன்னுடைய கைகளை நீட்டி அவனைத் தொட்டார். அநேகர் இயேசுவின் வஸ்திரத்தைத்தொட்டு சுகமாக்கப்பட்டார்கள்; இந்த குஷ்டரோகியோ பெருத்த ஆசீர்வாதத்திற்கு சொந்தக்காரன். ஆண்டவர் அவனுடைய சாரீரத்தைத் தொட்டு அவனை சுகமாக்கினார். பொதுவாக யூதர்கள் குஷ்டரோகிகளை விலக்கி வைத்தார்கள். ஏனெனில் அவர்களுடைய குஷ்டம் நம்மையும் தாக்கிவிடும் என்ற பயத்தால். பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கிறபடி குஷ்டரோகிகள் ஜனங்களைப் பார்க்கும்போது ஐயோ தீட்டு என்று சொல்லவேண்டும். இதினாலே ஜனங்கள் அவர்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். மேலும், அவர்கள் பாளையத்திற்கு புறம்பாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஒரு குஷ்டரோகியை இயேசு தொட்டு அவனை சுகமாக்கினார். அவருடைய சரீரத்தின் வல்லமை எத்தகையது என்று பார்த்தீர்களா!

அன்பானவர்களே, உலகத்தில் உள்ளவற்றைப் பார்க்கும்போது நமக்குள் விசுவாசம் வளரவேண்டும் தவிர சந்தேகம் வரக்கூடாது. நீங்கள் சந்தேகப்படுகிற அளவு உங்களால் உண்டாக்கப்பட்ட ஏதாவது ஒன்று உண்டோ? உங்களால் இதற்கு பதில் சொல்ல முடியாது. சந்தேகம் என்பது பிசாசின் செயல்பாடுகளில் ஒன்று. அதை முதலாவது நீக்கிப்போடுங்கள் . இயேசு சிலுவையில் தொங்கியபோது அவரோடு இரண்டு கள்வர்கள் சிலுவையில் அறையப்பட்டார்கள். அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்; நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான் (லூக். *23:39*). மற்றவனோ நீ உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். ஆகையால் இவன் இயேசுவோடு பரதீசுக்கு எடுத்துக்



கொள்ளப்பட்டான். இயேசுவை இகழ்ந்தவனோ கைவிடப்பட்டான். இயேசுவை இகழ்ந்தவன் சந்தேகப்படுகிறவனாக அவரை நோக்கி; நீ கிறிஸ்துவானால் அவர்தான் கிறிஸ்து என்ற நம்பிக்கை அவனுக்குள் இல்லை. மற்றவனோ நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா என்று சிலுவையில் தொங்கிக்கொண்டு சந்தேகப்படுகிற கள்ளனை நோக்கி போதனை செய்வதைப் பார்க்கிறோம். அன்பானவர்களே, கர்த்தர் நம்முடைய இருதயத்தை அறிகிறவர். ஆகையால் இயேசு அந்தக் கள்ளனுடைய இருதயத்தை அறிந்து அவனை கைவிட்டார். ஒருவனே இரட்சிக்கப்பட்டான்.

சந்தேகப்படுகிறவன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக என யாக்கோபு *1:7*-ல் படித்தோம். கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவருடைய கை குறுகிப்போகவில்லை. கேட்கிறவர்கள் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கவேண்டுமென விரும்புகிறார். ஆண்டவர் இயேசு ஒருமுறை கடலில் நடந்து சீஷர்களிடம் வந்தபோது சீஷர்கள் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது பேதுருவுக்கு இயேசுவைப்போல கடலின் மேல் நடக்க ஆசை வந்தது. பேதுரு அவரை நோக்கி; ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான் (மத். *14:28*). கர்த்தர் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றும்படியாக நடந்து வரும்படி சொன்னார். அப்பொழுது காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து அமிழ்ந்துபோகையில்; ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து; அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார் (மத். *14:30,31*). பேதுருவின் விருப்பம் நன்றாயிருந்தது. ஆனால் காற்றையும் கடலையும் கண்டு பயந்து, தன்னோடிருக்கிற இயேசுவை மறந்தான். பயம் வந்தபடியால் அவனுக்குள் சந்தேகம் வந்தது, அதனால் கடலில் மூழ்க ஆரம்பித்தான். அப்பொழுது ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். நாம் சிலவேளைகளில் இவ்விதமாக சந்தேகப்பட்டு மூழ்குகிற நேரத்தில் ஆண்டவரை நோக்கி; கதறுகிறோம். ஆனால் அதற்கு முன்பாக அவர் சொன்னபடியாக நாம் நடந்து கொள்ளுகிறோமா என்பதை சிந்திப்பதில்லை. பேதுவுருக்கு கடலின்மேல் நடக்க ஆசை நல்லதுதான். ஆனால், அவன் செய்யவேண்டிய காரியம் என்ன? அவருடைய வார்த்தையின்படி படவை விட்டு கடலில் இறங்கி கடலின்மேல் நடந்து அவரிடம் செல்லவேண்டும். அவனோ படவை விட்டு கடலில் இறங்கும்போது உள்ளே மூழ்கிடுவோமோ காற்றுவேறு பலமாக இருக்கிறதே இப்படி அநேக சந்தேகங்கள் அவனுடைய இருதயத்திற்குள் முளைக்க ஆரம்பித்தது. இந்த விதமான சந்தேகங்கள் விசுவாசத்திற்கு எதிரானவைகள். நம்முடைய நம்பிக்கையை கரைத்துவிடும். பேதுருவின் நம்பிக்கை ஆண்டவர் இருக்கும் அந்தநேரத்திலே பறிபோனது. ஆகையால் கர்த்தர் அவனை நோக்கி அற்பவிசுவாசியே என்றார். உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? இப்படி சந்தேகப்படுகிற நினைவுகள் உங்களில் இருக்குமானால் நீங்கள் கர்த்தரிடத்திலிருந்து ஒன்றையும் பெற்றுக்கொள்ள முடியாது. ஆகையால் சந்தேகத்திற்கு ஒரு குட்பை சொல்லுங்கள் ✝

# ஒத்திவைக்கலாமா?

## Shall we procrastinate

Bro. Benny Martin

பிரியமான சத்தியத்தின் குரல் வாசகர்களே! நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். உங்கள் யாவருரையும் மீண்டுமாக இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அருமையானவர்களே! நம்முடைய வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நாம் செய்ய வேண்டிய காரியங்களை நாளை, நாளை என்று ஒத்தி வைக்கிறோம். பிறகு, நாளை என்பது நமக்குக் கிடைக்காமலேயே போய் அந்த காரியங்களை நாம் செய்யாமலேயே நேரத்தைக் களைந்து விடுகிறோம். அல்லது வருடங்கள் உருண்டோடி விடுகின்றன. இப்படியாக, நாம் செய்ய நினைத்த காரியங்களை ஒத்தி வைப்பதினால் பின்பு வாய்ப்பு கிடைக்காமலே போய் நம் வாழ்க்கையில் கை நழுவிப்போன காரியங்கள் பலபல. அன்பானவர்களே! நாளை என்பது நம்முடைய கைகளில் இல்லை. காலங்களை தம் கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கும் தேவனுடைய கைகளில் தான் இருக்கிறது. (யாக்கோபு 4:14) எனவே தான், நாம் காலத்தின் அருமையை உணர்ந்தவர்களாக அதை பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று தேவனால் எச்சரிக்கப்படுகிறோம் ( எபேசியர் 5 : 16 ). சிலரைப் பற்றி நாம் பார்க்கும் போது இவ்வுலகத்திற்குரிய வேலைகளை ஒத்திவைக்காமல் சரியான நேரத்தில் செய்து முடிப்பார்கள். ஆனால் ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும் போது ஒத்தி வைப்பில் ஈடுபடுவதை நாம் பார்க்கிறோம்.

இப்படிப்பட்டவர்களுக்கு ஆவிக்குரிய சிந்தை என்பது துளிகூட இருக்காது. மாறாக, மாம்ச சிந்தையால் நிரப்பப்பட்டவர்களாய் இருப்பார்கள். ஆனால், ஒத்தி வைப்பில் உள்ள மிகப்பெரிய வித்தியாசம் என்னவென்றால், நாம் உலகத்திற்குரிய காரியங்களை ஒத்தி வைப்பதினால் தற்காலிகமாக நமக்கு இழப்பு ஏற்படும். ஆனால், ஆவிக்குரிய காரியங்களில் நாம் ஒத்திவைப்பில் ஈடுபட்டால் அது நமக்கு நித்திய பாதிப்பை ஏற்படுத்தும்,அதற்காக நாம் மிகப்பெரிய விலையை கொடுக்க வேண்டியதாயிருக்கும்.வேதாகமத்தில் இதற்கு மிகச் சிறந்த உதாரணம் தேசாதிபதியாக இருந்த பேலிக்ஸ் என்பவன் தான். ஒரு நாள் அவன் தன் மனைவியாகிய துருசில்லாளுடனே வந்து. "பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக்கேட்டான். பவுல் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து; இப்போது நீ போகலாம், எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன் என்றான்" (அப்.24:24,25) வேறுவிதமாகச் சொன்னால் பேலிக்ஸ் மனந்திரும்பி தேவனுடைய காரியங்களில் ஈடுபட வாய்ப்பு வந்த போது அதை ஒத்திவைத்தான். அதற்குப் பின்பு மறுபடியும் அந்த வாய்ப்பு அவனுக்கு வரவே இல்லை. அதன்பிறகு சில காலத்திற்குள்ளையே அவன் சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டான். இது நமக்கு கர்த்தருடைய காரியங்களில் ஒத்திவைப்பு கூடாது என்பதை படிப்பிக்கிறது. இப்போது நம் ஒத்திவைப்பு, கிறிஸ்தவ வாழ்க்கையில் எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று பார்ப்போம்.



## ஒத்திவைத்தல் பிசாவின் மாபெரும் ஆயுதமாகும்

தேவன் மோசேயை தம்முடைய ஜனங்களை வழிநடத்தும் படி அழைத்த போது, அவர் பல சாக்குப்போக்குகளைச் சோல்லி தப்பித்துக் கொள்ள முயற்சித்தார். தேவன் அவைகளை ஏற்றுக்கொள்ளாமல் தம் ஜனங்களை வழிநடந்த வைத்தார் என்பதை நாம் அறிந்திருந்தாலும், இதை நாம் அப்படியே சபையில் பொருத்திப் பார்க்க முடியும்.சபையில் சுவிசேஷத்தை பிறருக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அங்கத்தினர்கள் அப்படிச் செய்யாமலிருப்பதற்குச் சொல்லும் சாக்குபோக்குகள் ஒத்திவைக்கும் செயல்களாகத் தான் இருக்கின்றன. சாத்தான் ஒத்திவைத்தலை தன் ஆயுதமாக எடுத்துப் பயன்படுத்தி நம் ஆவிக்குரிய வாழவில் பெருத்த சேதத்தை ஏற்படுத்தி விடுகிறான். அவன் சிறியோர் முதல் பெரியோர் வரை அதாவது நம் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஒத்திவைத்தலைப் புகுத்தி விடுகிறான்.

உதாரணமாக :12 வயது சிறுவன் கர்த்தருடைய காரியங்களில் ஈடுபடாமலிருக்க அதை ஒத்திவைக்க "நான் தேவனைப் பற்றி சிந்திக்க மிகவும் சிறியவனாயிருக்கிறேன்" என்பான். 25 வயது வாலிபன் "என் வாழ்க்கை உலகப்பிரகாரமான காரியங்களில் பரபரப்பாக இருக்கிறபடியால் தேவனைப் பற்றி சிந்திக்க எனக்கு நேரமில்லை" என்பான்.

இப்படி எல்லா வயதினரும் தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபடாமலிருக்க அவர்கள் மத்தியில் சாத்தான் ஒத்தி வைத்தலைப் புகுத்தி விடுகிறான். பிரியமானவர்களே! சிலர் இப்பூமிக்குரிய வாழ்க்கை சம்மந்தமான காரியங்கள் என்று வரும்போது அதை உதாரணமாக, வேலைக்கு சரியான நேரத்தில் செல்வார்கள், பிள்ளைகளை சரியான நேரத்துக்கு அனுப்புவார்கள், குடும்ப நிகழ்ச்சிகளில் ஒன்றை கூட விட்டுவிடாமல் எல்லாவற்றிலும் பங்கேற்பார்கள் ஆனால், ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும் போது அதை இப்போதே செய்யாவிட்டால் என்ன? நாளை நாளை ஒத்திவைப்பில் ஈடுபட்டு கடைசிவரை அதைச் செய்து முடிக்காமலேயே காலத்தைக் கழித்து விடுகிறார்கள்.

## ஒத்திவைத்தலை மேற்கொள்ள ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபட வேண்டும்

அன்பானவர்களே! தேவனுடைய காரியங்களை நாம் ஒத்திவைத்து பிறகு செய்யலாம் என்று நினைத்து செய்ய முடியாமல் போவதால் இவ்வுலகத்திலும் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டிய -தாயிருக்கிறது. அதைவிட மேலாக வரவிருக்கும் உலகில் நாம் நித்திய ஜீவனை இழந்து போவோம். அது நமக்கு எவ்வளவு பெரிய பாதிப்பு! எவ்வளவு பெரிய இழப்பு! சரி, இதிலிருந்து நாம் எப்படி விடுபட முடியும்? நிச்சயமாக, வழி உண்டு. நாம் ஆவிக்குரிய சிந்தையுடையவர்களாயிருந்து, ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபட வேண்டும். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தனையோ ஜீவனும் சமாதானமுமாம் என்று ( ரோமம் 8:6)-ல் நாம் வாசிக்கிறோம். இப்படி ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடுவதைத் தான் ஆவிக்குரிய உடற்பயிற்சி என்று சொல்கிறோம். இந்த உடற்பயிற்சியில் ஈடுபட நமக்கு நல்ல ஆவிக்குரிய போஷாக்கு அவசியப்படுகிறது. அனுதினமும் நாம் பல்வேறுப்பட்ட முடிவுகளை எடுக்கிறோம். அப்படி முடிவெடுப்பதில் நம்மை வழிநடத்த தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய போஷாக்கு நமக்கு அவசியமாகிறது. அதைபோல் நாம் அனுதினமும் பலவிதமான சவால்களை, சோதனைகளை எதிர்கொள்கிறோம். அவைகளுக்கு எதிராக எதிர்நிச்சல் போட நாம் பெலனற்றுப் போகும் போது உலகத்தாரிடம் திரும்புகின்றோம். அவர்கள் நம்மிடம் இருக்கின்ற கொஞ்ச பெலனும் அற்றுப் போகிற அளவுக்குச் செய்து விடுகிறார்கள். இவ்வுலகத்தின் தத்துவ ஞானங்கள், பொன்மொழிகள் போன்றவைகள் எவ்விதத்திலும் நமக்கு ஆறுதலைத் தரவே தராது. மாசும், கலப்படமும் நிறைந்த இவ்வுலகில் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிற தேவனுடைய வார்த்தை மட்டுமே மாசற்ற, கலப்படமற்ற ஒன்றாக இருக்கிறது. அவைகளை நாம் ஏராளமாக, தாராளமாக உட்கொள்ளும் போது அது கசப்பான நம் வாழ்வை தேவனுக்குப் பிரியமாக அதை அப்பியாசப் -படுத்தவில்லையென்றால், அது நம் ஆவிக்குரிய வாழ்வில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

பிரியமான வாசகர்களே! நம் வாழ்க்கை கொஞ்சக்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறபடியால் ( யாக்கோபு 4:14) வாழ்கின்ற கொஞ்ச நாட்களில் தேவனுக்குப் பிரியமாக வாழ்ந்து, தேவனுடைய அளவற்ற ஆசீர்வாதங்களைப் பெற்று மகிழ்வோம். நாம் தேவனுடைய காரியங்களை ஒத்தி வைத்துவிடுவார். எனவே, ஒத்தி வைத்தல் என்னும் பாவத்தில் விழுந்துவிடாதபடிக்கு நம்மை நாம் காத்துக்கொள்வோம். †






# தேவனுடைய பராமரிப்பு

## THE PROVIDENCE OF GOD

**Dalton Key**

கடந்த பல நூற்றாண்டுகளாக தேவன் நமக்குச் செய்திருக்கிறவைகளை நாம் திரும்பிப் பார்ப்போம். நாம் அப்படிச் செய்வது நல்லது அல்லது பொருத்தமானது. இவ்வுலகத்தைத் தேவன் உண்டாக்கினார், கிறிஸ்துவின் மூலமாக நமக்கு இரட்சிப்பை நல்கி, சபையை ஸ்தாபித்தார். தேவனுடைய கடந்தகால வல்லமையுள்ள இந்தக் கிரியைகளுக்காக நாம் நன்றியுள்ளவர்களாயிறுக்கவேண்டும். இருந்த போதிலும், இப்போதும் தேவன் மனிதனுடைய விவகாரங்களில் அக்கறைகொண்டு இடைப்படுகிறார் என்பதை நாம் அறியாமல் இருக்க வேணடாம்..... உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்ஜியத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுக்கிறார் (தானியேல் 4:17).



நிச்சயமாகவே, நாம் தவிர்க்க வேண்டிய மிதமிஞ்சிய நிலைகள் உண்டு. மிதமிஞ்சிய நிலையின் அபாயங்கள் வேதபாடத்தின் எல்லா நிலைகளிலும் காணப்படுகிறபடியால், தேவனுடைய பராமரிப்பு சம்பந்தமான காரியத்திலும் அது விதிவிலக்காயிருக்க முடியாது. தேவன் அற்புத அடையாளங்கடைள நடப்பிக்காமலே அல்லது மனிதனுடைய தெரிந்தெடுக்கும் உரிமையை சூக்கிப்போடம்லோ மனித விவகாரங்களில் ஊக்கமாகக் அதைக்குறித்து வேதம் என்ன சொல்லுகிறது? (கலாத்தியர் 4:30). தேவன் நமக்கு அடைக்கலமும் பெல னும் ஆபத்துக்காலத்தில் அனுகூல மான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும் மலைகள் நடுச் சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும் (சங் கீதம் 46:1,2)

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப்பயப்படேன்; தேவரீர் என்னோதே கூட இருக்கிறீர் (சங்கீதம் *23:4*). நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே நான் உன் தேவன் நான் உன்னை பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் (ஏசாயா *41:10*). ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகள் விற்கிறார்கள் அல்லவா? ஆயினும்உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால் பயப்படாதிருங்கள்; அநேக அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷத்தவர்களாயிருக்கிறீர்கள் (மத்தேயு *10:29-31*). இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலுள் நாள் உங்களுடனேகூட இருக்கிறேன் (மத்தேயு *28:20*) அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் *8:28*). நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லாமே(எபிரேயர் *13:5,6*) என்றெல்லாம் வேதத்தில் நலம் வாசிக்கிறோம்.

மேற்சொல்லப்பட்ட வாக்குத்தத்தங்களெல்லாம் எப்படி நிறைவேற்றப்படும் என்பதை நம்மால் ஒருபோதும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் அவைகளின் துல்லியத்தை நாம் நிச்சயித்துக்கொள்ள முடியும் (எபிரெயர் *10:23*). தேவனுடைய பராமரிப்பின் மீது நமக்கிருக்கும் நம்பிக்கையும், விசுவாசமும் ஒவ்வொரு முறையும் நாம் தேவனிடத்தில் ஏறெடுக்கும் விண்ணப்பத்தில் வெளிப்படுகிறது. அதிலும் குறிப்பாக எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும், எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும் மத்தேயு *6:11,13*) போன்ற வசனங்களில் வெளிப் படுகிறது. தேவனுடைய பராமரிப்பில் நமக்கு நம்பிக்கை இல்லையென்றால் இப்படிப்பட்ட விண்ணப்பங்களெல்லாம் வெறும் பாசாங்காகத்தான் இருக்கும். தேவன் இப்படிப்பட்ட ஜெபங்களுக்கு பதிலளித்தால் மட்டுமேநீதிமான் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்கோபு *5:16*) இதை யார் தான் மறுக்க முடியும்? ✝



தேவன்

# பராமரிப்பு

**PROVIDENCE**

**Kevin Rhodes**

வேதாகமத்தில் புரிந்துகொள்வதற்குக் கடினமான கருத்துக்களில் ஒன்று பராமரிப்பு. இருந்த போதிலும், எவ்வித சந்தேகமுமின்றி அது போதிக்கப்படுகிறது. யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பை அடிமைத்தனத்திற்கு விற்றுப்போட்டபோது, தங்களுக்குத் தொந்தரவாக இருந்தவனை விற்றதினால் கொஞ்சம் பணம் கிடைத்ததைத் தவிர வேறு எதுவும் அவர்கள் மனதில் இல்லை. யோசேப்பு அச்சூழ்நிலைலை நேர்த்தியாகக் கையாண்டு, போர்த்திபார்ன் வீட்டில் வேலை செய்து, சிறைச்சாலையிலிருந்து, முக்கியமான கட்டத்தில் எழும்பி அதாவது ராஜாவின் சொப்பனத்திற்கு அர்த்தத்தைச் சொல்லி. இராஜ்ஜி யத்தில் இரண்டாவது இடத்திற்கு உயர்த்தப்பட்டார். யோசேப்பு தன் சகோதரர்களால் விற்கப்பட்ட போது, வருங்காலத்தில் ஏற்படப்போகும் பஞ்சகாலத்தில் தன் தகப்பன் வீட்டாரை இரட்சிப்பதைக் குறித்த பெரியதிட்டம் எதுவும் அவர் மனதில் இல்லை.

ஆயினும், இவைகளெல்லாம் நடந்தபிறகு, யோசேப்பு அந்தச் சம்பவங்களை திரும்பிப் பார்த்தபோது, தன் சகோதரர்களைப் பார்த்து இவ்விதமாகச் சொன்னார்; என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சனை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார் (ஆதியாகமம் *45:5*) இங்கே யோசேப்பு தன் சகோதரர்கள் செய்த தவறை மன்னிக்கும் பொருளில் பேசவில்லை, மாறாக நடந்த சம்பவங்களெல்லாம் கடைசியில் நன்மைக்கேதுவாக முடிந்தபடியால் (ஒரு கட்டத்தில் எந்த நன்மையும் ஏற்படாது என்ற நிலை இருந்தது)

தேவனுடைய பராமரிப்பு இயற்கையோடு இடைபடுவதில்லை. ஆனால் அந்த இயற்கை கொண்டு தேவன் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுகிறவராயிருக்கிறார். நமக்கு நடக்கின்ற ஏதோ ஒன்று தேவனு டைய பராமரிப்பு என்பதை நாம் நிச்சயமாக அறிந்திராவிட்டாலும் கூட, அது நடந்து முடிந்த பிறகு, நாம் அதைப் புரிந்துகொண்டாலும் கூட, நடந்த காரியங்களையே நாம் நினைத்துக்கொண்டிராமல், அதிலிருந்து நமக்கு ஏற்பட்ட நன்மைகளை நாம் திரும்பிப்பார்க்க வேண்டும். இதுதான் தேவனுடைய பரம ஈவான பராமரிப்பு. ✝

# கிறிஸ்துவை மையமாகக் கொண்ட மார்க்கம்

## A CHIRST - CENTERED RELIGION

Kerry Holton

இயேசு கிறிஸ்து நம் மார்க் கத்தின் மையமாக இருக்கிறார். அவரே மையப்புள்ளியாக இருக்கிறார். அவர் அப்படித்தான் இருக்க வேண்டும். ஆதி சபையில் அவர் எப்படி மையமாகத் திகழ்ந்தார் என்பதைக் கவனியுங்கள்.

### இயேசுவே செய்தியாக இருந்தார்

ஸ்தேவான் இரத்தசாட்சியாக மரித்தபிறகு, கிறிஸ்தவர்கள் சிதறப்பட்ட போது. அவர்கள் அந்தியோகியாவுக்குப் போனார்கள். அவர்கள் அங்கேபோய், கர்த்தராகிய இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தார்கள் (அப்.11:20) அப்போஸ்தலனாகிய பவுல் சிலுவையிலறைப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கித்தார் (Iகொரி.1:23). அவர்கள், கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை உள்ளட க்கிய சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். அதேபோல், இயேசு நம் பிரசங்கத்தின் மையப் பொருளாகவும் நம் நற்செய்தியின் மையக் கருத்தாகவும் இருக்கவேண்டும்.

### இயேசுவினிடத்திற்குத்தான் ஜனங்கள் திரும்பினார்கள்

அந்தியோகியாவிலே ஆண்டவராகிய இயேசுவை குறித்துக் கேள்விப்பட்டவர்கள் விசுவாசித்து அவர்களிடத்தில் திரும்பினார். (அப்.11:21). அப்போஸ்தலனாகிய பவுல். (தெச.1:9) சில வேளைகளில் ஒருவர் மற்றொருவரிடம் சபையின் அங்கதினராக எப்போது ஆனீர்கள் என்று கேட்கலாம். உண்மையாகவே, நாம் கிறிஸ்தவர்களாகும்போது கர்த்தருடைய சபையின் அங்கமாகிறோம் (அப். 2:47). ஆதலால், நீங்கள் எப்போது கர்த்தரிடமாகத் திரும்பினீர்கள் என்று கேட்பது சாலச் சிறந்ததாகும். ஒருவர் கிறிஸ்தவராகும் போது, இயேசுவோடு தன் உறவை ஏற்படுத்துகிறார். அவரிட த்தில் தான் நாம் திரும்ப வேண்டும்.

### கிறிஸ்துவினிடத்தில் நம் உண்மைத் தன்மையைக் காட்டவேண்டும்.

பர்னபா அந்தியோகியாவிலே புதிய கிறிஸ்தவர்கள் கர்த்தரிடத்தில் மனநிர்ணயாமாய் நிலைத்திருக்கும் படி புத்திசொன்னான். (அப். 11:23). ஒரு கிறிஸ்தவனுடைய உண்மைத் தன்மை கிறிஸ்துவினிடத்தில் உறுதி செய்யப்படுகிறது. நாம் சுற்றிச்சுற்றி வரும் ஜெயக்கொடி அவர்தான்.



நாம் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவர்களா யிருக்கிறபடியால் ஆரோக்கியமான உபதேசத்துக்கும், தேவனுடைய ஜனங்களுக்கும் நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கிறோம். நாம் சத்தியத்திற்கும், சபைக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கிறோம். நாம் சத்தியத்திற்கும், சபைக்கும் உண்மையில்லாதவர்களாக இருந்தால்,நாம் கிறிஸ்துவுக்கும் உண்மையில்லா தவர்களாக இருக்கிறோம்.

### இயேசுவினிடத்தில் பாவிகள் தான் கொண்டு வரப்பட்டார்கள்

அந்தியோகியாவில், அநேக ஜனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் என்று லூக்கா ஆசிரியர் சொல்லுகிறார். (அப்.11:24) வருத்தப்பட்டுப்பாரஞ் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும்என்னிடத்தில் வாருங்கள் என்று இயேசு சொன்னார் (மத்தேயு 11:28

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நம் செய்தியின் மையமாகவும், மார்க்கத்தின் மையமாகவும் வைக்கவேண்டும். ஒரு மனிதன் கிறிஸ்தவத்திலிருந்து கிறிஸ்துவை எடுத்துப்போட்டால், என்ன மீத மிருக்கும்? கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருராத எந்த ஒரு மார்க்கமும் மார்க்கமே அல்ல.

அதற்கு இயேசு : நானே வழியும், சத்தயமும், ஜீவனுமா -யிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் -வரான் (யோவான் 14:6) என்றார்.

**நாம் செவி கொடுக்கிறோமா?** †

### கேளுங்கள்

கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தது; அதற்கு ஆழமான மண்ணில்லாததினாலே சீக்கிரத்தில் முளைத்தது; வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்துபோயிற்று. சிலவிதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து, அது பலன் கொடாதபடி, அதை நெருக்கிப் போட்டது. சிலவிதை நல்ல நிலத்தில் விழுந்தது, ஓங்கி வளருகிற பயிராகி ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும். ஒன்று நூறுமாகப் பலன் தந்தது. கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.... விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்(மாற்கு.4:3-9,14).

# நீங்கள் பரிசுத்த ஆவியானவருக்குச் செவிகொடுக்கிறீர்களா?

## *ARE YOU LISTENING TO THE HOLY SPIRIT?*

*Kevin L. Moore*



கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் பத்து நூற்றாண்டுகளுக்கு முன்பாக சங்கீதம் 95, தாவீது ராஜாவால் பாடப்பட்டது. இந்த சங்கீதம் யெகோவா தேவனை மகிழ்ச்சியுடனும், துதிகளுடனும் ஆராதித்து அவரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சித்தத்திற்குப் பணிந்து ஒப்புக்கொடுப்பதற்கான ஒரு வேண்டுகோளாக இருக்கிறது. இது கடந்த கால இஸ்ரவேலர்களுடைய கீழ்ப்படியாமையின் காரணமாக எழுதிப் பாடப்பட்ட எச்சரிப்பின் சங்கீதமாகும். இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீங்களாகில் வளர்ந்திருந்தில் கோபம் மூட்டின போதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து என்னைப்பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள். நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து அவர்கள் வழுவிப் போகிற இருதயமுள்ள ஜனமென்றும் என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன் (வசனங்கள் *7-11)*

இந்தப் பழங்கால இஸ்ரவேலர்கள் யெகோவாவின் வழிகளை ஏன் அறியாதிருந்தார்கள்? அவர்களுக்கு தெய்வீக சித்தம் மறைக்கப்படவுமில்லை, போதுமான அளவு அவர்களுக்கு அறிவிக்கப்படவுமில்லை. பரலோக செய்தி புரிந்துகொள்ள கடினமானதாகவுமில்லை. மாறாக, அவர்கள் கர்த்தருடைய பரி சுத்த வார்த்தைகளைத் திறந்த மனதுடனும், ஏற்றுக்கொள்ளக்கூடிய இருதயத்துடனும் கேட்க மறுத்தார்கள். அதன் காரணமாகத் தான் அவர்கள் தேவனுடைய வழிகளை அறியாதிருந்தார்கள். எனவே, எனவே, அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த வார்த்தைகளை அஜாக்கிரதையாக அவமதித்தார்கள்.



செவிகொடுக்க மனதாயிருப்பவர்களிடம் தேவன் இன்னும் பேசிக்கொண்டுதான் இருக்கிறார். எபிரெயர் *3:7,8* ம் வசனங்களில் ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே ( நிகழ்காலம்): இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனை நாளிலும் நடந்துபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். இங்கே சங்கீதம் **95** மேற்கொள் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், எபிரெயர் **4:7** ல் சொல்லப்பட்டிருக்கிறபடி தாவீதைக் குறிப்பிடாமல், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வசனப்பகுதி வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டது என்பதை மட்டும் உறுதிப்படுத்த வில்லை, தொடர்ச்சியாக, வேதவாக்கியங்களுக்கிடையே இருக்கின்ற தொடர் பையும் உறுதிசெய்கின்றன. பரிசுத்த ஆவியானவர் இன்று என்று திருவுளம் பற்றுகிறார்.

இந்த வசனப்பகுதியில் "இன்று" என்பது தாவீது தேவ ஆவியினால் ஏவப்பட்டு இவ்வார்த்தைகளை எழுதின அந்நாட்களையும் வெளிப்படையாகவே குறிக்கிறது. ஆனால், அதே நேரத்தில் எபிரெய ஆசிரியர், சங்கீதப் புத்தகத்திலிருந்து இவ் வசனப் பகுதியை மேற்கோள் காட்டின "அந்த நாட்களையும்" குறிக்கிறது. இந்த எபிரெய நிருபம்யாருக்கு எழுதப்பட்டதோ, அவர்கள் முதன்முதலாக இவ்வார்த்தைகளைக் கேட்ட அந்த நாட்களையும் குறிக்கிறது. நீங்களும் நானும் இந்த வார்த்தைகளைக் கேட்கும் "இந்த நாட்களையும்" அது குறிக்கும். வேறுவிதமாகச் சொன்னால்,நீங்களும் நானும் இப்பூமியில் வாழும் ஒவ்வொரு நாளும் நேற்றோ, அல்லது நாளையோ அல்ல. அது எப்போதுமே இன்று தான்.

உண்மையாகவே, உங்களுக்கும் எனக்கும் சிறந்ததையே கொடுக்க கர்த்தர் விரும்புகிறார். அவர் நம்மை இரட்சிக்கவும், ஆசீர்வதிக்கவும் விரும்புகிறார். அவருடைய சித்தத்தின்படி அவரிடத்தில் வருபவர்களுக்காக அவுர் ஆயத்தப்படுத்தியிருக்கும் பரலோக இளைப்பாறுதலை நாம் அனுபவிக்கும்படி விரும்புகிறார். ஆனால், தங்கள் பிடிவாதத்தினாலும், அலட்சியத்தினாலும் அவருக்குச் செவிகொடுக்கவும் கீழ்ப்படியவும் மறுக்கிறவர்களுக்கு அவர் ஒன்றுமே செய்யமுடியாது. சகோதரரே, ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்குகேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள். நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில்; கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம் (எபிரெயர் *3:12-14)* ✝

இரட்சிப்பு

# கிறிஸ்து ஏன் பிறந்தார்?

## WHY WAS CHRIST BORN?

*Barbara Jones*

### அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார்? (மத் .9:13)

''நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்று சொன்னார். ( மத். 9:13) ஓசியா 2:19 ல், ''நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்" என்று தேவன் சொல்கிறார். இதற்கான எபிரெய பதம் HESE என்பதாகும். இப்பதம் பழைய ஏற்பாட்டில் 250 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் பொருள் உண்மை, உறுதி மற்றும் உண்மையுள்ள அன்பு என்பவைகளாயிருக்கிறது. இது, ஒன்றாகச் சேர்ந்து இருப்பதை வலியுறுத்துகிறது. மேலும், தேவனுடைய ஜனங்கள் உண்மையில்லதவர்களாயிருக்கும் பட்சத்தில் கூட தேவன் அவர்களிடத்தில் உண்மையாயிருக்கிறார், அன்பாயிருக்கிறார் என்றும் பொருள்படும்.

### அவர் பட்டயத்தை அனுப்பப் பிறந்தார் (மத் 10:34)

பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல பட்டயத்தையே அனுப்பவந்தேன் என்று கிறிஸ்து சொன்னார். கிறிஸ்துவின் ஊழியத்தில் பாடுகள், உபத்திரவங்கள், மற்றும் மரணம்ங்கள் கூட ஏற்படுகின்றன. சுவிசேஷம் குடும்பத்தில் பிரிவினையை ஏற்படுத்தும் என்று சொன்னார். ஏனெனில், சத்தியமாகிய சுவிசேஷம் குடும்பங்களில் பதட்டத்தையும், சிலவேளைகளில் மரணத்தையுங்கூட ஏற்படுத்துவதால் சிலர் விசுவாசியாமற் போகிறார்கள். நாங்கள் அல்பேனியா நாட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது ஓர் இளம் பெண்ணை கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தும் சிலாக்கியத்தைப் பெற்றிருந்தோம். அவள், தான் கிறிஸ்தவளானதைத் தன் தகப்பன் இஸ்லாமியராயிருந்தபடியால் சொல்ல முடியாதிருந்தது. ஏனென்றால், தன் மகள் கிறிஸ்தவளாக மாறிவிட்டாள் என்பதை அறிந்தால் அவளை அவர் கொன்று போடுவார். இதுபோன்ற சூழ்நிலைகள் உருவாகும் என்பதை கிறிஸ்து அறிந்திருந்தார். ஆனாலும், நாம் மனிதர்களையல்ல தேவனையே பின்பற்ற வேண்டுமென்று அவர் சொன்னார். அந்த அல்பேனிய இளம்பெண் தன் ஜீவனுக்கு ஆபத்தான ஒரு முடிவை எடுக்க வேண்டியதாயிருந்தது. அவளின் அந்த முடிவு சரியானதுதான்.



### அவர் இளைப்பாறுதலைத் தரும்படி பிறந்தார் (மத்தேயு 11:28-30)

வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கிறிஸ்து சொன்னார். இம்மாபெரும் அழைப்பு எல்லோருக்கும் விடுக்கப்படுகிறது. மூன்று காரியங்கள் உள்ளடக்கம். 1. இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வருவது, 2. சீஷனாகக் கற்றுக்கொள்ள வருவது, 3. கர்த்தரைச் சேவிக்க வருவது. இது வேதபாரகர்களின் போதனையிலிருந்து நேரடியாகவே மாறுபடுகிறது. இங்கே இயேசு என்நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்.

### அவர் மனிதனை மீட்கப் பிறந்தார் (எபேசியர் 1:17)

இயேசு கிறிஸ்து மனிதனை மீட்கத் தம்முடைய இரத்தத்தைக் கிரயமாகச் செலுத்தினார். அவர் நியாயப்பிரமாணத்தின் சாபத்தை நீக்கிப்போட்டார் (ரோமர் 8:12). மனிதனைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி மீட்பை நல்கினார் (1 பேதுரு 1:18) மீட்பு எப்போதுமேஅவருடைய இரத்தத்தினாலே உண்டாகிறது (கொலொசெயர் 1:14).

### அவர் இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் இருக்கும்படியாகப் பிறந்தார் (வெளிப்படுத்தின விசேஷம் 17:14)

ஒரு ராஜா என்றால் அவருக்கு ராஜ்ஜியம் இருக்க வேண்டும். அவருடைய ராஜ்ஜியம் பூமிக்குரியதல்ல, மாறாக ஆவிக்குரியது. ஆயினும், அவருடைய ராஜ்ஜியம் பூமியில் இருக்கிறபடியால் ஒருவிதத்தில் அது பூமிக்குரியதே. அவருடைய ராஜ்ஜியம் என்பது, அவருடைய இரத்தத்தால் வாங்கப்பட்ட அவருடைய சபைதான் (எபேசியர் 1:21,22; கொலோசெயர் 1:18; அப்போஸ்தலர் 20:28,30). நாம் கிறிஸ்தவர்களாக அந்த ராஜ்ஜியத்தில் அங்கம் வகித்து, ராஜாவாகிய அவருக்கு சேவை செய்கிறோம். ஆண்டவர் என்னும் வார்த்தையின் பொருள் எஜமான் அல்லது ஆளுகிறவர் என்பதாகும். ஆகவே, நாம், ராஜாதி ராஜாகவும், கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிற இயேசு கிறஸ்துவுக்கு சேவை செய்கிறவர்களாயிருக்கிறோம்.

### அவர் சந்தோஷத்தை உண்டு பண்ணப் பிறந்தார் (லூக்கா 2:10)

'இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று லூக்கா சொல்கிறார். பரலோக வீட்டில் கிடைக்கக்கூடிய அந்த நித்திய மகிழ்ச்சி அல்லது சந்தோஷம் அவருடைய நற்செய்திக்கும், உபதேசத்துக்கும் கீழ்ப்படிந்தவர்களுக்கு மட்டும் தான்.

### அவர் தேவனை இவ்வுலகத்திற்கு வெளிப்படுத்தப் பிறந்தார் (யோவான் 13:15)

இயேசு கிறஸ்து, "நான் உங்களுக்குச் செய்ததுபோல, நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்'' என்று சொன்னார். இங்கே இயேசு மன்னிப்பை பற்றிக் பேசுகிறார்.

நான் உங்களுக்கு மன்னித்தது போல,நீங்களும் மற்றவர்களுக்கு மன்னிக்க வேண்டும். மேலும், இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவியதன் மூலமாக நமக்கு தாழ்மையைக் கற்றுக்கொடுக்கிறார். ஒருவருக்கொருவர் தயவாயும்மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்று எபேசியர் 4:3 போதிக்கிறது.

**அவர் தேவனுடைய ராஜ்ஜியத்தைப் பிரசங்கிக்கும்படி பிறந்தார் (லூக்கா 4:43)**

''தாம் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் குறித்து பிரசங்கிப்பதற்காகவே அனுப்பப்பட்டதாக இயேசு கிறிஸ்து சொன்னார்.'' ஞானஸ்நானத்திற்குப் பிறகு... அதுமுதல் இயேசு மனந்திரும்புங்கள், பரலோகராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். (மத்தேயு *3:17*) இயேசு கிறிஸ்துவானவர் தமக்கும், ஊழியத்திற்கும் இடையே எதுவும் தடையாக வர அனுமதிக்கவேயில்லை.

**அவர் மரணத்தை மேற்கொள்ளப் பிறந்தார் (எபிரெயர் 2:14)**

இயேசு கிறிஸ்து மரணத்துக்கு அதிபதியான பிசாசை அழிக்கும்படியாகப் பிறந்தார். நம்முடைய பிரதான ஆசாரியராகவும், நம் பாவங்களுக்கு கிருபாதார பலியாகவும் மரிப்பதற்காக அவர் இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் நம்மைப் போல் சோதிக்கப்படுகிறவர்களுக்கு அவர் உதவிசெய்கிறார் ( I கொரிந்தியர் *10:12,13;* யாக்கோபு *1:13,14*)

**அவர் நித்திய ஜீவனை அளிப்பதற்காகப் பிறந்தார் (மத்தேயு 28:6)**

இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதல் மூலமாக நித்திய ஜீவனுக்கான வாக்குத்தத்தம் நமக்கு உண்டு. இயேசு உயிர்த்தெழுந்தார் என்று தேவதூதனால் சொல்லப்பட்டது. இயேசு கிறிஸ்து மரணத்தை மேற்கொண்டபடியால் நமக்கும் அதே வாக்குத்தத்தம் உண்டு. மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் (வெளிப்படுத்தின விசேஷம் *2:10*)

**நம்முடைய மத்தியஸ்தராயிருக்கும்படி அவர் பிறந்தார்(தீமோத்தேயு2 5)**

'தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே'' என்று பவுல் சொன்னார். மத்தியஸ்தர் என்பவர் இருதரப்பினர் சார் பாகப் பேசுபவர். இங்கே கிறிஸ்து நமக்கும் தேவனுக்கும் இடையே மத்தியஸ்தராயிருக்கிறார்.



**அவர் நம்முடைய நியாயாதிபதியாயிருக்கும்படி பிறந்தார்**
**(யோவான் 6:38; மத்தேயு 25:31,32)**

இயேசு கிறிஸ்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற இப்பூமிக்கு அனுப்பப்பட்டார். பிதாவின் சித்தம், கிறிஸ்து இவ்வுலகத்திற்கு இரட்சகராக இருக்கவேண்டுமென்பதாயிருந்தது. அதே நேரத்தில் இவ்வுலகத்தின் நியாயாதிபதியாயிருக்கும் பொறுப்பையும் பிதா கிறிஸ்துவுக்கே கொடுத்தார். ஆகவே, கிறிஸ்தவர்களுக்கும், இவ்வுலக மக்களுக்கும் கிறஸ்து இரட்ச கராகவும், நியாயாதிபதியாகவும் இருக்கிறார். †

**ஐந்து நிமிட வேத பாடம்**
**இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம்**
The gospel of Jesus Christ
*Paula Bates*

*1.* மாற்கு *1 : 1* ------------------------ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ---------------------

*2.*மாற்கு *1 : 14* --------------------- காவலில் வைக்கப்பட்ட பின்பு இயேசு ----------------------- வந்து தேவனுடைய ராஜ்யத்தின் ----------------- பிரசங்கித்து

*3.* மத்தேயு *4 : 23* பின்பு ------------------ கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து ராஜ்யத்தின் ---------------------------------, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.

*4.* மத்தேயு *24:14* ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் ---------- சகல -------------------- சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்.

*5.*ரோமர் *1:16* கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் ------------ முன்பு ------------------ பின்பு-------------- விசுவாசிக்கிறவனெவனே அவனுக்கு ------------------ உண்டாவதற்கு அது தேவ ------------------

*6. II* கொரிந்தியர் *4:3,4* எங்கள் சுவிசேஷம் மறைபொருளா -யிருந்தால் -------------------- அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற ------------- மகிமையான சுவி -சேஷத்தின் ஒளி -------------------- அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக்--------------

விடை 55-ம் பக்கம் பார்க்கவும் †

# வசன ஆராய்ச்சி

## *Verse search*

***Jerry Bates***

1. இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல. சரியா? அல்லது தவறா? (வசனம் 18).
2. எதற்காக சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது?
3. அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று எது விடுதலையாக்கப்படும்? (வசனம் 20).
4. யார் ஆவியின் முதற்பலன்களைப் பெற்றிருக்கிறார்கள் (வசனம் 23)
5. எதற்காக ஆவியின் முதற்பலன்களைப் பெற்றிருக்கவர்கள் காத்திருக்கிறார்கள்? (வசனம் 23)
6. நம்பிக்கை என்றால் என்ன? (வசனம் 24)
7. நம்பிக்கை நம்மைஎன்ன செய்ய வைக்கிறது? (வசனம் 26)
8. யார் நமக்காக வேண்டுதல் செய்கிறார்? (வசனம் 26)
9. ஆவியானவர் நமக்காக எப்படி வேண்டுதல் செய்கிறார்? (வசனம் 26)
10. நமக்காக வேண்டுதல் செய்ய ஆவியானவர் நமக்கு ஏன் தேவை? (வசனம் 26)
11. ஒருவருக்காக வேண்டுல் செய்வது என்பதன் பொருள் என்ன?
12. ஆவியானவர், பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால் (வசனம் 27)
13. யலருக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்?
14. யாருக்கு ஒப்பாயிருப்பதற்கு கிறிஸ்தவர்கள் முன் குறிக்கப்பட்டிருக்கிறார்கள்? (வசனம் 29)
15. தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களை.............. ......................... (வசனம் 30).



## மகிமைப்படுத்துதல் என்பது எதைக் குறிக்கிறது?

ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். மேலும், தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது. அதேனென்றால், சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத், தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக்காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம். அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்ப வேண்டுவதென்ன? நாம் காணாததை நம்பினோமாகில் அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம். அந்தப்படியே ஆவியானவரும் நமது பல வீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிக் கிறபடியால், ஆவியானவர்தாமேவாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர் களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; அவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவ்வளவு நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார் (ரோமர் 8:18-30).

**குறிப்பு:**

இது ஒரு கடினமான வசனப்பகுதியாகும். இந்த முழு வசனப்பகுதிக்கும், பாடுகளிலிருந்து மகிமை என்று தலைப்பிடலாம். இங்கே முழு சிருஷ்டியும் உயிருள்ள ஒன்றாக அடையாளப் -படுத்தப்பட்டு, அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று அவைகள் விடுதலையாக ஆவலோடே காத்துக் கொண்டிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கும் இதேவிதமான நம்பிக்கை இருக்கிறது. அதாவது, நாம் சரீர மீட்பைப் பெற்றக்கொள்ள எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த எதிர்பார்ப்பின் நம்பிக்கைக்கு தடைகள் எது வந்தாலும் அவைகளுக்கு மத்தியிலும் நாம் தேவனுக்காகத் தொடர்ந்து வாழ வேண்டும். தேவன் தம்முடைய பிள்ளைகளை இரட்சிப்பாரென்றும், நம் ஜெபங்களுக்கு எப்போதுமே பதிலளிப்பாரென்றும் நமக்கு நம்பிக்கை உண்டு. ✝

## ஞானம்

- ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும் புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள் அதின் வர்த்தகம் வெள்ளிவர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும்பொன்னிலும் உத்தமமானது.
- முத்துக்களைப் பார்க்கிலும் அது விலையேறப் பெற்றது; நீ இச்சிக்கத்தக்கதொன்றும் அதற்கு நிகரல்ல.
- அதின் வலதுகையில் தீர்க்காயுசும், அதின் இடதுகையில் செல்வமும் கனமும் இருக்கிறது
- அதின் வழிகள் இனிதான வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம்.
- அது தன்னை அடைந்தவர்களுக்கு ஜீவ விருட்சம், அதைப் பற்றிக்கொள்ளுகிற எவனும் பாக்கியவான்

(நீதிமொழிகள் *3:13-17*)





# பிரசங்கபீடத்தில் அக்கினி

## FIRE IN THE PULPIT

J.J. Turner



'பிரசங்க பிடத்தில் ஐஸ்கட்டி இருந்தால் விசுவாசிகள் அமர்ந் திருக்கும் இருக்கையில் உறைபனி இருக்கும்" என்னும் சொற்றொடரைச் சொன்னவர் யார் என்று எனக்குத் தெரியாது. யார் உருவாக்கினார் என்று தெரியவில்லை. இருந்தபோதிலும், பிரசங்க பீடத்தின் தாக்கம் மிகப்பெரியது என்பது எனக்குத் தெரியும். பெரும்பாலான சபைகள் பிரசங்கத்திற்கும், பிரசங்க பீடத்திற்கும் கொடுக்கும் முக்கியத்து வமேஇதற்கு சாட்சியாயிருக்கிறது. ஒரு பிரசங்கியார் ஊழியத்தின் வேறு ஏதாவது நிலையில் பெலவீனமாயிருந்தாலும், பிரசங்க பீடத்தில் அவர் பெலவீனமாயிருக்கக் -கூடாது. பொதுவாக சபையின் வளர்ச்சிக்கு அடித்தள மிடுவது பிரசங்க பீடம்தான். பிரசங்க பீடம் உற்சாகமில்லாமலிருந்தால் இருக்கையில் அமர்ந்திருப்பவர்கள் தூங்கி வழிவார்கள். பிரசங்க பிடம்அனலாயிருந்தால் இருக்கையில் அமர்ந்திருப்பவர்களும் உற்சாகமடைவார்கள். இது தலைவரைப் பின்பற்றும் வழக்கத்தின் படியானது தான்.

ஒரு பகுதியிலிருந்த ஒரு சபைக்கட்டடத்தில், தீடீரென தீப்பிடித்துவிட்டது. தீயை அணைக்க, பக்கெட்டில் தண்ணீரை எடுத்துக்கொண்டு, அநேகமாக எல்லோருமே அங்கே ஒன்று திரண்டுவிட்டார்கள். இப்படி பெரும்படையாக தண்ணீர் ஊற்றி தீயை அணைக்கத்திரண்டனர். அப்போது அங்கே ஒரு மனிதன் தீயை அணைத்து எல்லோரையும் ஆச்சரியப்படுத்தினான். காரணம், அவன் அப்பட்ட ணத்தில் நாத்திகனாக இருந்தான். ஆகவே, அவனிடம் நீ ஒரு நாத்திகனாயிருந் தும், சபைக்கட்டடத்தில் பிடித்திருக்கும் தீயை நீ ஏன்

அணைக்கிறாய் என்று கேட்ட தற்கு அவன் இந்த சபையில் இன்று தான் முதன்முதலாக அக்கினியைக் காண் கிறேன் என்று சொன்னானாம். ஒரு சபை அனலாயிருக்கும்போது அதை உலகம் பார்க்கும், பிரசங்க பீடம் அனலாயிருந்தால் சபைக்குள்ளும் அனலிருக்கும்.

திருவசனத்தைப் பிரசங்கி என்று ( II தீமோத்தேயு *4:1-4* )ல் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளையைக் கைக்கொண்டால் கூட, பிரசங்கம் என்பது எளிதான வேலையாக இருக்காது. பிரசங்கத்தினால் யோவான் ஸ்நானகனுடைய தலை துண்டிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்து பிரசங்கத்தினால் நிராகரிக்கப்பட்டார். அப்போஸ்தலாகிய பவுல் தான் சிலுவையைப் பற்றிப் பிரசங்கத்தினால் நிராகரிக்கப்பட்டார். அப்போஸ்தலாகிய பவுல் தான் சிலுவையை பற்றிப் பிரசங்கித்ததினால் எவ்விதமாக நடத்தப்பட்டார் என்பதைப் பற்றி, குறிப்பாக எழுதியிருக்கிறார் ( II கொரிந்தியர் *11:12-33*). பவுல் கிறிஸ்துவை பிரசங்கித்ததினால் தனக்கு ஏற்பட்ட நஷ்டங்களையெல்லாம் சந்தோஷமாக சகித்துக் கொண்டார் (பிலிப்பியர் *3:8*) பேதுருவும், யோவானும் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றும் அழைக்கப்பட்டார்கள் (அப். *4:13*).

பல வருடங்களுக்கு முன்பு க்ளைன் பேடன் என்பவர் வேதாகமகல்லூரி மாணவர்களிடம், உங்களுக்கு பிரசங்கிப்பதை விட வேறு ஏதாவது தெரிந்தால் போய் அதைச் செய்யுங்கள் என்று சொன்னார். இந்த வார்த்தைகள் அன்றிலிருந்து என் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றிருக்கிறது. அன்றிலிருந்து நான் பிரசங்கித்து வருகிறேன். கிறிஸ்துவையும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் குறித்து அனலாகப் பிரசங்கிக்கிறவர்கள் தேவைப்படுகிறார்கள். பிரசங்கிப்பதற்குக் கொடுக்கப்பட வேண்டிய விலையையும் பிரசங்கிப்பதால் எதிர்வரக் கூடிய விளைவுகளையும் சந்திப்பதற்குத் தைரியமான பிரசங்கியார்கள் தேவைப்படுகிறார்கள். அக்கினி என்பது வேதாகமத்தில் அதிலும் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஒரு பிரபலமான வார்த்தை.

* தேவனுடைய பிரசன்னம் அக்கினியோடு தொடர்புடையதாயிருந்தது (ஆதியாகமம் *15:17*)
* தேவன் எரிகிற முட்செடியிலிருந்து மோசேயோடு பேசினார் (யாத்திராகமம் *3:2-4*)
* தேவன் இஸ்ரவேலர்களை அக்கினிஸ்தம்பத்தின் சூலமாக வழிநடத்தினார் (யாத்திராகமம் *13:21*)
* அக்கினி தேவனுடைய மகிமையின் அடையாளமாயிருக்கிறது (தானியேல் *7:9*)
* அக்கினி தேவனுடைய பரிசுத்தத்தின் அடையாளமாயிருக்கிறது (ஏசாயா *6:4*)



* அக்கினி தேவகோபாக்கினையின் அடையாளமாயிருக்கிறது (உபாகமம் *9:3*)
* அக்கினி தேவனுடைய பாதுகாப்பின் அடையாளமாயிருக்கிறது (ராஜாக்கள் *6:17*)

எனவே அக்கினி பிரசங்கத்தோடு தொடர்புபடுத்தப்படுவதில் எந்தவொரு ஆச்சரியமும் இல்லை.

எரேமியா அனல்மூட்டக்கூடிய பிரசங்கியார். அக்கினி என்பது உருவகமாக தேவனுடைய ஊழியக்காரர்களுக்குப் பயன்படுத்தப்படும்போது அது ஓர் விசேஷித்த அர்த்தத்தைக் கொடுக்கிறது. அக்கினி என்றும் வார்த்தை எரோமியாவோடும், அவருடைய ஊழியத்தோடும் எப்படித் தொடர்புபடுத்தப் பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். எரேமியா நாற்பது வருடங்கள் பிரசங்கித்தும் சரியான வரவேற்போ அல்லது சரியான பலனோ கிடைக்கவில்லை. அவர் பரிகாசம் செய்யப்பட்டார், தாக்கப்பட்டார். மோசமாக நடத்தப்பட்டார், சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார், தாக்கப்பட்டார், மோசமாக நடத்தப்பட்டார், சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்; இருந்தபோதிலும், சில காரணங்களுக்காக அவர் தொடர்ந்து பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அவர் ஏன் அப்படிச் செய்தார்? ஏனென்றால், அவருக்குள் இருந்த அந்த அக்கினியால் தான். அதாவது அவருடைய ஆத்துமாவுக்குள் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த அக்கினியால் தான். முதலாவது, இந்த அக்கினி சொல்லுகிறது என்னவென்றால்; அதுதான் இன்றைய பிரசங்க பீடத்தின் தேவையாயிருக்கிறது. நீங்கள் இந்த வார்த்தையைச் சொன்னபடியினால், இதோ, நான் உன் வாயிலிட்ட என் வார்த்தைகளை அக்கினியும் இந்த ஜனத்தை விறகும் ஆக்குவேன், அது இவர்களைப் பட்சிக்கும் (எரேமியா *5:14*).

இரண்டாவது, எரேமியாவின் எலும்புகளில் அக்கினி இருந்தது. நான் பேசினது முதற்கொண்டு,கதறுகிறேன்; கொடுமையென்றும், பாழ்க்கடிப்பென்றும் சத்தமிட்டுக்கூறுகிறேன்; நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நித்தையும் பரிகாசமுமாயிற்று. ஆதலால் நான் அவரைப் பிரஸ்தாபம் பண்ணாமலும் னிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன்; ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது. அதைச் சகித்து இளைத்துப் போனேன்; எனக்குப் பொறுக்கக் கூடாமற் ஏனென்றால், அவருடைய எலும்பிலிருந்த அக்கினி அவரை அவ்வாறு செய்ய நெருக்கி ஏவியது. நாமும் கர்த்தருக்காக அனலாயிருக்க வேண்டும். இவ்வசனம், ஒரு தேர்ந்த பிரசங்கியார் மேற்கோள் காட்டின வரியை எனக்கு நினைவுபடுத்துகிறது. பிரியமான தேவனே, தயவு என்னை மண்ணெண்ணையினால் அபிஷேகம் பண்ணி தீக்குச்சியினால் பற்றவையும். இன்றைய நாட்களில் தேவனுக்காக அக்கினியாய் செயல்படத்தக்க ஊழியக்காரர்கள் தேவை. ஆம் பிரசங்கங்கள் ஜனங்களின் பாராட்டுக்காக அல்லாமல் தேவனுடைய அங்கீகாரத்திற்காக இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, எரேமியாவுக்கு தேவனுடைய வார்த்தையானது வல்லமையான அக்கினி என்பதும், அக்கினியிலிருந்து அதை வேறுபடுத்திக்காட்ட முடியும் என்பதும் தெரிந்திருந்தது; "என் வார்த்தை அக்கினியைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார் ஆகையால், இதோ, ஒவ்வொருவராய்த் தன்தன் அயலாரிடத்தில் என் வார்த்தையைத் திருட்டுத்தனமாய் எடுக்கிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா *23:29, 30*).

சமரச மனப்பான்மையும் சமுதாயச் சீரழிவுகளும் அரசியல் தந்திரங்களும் தேவனைப் பற்றிய அறிவும் பயமும் இல்லாத இந்நாட்களில் அனல் பறக்கும் பிரசங்க பீடங்கள் தேவை. தீர்க்கதரிசிகளின் ஆவியும் இரட்சகரின் அக்கறையும் அப்போஸ்தலங்களின் தைரியமும் பிரசங்கிகளுக்குத் தேவை.

**எரேமியாவின் எலும்புகளில் அக்கினி ஏன் இருந்தது?**

அவருடைய எலும்புகளில் அக்கினி ஏன் இருந்தது என்பதற்கான அடிப்படைக் காரணங்களைத் தெரிந்கொள்ள நாம் எரேமியா புத்தகத்தை வாசித்து அதைக் கவனிக்க வேண்டும். ஏனென்றால், எரேமியாவுக்கு இருந்த அந்த அக்கினி நம்முடைய எலும்புகளில் பிரசங்க பீடங்களில், சபைகளில் இருக்க வேண்டும்.

1. எரேமியா ஒருபோதும் தேவனுடைய அழைப்பை சந்தேகப்படவில்லை.
2. எரேமியா எவ்வித சந்தேகமுமின்றி தன்னுடைய ஊழியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார்.
3. எரேமியாவுக்கு, தேவனால் தன்வாயில் அக்கினி வைக்கப்பட்டது என்பது தெரிந்திருந்தது.
4. எரேமியா தன்னைரோ, மற்றவர்களையோ அல்ல மாறாக, தேவனே தன்னுடைய பிரசங்கித்தின் வெற்றியை நியாயப்படுத்த அனுமதித்தார்.
5. எரேமியா பிரச்சனைகளுக்கு மத்தியிலும் தன்னை ஊழியத்தில் அர்பணித்துக் கொண்டார்.
6. எரேமியாவுக்கு தன் சத்துருக்களால் வரும் பிரச்சனைகளைவிட தேவன் பெரியவர் என்பது தெரிந்திருந்தது.
7. எரேமியா தன்னுடைய சோர்வுகளையும் தாண்டி தேவன்மீது விசுவாசம் கொண்டார்.
8. எரேமியா பிரசங்கிப்பதைத் தவிர தன்னால் வேறெதையும் செய்ய முடியாது என்பதை அறிந்திருந்தார்.



9. எரேமியா பிரசங்கிப்பதைத் தவிர தன்னால் வேறெதையும் செய்ய முடியாது என்பதை அறிந்திருந்தார்.
10. எரேமியா தான் எப்போதுமேதேவனுடைய மனிதன் என்பதை அறிந்திருந்தார்.

பிரசங்கிக்கிற நமக்கும், பிரசங்கத்தைக் கேட்கும் யாவருக்கும் எரேமியா ஒரு மிகச்சிறந்த மாதிரி. இன்றைய நாட்களில் பிரசங்கமேடைகளில் இன்று நமக்கு அனலுள்ள பிரசங்கள் தேவை. பிரசங்கியார்களின் வாயிலும், எலும்பிலும் அக்கினி இருந்தாலொழிய இது சாத்தியமல்ல.

அக்கினியை உண்டாக்குவதற்கு இரண்டு காரியங்கள் அவசியமாகிறது. நான் சிறுவனாக இருந்தபோது குளிர்காலத்தில், அனல் மூட்டுவதற்குத் தேவையான பொருட்களைச் சேகரிப்பது என் வேலையாயிருந்தது. நான் அவைகளைத் திரும்பிப் பார்க்கும்போது, அதே வழிமுறைகளைப் பிரசங்க மேடையில் அக்கினியை உண்டாக்கப் பயன்படுவதாகக் காண்கிறேன்.

முதலாவது, தீ மூட்டப்பட சரியான இடம் தேவை. வீடுகளில் தீ மூட்டுவதற்கென தனியாக இடத்தை வைத்திருப்பார்கள். அதேபோல் அனல்மூட்டப்பட வேண்டிய இடம் பிரசங்க பீடம்தான்.

இரண்டாவது, சரியான எரிபொருளைச் சேகரித்து வைத்திருக்க வேண்டும். அதாவது தீ மூட்டுவதற்குத் தேவையான மரக்கடை, மரக்கரி மற்றும் மண்ணெண்ணை போன்றவைகள். அதேபோல் பிரசங்க பீடத்தையும், விசுவாசிகள் அமர்ந்திருக்கும் இடத்தையும் அனல் மூட்டும் எரிபொருளாக தேவனுடைய வார்த்தை இருக்கிறது. இதற்காகத் தான் நாம் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கிறோம் (II தீமோத்தேயு *4:1-6*)

மூன்றாவது, தீப்பொறியானது ஊதப்பட்டு அக்கினி ஜீவாலையாகக் கொழுந்துவிட்டு எரியவேண்டும். ஆனால், அது கட்டுக்குள் இருக்க வேண்டும். அதேநேரத்தில் தீயானது எல்லோருக்கும் தெரியும் விதத்தில் எரிய வேண்டும்.

நான்காவது, தீயானது எப்போதும் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும். அதிகமான எரிபொருளினால் ஏற்படும் கட்டுக்கடங்காத தீயின் மூலம் பல பாதிப்புகள் ஏற்கப்பட்டுவிடும். அதனால் தான் நாம் சத்திய வசனத்தை நிதானமாய்ப் படுத்துப் போதிக்கிறவர்களாயிருக்க வேண்டும் (தீமோத்தேயு. *2:15*)


நாம் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதற்காகவே நம்வாயிலும், எலும்பிலும் அக்கினியை உண்டாக்க வேண்டும். அது பிரசங்கியர்களான நம்முடைய பொறுப்பாயிருக்கிறது. இதை யாரும் நமக்காகச் செய்யமுடியாது. †

# அதே பழைய பாடல்

## The Same Old Song

Bobby Dockery

ஏசாயா தீர்க்கதரிசி தன்னுடைய நாட்களில் ஒரு பிரபலமான பிரசங்கியாக இருக்கவில்லை. உண்மையைச் சொல்லப்போனால் அவர் மக்களின் பரிகாசத்தையும் கடுங்கோபத்தையும் தான் சம்பாதித்தார். ஜனங்கள் அவரை பழைய காரியங்களைப் பேசுபவரென்றும், புதிய கருத்துகள் தெரியாதவரென்றும் பரிகாசம் செய்தனர். மேலும் அவர்கள், சிறுபிள்ளைகளுக்குப் போதிப்பதற்குத்தான் ஏசாயாவுக்குத் தெரியும் என்றும் இகழ்ந்தனர். ஏசாயா 28:10ல், ஏசாயாவின் நாட்களில் வாழ்ந்த மதத்தலைவர்கள் ஏசாயாவின் பிரசங்கத்தை, கற்பனையின் மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமுமாம் என்று பரிகாசம் செய்தனர். இந்த வசனத்தை மூலமொழியாகிய எபிரெய மொழியிலிருந்து மொழிபெயர்க்க முடியவில்லை. ஏனென்றால், இது ஏசாயாவின் பிரசங்கத்தைப் பரிகாசம் செய்யும் விதமாக உள்ளது.



வேறுவிதமாகச் சொன்னால், ஆசரியர்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஏசாயாவைப் பார்த்து, நீ பழைய பாடலையே திரும்பத்திருப்பப் பாடுகிறாய்; சிறு பிள்ளைகளிடம் பேசுவது போல் பிதற்றுகிறாய் என்று இகழ்ந்தனர். ஆனால், சற்று கௌரவத்தோடு ஏசாயா அவர்களைப் பார்த்து,

'நீங்கள் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்வீர்கள். தேவனுடைய தீர்கதரிசியின் வாயிலிருந்து இல்லாவிட்டாலும் கூட, ஆசீரிய பட்டயத்தினாலே நீங்கள் பாடத்தைக் கற்றுக்கொள்வீர்கள் என்றார். மேலும், ஏசாயா, தேவனுடைய வார்த்தையை அவர்கள் அலட்சியம் பண்ணினதினால் தேவன் அவர்களை சிறைவாசத்திற்கு அனுப்புவார் என்றும் எச்சரித்தார். சிறைவாசத்தில், அவர்கள் இகழ்ந்த அதே பாடங்களை மறுபடியும் கற்றுக்கொள்வார்கள். அல்லது கற்றுக்கொள்ளும்படி நிர்பந்திக்கப்படுவார்கள். தடுக்க முடியாத, தப்பித்துக் கொள்ள முடியாத நியாயத்தீர்ப்பு அவர்கள் மேல் காத்திருக்கிறது என்றும் ஏசாயா சொன்னார்.

தேவன் சில காரியங்களைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்! அவருடைய வார்த்தை நித்திய நித்தியமாய் சத்தியமாய் இருக்கிறது !



தேவன் சில காரியங்களைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்! அவருடைய வார்த்தை நித்திய நித்தியமாய் சத்தியமாய் இருக்கிறது ! அது கி.மு. ஏழாம் நூற்றாண்டிலும் உண்மையாய் இருந்தது, இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டிலும் உண்மையாயிருக்கிறது! தேவன், சில காரியங்களை திரும்பத் திரும்ப வெளிப்படையாகவும், எளிமையாகவும் சொல்ல விரும்புகிறார்.

### *பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை நாம் திரும்பத் திரும்பப் போதிக்க வேண்டும்*

பாவம் என்பது, மனிதனுடயை அடிப்படையான, உடனடியான, முக்கியமான பிரச்சனையாக இருக்கிறது. துரதிஷ்டவசமாக தற்கால பிரசங்க மேடைகளிலிருந்து இதைப்பற்றி அதிகமாகச் சொல்லப்படுவதில்லை. சில வருடங்களுக்கு முன்பு DR.KARLMENNINGER என்னும் பிரசித்தி பெற்ற மனநல மருத்துவர் எதுவெல்லாம் பாவமாகும் என்னும் தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதினார். அப்புத்தகத்தில் நவீன அகராதிகளில் "பாவம்" என்னும் வார்த்தை வேதாகமத்திலிருந்து இன்னும் மறையவில்லை. பாவம் ஆபத்தானது என்று மக்களுக்கு அடிக்கடி சொல்லவேண்டும். பாவமானது வாழ்க்கையைச் சீரழித்து விடுகிறது. குடும்பங்களைக் கொள்ளை கொண்டுபோகிறது. தேசங்களைப் பாழாக்குகிறது. சொல்லொண்ணா துயரங்களை உண்டாக்குகிறது. பாவத்தை லேசாக எடுத்துக்கொள்கிறவர்கள், தேவனையும் லேசாகவே எடுத்துக் கொள்கிறார்கள் !

### *தேவன் மனந்திரும்ப வேண்டுமென்று எங்குள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் என்பதை திரும்பத் திரும்பப் போதிக்க வேண்டும்*

ஏசாயாவின் நாட்களிலிருந்து இன்று வரை உலகத்திற்குத் தேவனுடைய அருமருந்து இது தான். மனந்திரும்புதல் என்னும் வார்த்தையைக் கேட்பது அரிதாகி விட்டது. ஆனால், தேவன் மனந்திரும்புதலை எதிர்பார்க்கிறார். மனந்திரும்புதல் என்னும் வார்த்தை வேதாமத்தில் 969 முறை வருகிறது. நாம் இவ்வார்த்தையை திரும்பத் திரும்பப் படிக்கிறோம். யோவான் ஸ்நானகன் ஏரோதை மனந்திரும்பச் சொன்னார். இயேசு கிறிஸ்து, யூதர்களிடம் மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கித்தார் (மத்தேயு4:17) தேவன் பாவங்களைக் கண்டு கொள்ளாமல் இருக்கமாட்டார். தொடர்ந்து மனந்திரும்புங்கள் என்று அவர் வலியுறுத்துகிறார். (அப் 17:30)

### நியாயத்தீர்ப்பு நிச்சயமென்றும், நரக உண்மையானதென்றும் நாம் திரும்பத் திரும்ப போதிக்க வேண்டும்

தேவன் இப்பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்க்க ஒருநாளை நியமித்திருக்கிறார் (அப் *17:31*) ஆண்டவராகிய இயேசு இவ்வுலகத்திற்கு அன்பின் செய்தியோடும், தேவனோடு ஒப்புரவாகுதலின் செய்தியோடும் வந்தார். ஆயினும், நாம் தேவனுடைய அன்பை நிராகரித்தால் அதற்கு மாற்று நரகந்தான் என்று எச்சரித்தார். (மத்தேயு *10:38*) அமெரிக்க ஐக்கிய தேசத்தின் ஒட்டு மொத்த மார்க்கப் பிரிவினைப் பிரசங்கியார்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் **75%** பிரசங்கியார்கள் நரகம் இருப்பதை மறுக்கிறார்கள். வேதாகமத்தில் நரகம் என்னும் வார்த்தையையே எடுக்கும் முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், இயேசு பரலோகத்தைப் பற்றிச் சொன்னவைகளை விட, நரகத்தைப் பற்றிதான் அதிகமாகச் சொல்லியிருக்கிறார். ஒருமுறை ஒரு ஞானமுள்ள பழைய பிரசங்கியார் நரகத்தைப்பற்றியும், நியாயத்தீர்ப்பைப் பற்றியும் நாம் கண்ணீருடன் மக்களுக்குச் சொல்லவேண்டுமென்று சொன்னார்.

### நாம் இரட்சிக்கப்பட, தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டுமென்பதை திரும்பத் திரும்ப போதிக்க வேண்டும்

ஆரம்பத்திலிருந்து, முடிவுரைவரை வேதாகமத்தின் செய்தி தேவனுக்குக் கீழ்ப்படி என்பதாகத்தான் இருக்கிறது (எபிரெயர்*5:8-9*) கீழ்ப்படிதலில்லாமல் தேவனோடு மனிதன் உறவாடவே முடியாது. கீழ்ப்படிதலில் வேரூன்றாத எந்தவொரு மதமும் அர்த்தமற்றதாகும் (*I*சாமு.*15:22-23*) நாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதவரை அவரை நோக்கி, "கர்த்தாவே" என்றழைப்பதற்கு நமக்கு உரிமை இல்லை (லூக்கா *6:46*) நாம் தேவனை லேசாக எடுத்துக்கொள்ளக் கூடாது! நாம் அவருடைய கட்டளைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும் (*I*தெச *- 1 : 8*)

"இன்றும் தீர்க்கதரிசிகளின் நாட்களைப் போல் சில காரியங்கள் திரும்பத்திரும்பச் சொல்லப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் !"





# நான் பிரசங்கித்த நற்செய்தி

## The Gospel I Preached

*Hollis Miller*

அன்றியும், சகோதரரே நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக் கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதினார் ( *I* கொரி *15 : 1,2* ) மூன்று மற்றும் நான்காம் வசனங்களில் அவர், தான் பிரசங்கித்த சுவிஷேசத்திற்கான விளக்கத்தைக் கொடுத்தார். சுவிஷேசம் என்பது இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை உள்ளடக்கியதாயிருக்கிறது.

கிறஸ்துவின் மரணத்தைப் பற்றி மட்டுமே பிரசங்கிப்பது சுவிசேஷமாகாது. ஏனென்றால், எல்லா மனிதர்களுமே மரிக்கிறார்கள். அதே போல் கிறிஸ்துவின் அடக்கத்தை மட்டுமே பவுல் பிரசங்கித்திருந்தால் அது சுவிசேஷமாயிருக்காது. மரிக்கும் மனிதர்கள் அடக்கம் பண்ணப்படுகிறார்கள். ஆயினும், அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று அறிவித்த போது தான் சுவிசேஷ செய்தி உயிரோட்டமுள்ளதாய் மாறியது. பவுல், கிறிஸ்துவின் மரணத்தோடும், அடக்கத்தோடும் பிரசங்கத்தை முடித்திருந்தால், அவர் அந்தப் பட்டணத்துக்குப் போவதற்கு முன்பாக அந்த மக்கள் எப்படி கல்லறைக்கு அப்பால் நம்பிக்கையற்றவர்களாய் இருந்தார்களோ அதே நிலையில் தான் அவர்களும் இருந்திருப்பார்கள்.

மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியா நாட்டு சபைகளுக்கு எழுதும் போது, நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன் முன் சொன்னது போல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் (கலா.*1:8,9*) என்று எழுதுகிறார். இயேசு கிறிஸ்துவின் சரீர

உயிர்த்தெழுதலைப்பற்றி அறிவிக்காத எந்த ஒரு பிரசங்கமும் சுவிசேஷப் பிரசங்கமாகாது. கிறிஸ்துவின் சுவிசேஷம் மிக முக்கியமாக இருக்கிறபடியால் தான் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துப் பட்டணத்துக் கிறிஸ்தவர்களிடம் இவ்விதமாகக் கூறுகிறார்.

*1.* கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழவில்லையென்றால், பவுலின் பிரசங்கமும் கொரிந்தியர்களின் விசுவாசமும் விருதா

*2.* "கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழவில்லையென்றால் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே". கொரிந்துப் பட்டணத்தார் பாவத்தில் தான் இருந்திருப்பார்கள். கடைசியாகப் பவுல் "கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம்" என்று உறுதியாகச் சொல்லலாமே என்று கூறிகிறார்.

## சுவிசேஷப் பிரசங்கத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எப்போதுவரை சேர்க்கப்படவேண்டும்?

கடைசி வரை சேர்க்கப்பட வேண்டும். கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலுக்கு வேறொரு விளக்கம் கொடுத்து தங்களுடைய தவறான உபதேசங்களுக்கு அதைச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சிப்பவர்கள் எப்படி கலாத்தியர் பவுலின் வெறுப்பைச் சம்பாதித்தார்களோ அதே விதமான வெறுப்பைத் தாங்களும் சம்பாதித்துக் கொள்கிறார்கள். இவ்வார்த்தைகளை வாசிக்கும் எல்லோரும் கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதல் மறுக்கப்பட்டு அல்லது வேறொரு விளக்கம் கொடுக்கப்பட்டு, பிரசங்கிக்கப்படும் எந்த ஒரு சுவிசேஷமும் உயிரற்றதாகிவிடும் என்பதை என்றென்றும் நினைவில் கொள்ளவேண்டும்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் : முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறத (ரோமர் 1 : 16 ) ✝





# பரிசுத்தமும், நடத்தையில் தூய்மையும்

*Sanctification And Sexual Purity*

Rex Banks



அப்போஸ்தலனாகிய பவுலும், அவரோடிருந்தவர்களும் தெசலோனிக்கே பட்டணத்தை விட்டுக் கடந்து சென்ற போது அங்கேயிருந்த கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் விக்கிரகங்களைவிட்டு ஜீவனுள்ள மெய்யான தேவனிடத்தில் திரும்பினவர்களாயிருந்தார்கள் (Iதெச.1:9) விக்கிரகங்களிலிருந்து மனமாற்றமடைந்தார்கள். இருளுக்குப் பதிலாக வெளிச்சத்தையும், அறியாமைக்குப் பதிலாக அறிவையும், கலகத்திற்குப் பதிலாக கீழ்ப்படிதலையும் தெரிந்துகொண்டார்கள். ஆனால், அவர்களுடைய முந்தய பழக்கவழக்கங்கள் மெதுவாகத்தான் மங்கும் என்பதைப் பவுல் அறிந்திருந்தார். மேலும், விக்கரக வழிபாட்டில் திரும்பத் திரும்ப அரங்கேற்றப்படும் பாவம் பாலியல் ஒழுக்கக்தேடு தான். A.T. ROBERTSON என்னும் வேதவல்லுனர், "விக்கிரக வழிபாட்டு மதங்கள் தங்கள் பக்தர்களிடம் பரிசுத்தத்தை எதிர்பார்ப்பதில்லை. ஏனென்றால், அவர்களின் தேவர்களும், தேவதைகளுமே ஒழுக்க ரீதியில் தங்களைத் தாங்களே மிக மோசமாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள்" என்று சொன்னார். அவர்களுடைய வழிபாட்டு ஸ்தலங்களில் வழிபட வரும் ஆண்களுக்காக பெண் பூசாரிகள் இருந்துள்ளனர். ஆனால், தேவன் நம்மை அவருடைய நோக்கத்திற்கு இசைவான குடும்ப வாழ்கை வாழும்படியாக அழைத்திருக்கிறார். இந்த உயரிய மாதிரியை விக்கிரக வழிபாட்டு உலகில் வாழ்ந்து கொண்டிருந்த தெசலோனிக்கே கிறிஸ்தவர்களிடத்தில் வைப்பது அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அவசியமாயிருந்தது.

இந்த உயரிய மாதிரி தெசலோனிக்கே கிறிஸ்தவர்களுக்கு I தெச. 4:17 வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. பவுல் இந்தப் பகுதியில் மூன்று காரியங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்.

1. நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டும் என்று நினைவுபடுத்துகிறார்.

2. அவர்கள் உண்மையாகவே அந்த வழியில் நடந்து வருவதை அவர் ஏற்றுக் கொள்கிறார்

3. அவர்கள் இன்னும் அதிகமாய்த் தேவனுக்குள் தேறும்படிக்கு அவர்களை உற்சாகப்படுத்துகிறார். (4 : 1)

பவுல் ஒருபோதும், தன்னை முற்றிலும் தேறினவராக எண்ணவில்லை (3 : 10 ; 4 : 10) தெசலோனிக்கேயர் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (4:3) அதற்கு என்னவெல்லாம் அவசியமென்று தொடர்ந்து சொல்கிறார். நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்டு கொள்ளும்படி அறிந்து : இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார். பவுலைப் பொறுத்தவரை பரிசுத்தம் என்பது ஒரு கிறிஸ்தவனால் தெரிந்து கொள்ளப்படலாம் அல்லது தெரிந்து கொள்ளப்படாமலும் இருக்கலாம் என்பது போன்றதல்ல. மாறாக, இது ஒரு கிறிஸ்தவன் கர்த்தரோடு நடப்பதின் ஓர் அவசியமான பகுதியாயிருக்கிறது.

இப்படிப்பட்ட காரியங்களில் கீழ்ப்படிவதற்குத் தூண்டுகோலாக இருப்பது, கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார் என்னும் உண்மை தான் (4:6) பவுல் இந்த் தெசலோனிக்கே பட்டணத்து சபையாரை அதிகமாக நேசித்தபடியால் அவர்கள்மேல் வார்த்தைகளை அதிகமாக அள்ளி வீசாமல் வார்த்தைகளைச் சுருக்கிக் கொண்டார். பின்பு, ஆயத்தமில்லாதவர்கள் மீது வரவிருக்கும் அழிவைக் குறிக்கும் படியாக, அவர்களை எச்சரிக்க அவர் தயங்கவில்லை (5:3) பின்னும் அப்போஸ்தலனாகிய பவுல் பெரும்பாலான மக்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் என்னும் உண்மையையும் அவர்களுக்கு உணர்த்தினார் (1:9) இவைகளெல்லாவற்றையுங் குறித்து பவுல் மிக ஜாக்கிரதையாக இருந்தார். பவுல் தெசலோனிக்கே பட்டணத்தில் இருந்தபோது இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங் குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார் என்று எச்சரித்தார். மேலும், பவுல் ஆவியினால், வழி நடத்தப்பட்டு, தேவன் சுவிஷத்தினால் அவர்களைப் பரிசுத்தத்திற்கே அழைத்தார். (Iதெச.4:7) என்று சொன்னார். ஒரு கிறிஸ்தவன், உலகத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கக் கூடாது. இந்தப் புத்திமதியை அசட்டை பண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத்தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான் (4:8).



சகோதரர்களே, இன்றைய நாட்களில் மத வட்டாரங்களில் பரிசுத்த ஜீவியத்தைப் பற்றி பிரதானமாகப் பேசப்படுவதில்லை என்பதைக் கவனித்திருக்கிறீர்களா? ஓரினச் சேர்க்கை சம்பந்தமான பிரச்சனைகள் ஏற்படும் போது, மாற்று வாழ்கை முறையைத் தழுவுபவர்களைக் கண்டிப்பது தவறு என்று முந்திக் கொண்டு சொல்லுகிறார்கள்.

தவறான உறவுகள் பாவமென்று சுட்டிக்காட்டப்பட்டால், நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள் என்னும் பதில்களைத் தான் நாம் காண்கிறோம். ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளுக்கு மோசமான விளைவுகள் காத்திருக்கிறது என்று எடுத்துச் சொல்லப்பட்டாலும் அதற்கும் எதிர்ப்புகள் பல கோணங்களிலிருந்து கிளம்புகின்றன. ஆனால், இயேசு கிறிஸ்து, மனுஷருடைய இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும் புறப்பட்டு வரும் என்று சொன்னார் ( மாற்கு 7:21-23 ) அவர் சொல்வதில் நியாயம் இருக்கிறது. ஏனென்றால், ஒட்டுமொத்த பூமிக்கும் அவரே நியாயாதிபதியாயிருக்கிறார் ( அப். 17:31 )

†

**விடை :-**

1. தேவனுடைய, ஆரம்பம்

2. யோவான், கலிலேயாவிலே, சுவிசேஷத்தை

3. இயேசு, சுவிசேஷத்தைப் பிரசங்கித்து

4. பூலோகமெங்குமுள்ள, ஜாதிகளுக்கும்

5. வெட்கப்படேன், யூதரிலும், கிரேக்கரிலும், இரட்சிப்பு,

பெலனாயிருக்கிறது.

6. கெட்டுப்போகிறவர்களுக்கே, கிறிஸ்துவின்,

அவிசுவாசிகளாகிய, குருடாக்கினான்.

# வழி தப்பிப்போனவர்களைத் திருப்புதல்

## *Restoring the Erring*

Gary C. Hampton

"சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும் போது மற்றொருவன் அவனைத் திருப்பினால் தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்" ( யாக்கோபு 5 : 19-20 )

மேற்சொல்லப்பட்ட வசனத்தில் யாக்கோபு ஆசியர், ஒருவர் சத்தியத்திலிருந்து விலக முடியும் என்று நம்புவது வெளிப்படையாகிறது. இருந்தபோதிலும் இல்லாத ஒன்றிலிருந்து ஒருவர் எப்படி விலக முடியும்? எனவே, சத்தியமானது உண்மையாயிருக்கிறபடியினாலே கிறிஸ்தவர்கள் அதிலிருந்து விழுந்து போக முடியும் என்று யாக்கோபு ஆசிரியர் கூறுகிறார். இதே கருத்தை, அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியா நாட்டு சபையாரிடம் "இதோ, நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மேலும், விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவனுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன்" ( கலாத்தியர் 5 : 2-4 : I தீமோத்தேயு 2 : 16 -18 )

ஒருவரைத் திருப்புவதென்பது அவரைத் தன்னுடைய பழைய வாழ்க்கைப் பாதையிலிருந்து, புதிய வாழ்க்கைப் பாதைக்கு மாற்றுவதாகும். அப்படிப் பாதையைத் திருப்புவதினால், அவருடைய ஆத்துமாவை மரணத்திலிருந்து திருப்ப முடியும். இது சரீர மரணமாகாது. ஏனென்றால் எல்லோரும் ஒரேதரம் மரிக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் (எபிரெயர் 9:27) ஆனால், யோவானால் வெளிப்படுத்தின விசேஷம் 20 :13-15 ம் வசனங்களில் இரண்டாம் மரணத்தைக் குறிக்கும் செயலாகும். தப்பிப்போன ஒருவரை நாம் தேவனிடத்தில் மன்னிப்பைக் கோரச் செய்யும் போது, ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து திரளான பாவங்களை மூடுவோமென்று யாக்கோபு ஆசிரியர் கூறிகிறார்.



நாம் இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு கிறிஸ்துவுக்குள் இருக்கும் நம்முடைய சகோதர சகோதரிகளின் ஆவிக்குரிய பாதுகாப்புக்காக நாம் விழித்திருப்பது அவசியமாயிருக்கிறது. அவர்கள் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் அவர்களைச் சீர்பொருந்தப்பண்ணும்படி சாந்தமுள்ள ஆவியோடே அவர்களிடத்தில் சொல்ல வேண்டும் அப்போது அவர்களுடைய ஆத்துமாக்கள் நித்தியநித்தியமாய் இரட்சிக்கப்படும். ✝

## தகப்பன் தங்கள் குழந்தைகள் சம்மந்தமாகச் செய்யும் தவறுகள்

(எபேசியர் 6:4)

- தங்கள் பிள்ளைகளைவிட வேலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல்
- குடும்பத்திற்குத் தலைவனாக இல்லாமலிருத்தல்
- குழந்தைகளின் சொல்லுக்கு செவிகொடுக்கத் தவறுதல்
- குழந்தைகளுடைய திறமைக்கு அப்பால் அவர்களுக்கு இலக்குகளை நிர்ணயித்தல்
- அவர்கள் மீது நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக அவர்களை சந்தேகப்படுதல்
- மற்றவர்களுக்கு முன்பாக தங்கள் குழந்தைகளைக் கடிந்து கொள்ளுதல்
- அன்புக்கு மாற்றாக வேறு பொருள்களை அவர்களிடம் காட்டுதல்

## * நரகம் *



1. உண்மையாகவே இருக்கும் ஓர் இடம் - மத். 2:31-46 ; மாற்கு. 9:43-45
2. வேதனையுள்ள ஓர் இடம் - வெளி. 20:14-15
3. இளைப்பாறுதலற்ற ஓர் இடம் - வெளி. 14:11
4. துன்மார்க்களுக்கான ஓர் இடம் - மத். 25:41 ; பேதுரு. 4:17
5. நித்தியமான ஓர் இடம் - மத். 25:46

# சபையின் பணி
## The Mission of the church
**Dale Grissom**

ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது தான் சபையின் பணி. இவ்வுண்மையை சில கிறிஸ்தவர்கள் மட்டும் உணர்ந்திருப்பது போல் தெரிகிறது. ஆனாலும் சிலர் தங்கள் வாழ்க்கையில் ஆத்தும ஆதாயத்திற்கு முதலிடத்தைக் கொடுக்கத் தவறுகிறார்கள். இன்னும் பலர், ஆராதனையிலும், வேதபாட வகுப்புகளிலும் கலந்து கொள்ளுவது தான் முக்கியம் என்று நினைத்துக் கொண்டு, ஆத்தும ஆதாயம் செய்யும் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள்.

பெரும்பாலான நேரங்களில் சிலர் தேவனுடைய வார்த்தையை நிதானித்துப் படிப்பதை அலட்சியம் செய்து விட்டு தங்களின் பக்திவிருத்திக்காக வேதபாட வகுப்புகளையும், மேடைப்பிரசங்கங்களையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலை மாற வேதபாட வகுப்புகளில் ஊழியம் அல்லது சுவிசேஷப் பணியைக் குறித்த பாடங்களையும், பிரசங்கங்களில் ஊழியம் செய்வதில் கிறிஸ்தவர்களுடைய பொறுப்புகள் பற்றிய காரியங்களையும் அதிகமாக வலியுறுத்த வேண்டும்.

ஆதித் திருச்சபையானது சுவிஷேத்தைப் பிரசங்கிப்பதற்காகவும், போதிப்பதற்காகவும் எல்லா இடங்களுக்கும் சென்றது. ஆனால், இந்த இருபத்தொன்றாம் நூற்றண்டு சபையானது அந்த மாதிரியிலிருந்து விலகி வெகுதூரத்தில் சென்று கொண்டிருக்கிறது. இப்போதெல்லாம் நாம் உள்ளூர் ஊழியங்களில் விருப்பம் காட்டாமல் பல இடங்களுக்குச் செல்வதில் ஆர்வம் காட்டுகிறோம். நாம் வாழும் இடங்களில் சுவிசேஷத்தைப் பரப்ப நமக்கு விருப்பம் இருப்பது போல் தெரியவில்லை ஆனால், விருப்பமுள்ளவர்களுக்கு நம் கதவுகள் எப்போதும் திறந்திருக்கிறது என்று நம்மை நாமே சமாதானம் செய்துகொள்ளுகிறோம். சகோதரரே இது சரியாகாது !

நாம் போய் போதிக்கிற விஷயத்தில் தேவனுடைய கட்டளைக் கேற்ப வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று நினைத்து நம்மை நாமே முட்டாள்களாக்கிக் கொண்டிருக்கிறோம். பெரும்பாலான



மனமாற்றங்கள் தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொரு தேவனுடைய வார்த்தைகளைப் படிக்கும் "தனியாள்" ஊழியத்தின் விளைவாகத்தான் ஏற்படுகின்றன என்னும் உண்மையை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

"தனியாள்" ஊழியத்தை நம் வாழ்வின் ஓர் அங்கமாக்கிக்கொள்ள நாம் கவனமாயிருக்க வேண்டும். பிரதான கட்டளையை உலகெங்கும் போய் எடுத்துச் செல்ல வேண்டுமென்பது கிறிஸ்தவர்களுக்கான கட்டளையாகும். நம்முடைய சொந்த ஊர்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தொடங்கி, அதன் மூலம் உலகெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முடியும். நம்மைச் சுற்றிலும் இருப்பது தான் உலகம் " நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்'' என்று இயேசு கிறிஸ்து சொன்னார். ( யோவான் 14 : 15 )

வாழ்க்கை மிக வேகமாகக் கடந்து போகிறது. நமக்கு வாய்ப்பும், நேரமும் இருக்கும் போதே நாம் செயல்பட வேண்டும். தேவனுடைய பிள்ளையாக உங்கள் பொறுப்புகளை ஜாக்கிரதையாக சிந்தித்துப் பாருங்கள் !

### யூதாவின் ராஜாக்களும் காலமும்

| | | | |
|---|---|---|---|
| 1. | ரெகொபெயாம் | - | கி.மு 933 - 916 |
| 2. | அபியா | - | கி.மு 915 - 913 |
| 3. | ஆசா | - | கி.மு 912 - 872 |
| 4. | யோசபாத் | - | கி.மு 874 - 850 |
| 5. | யோராம் | - | கி.மு 850 - 843 |
| 6. | அகசியா | - | கி.மு 843 |
| 7. | அத்தாலியா | - | கி.மு 843 - 837 |
| 8. | யோவாஸ் | - | கி.மு 843 - 837 |
| 9. | அமத்சியா | - | கி.மு 803 - 775 |
| 10. | உசியா | - | கி.மு 787 - 755 |
| 11. | யோதாம் | - | கி.மு 749 - 734 |
| 12. | ஆகாஸ் | - | கி.மு 741 - 726 |
| 13. | ஓசியா | - | கி.மு 730 - 721 |
| 14. | எசேக்கியா | - | கி.மு 726 - 697 |
| 15. | மனாசே | - | கி.மு 697 - 642 |
| 16. | ஆமோன் | - | கி.மு 641 - 640 |
| 17. | யோசியா | - | கி.மு 639 - 608 |
| 18. | யோவகாஸ் | - | கி.மு 608 |
| 19. | யோயாக்கீம் | - | கி.மு 608 - 597 |
| 20. | யோயாக்கின் | - | கி.மு 597 |
| 21. | சிதேக்கியா | - | கி.மு 597 - 586 |

# பரலோகத்திற்கு நேராக ஒருவருக்கு வழிகாட்ட நீங்கள் என்ன செய்யலாம்?

## What You Might Do To Point Someone Toward Heven Today?

Neal Pollard.

1. உங்களை விரும்பாதவரையும், உங்களை நன்றாக அறியாதவரையும் பாராட்டுங்கள்.
2. உங்களை மோசமாக நடத்தியவர்களிடத்தில், உங்கள் பேச்சிலும், செயலிலும், மனநிலையிலும் உயரிய ஒழுக்க நெறியை வெளிப்படுத்துங்கள்
3. சோர்வில் இருக்கும் ஒருவரை உற்சாகப்படுத்தும் வகையில் உங்களின் வார்த்தைகள் அமையட்டும்.
4. வியாதியில் இருப்பவர்களை, இழந்துபோனவர்களை, ஆவிக்குரிய பிரகாரமாக சறுக்கி விழுந்தவர்களை, பிரச்சனையில் சிக்கித் தவிப்பவர்களைப் போய் நேரில் சந்தியுங்கள், தொலைபேசியில்
5. அழைத்து விசாரியுங்கள். அவர்களை கடிதம் மூலமாகவும் விசாரியுங்கள்.
6. கிறிஸ்து உங்கள் வாழ்வில் ஏற்படுத்திய நேர்மறையான தாக்கத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
7. உங்கள் வாழ்க்கைத்துணையோடும், குழந்தைகளோடும் நேரத்தை கர்த்தருக்காக அதிகமாகச் செலவிடுங்கள்.
8. சபையில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளைக் குறித்து உங்கள் நண்பர்களிடமோ அல்லது அயலகத்தாரிடமோ தெரிவித்து அவர்களைஅன்பாக அழையுங்கள்.
9. மற்றவர்களுக்கு கிறிஸ்துவை வெளிப்படுத்தும் செயல்களான பராமரித்தல், ஆகாரங்கொடுத்தல் போன்ற காரிங்களில் ஈடுபடுங்கள்.
10. உங்களுக்குப் பிடித்தமான ஒரு வசனப்பகுதியை உங்களுக்குப் பிடித்தவர்களிடம், அயலகத்தாரிடம் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒரு வேளை அது அவர்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலைக்கு நேரடியாகப் பொருந்தலாம்.
11. அறிமுகம் இல்லாதவர்களைப் பார்த்து புன்னகைப்பதற்கோ, அவர்களுக்கு வணக்கம் சொல்வதற்கோ வாய்ப்புக் கிடைத்தால் அதை ஒருபோதும் நழுவவிட வேண்டாம்.



12. நீங்கள் பேருந்திலோ, தொடர்வண்டியிலோ அல்லது மகிழ்வுந்திலோ மற்றவர்களோடு பயணத்தைப் பகிர்ந்துகொள்ளும் போது வேதாகமத்தை வாசியுங்கள். அப்படி நீங்கள் செய்யும் போது அது ஆவிக்குரிய ரீதியில் உரையாடலைத் தொடங்குவதற்கு வசதியாயிருக்கும்.
13. தேவனுடைய வார்த்தையில் ஒரு குறிபிட்ட பகுதியை எடுத்துக்கொண்டு அதைப் படிப்பதில் உங்கள் நேரத்தைச் செலவு செய்யுங்கள். அது உங்களுக்கு சிறந்த முறையில் ஆத்தும ஆதாயம் செய்ய உதவும்.
14. புதிய கிறிஸ்தவர்களை தேனீர் கொடுத்து உபசரியுங்கள்.
15. தீமையை நன்மையினால் வெல்லுங்கள்
16. மறு கன்னத்தைக் காட்டுங்கள்
17. மற்றவர்கள் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதைவிட அதிகமாகச் செய்யுங்கள்.
18. உங்கள் வார்த்தைகள் எப்போதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.
19. காலத்தைப் பிரயோஜனப்படுத்துங்கள். (ஜனங்கள் எப்போதும் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் நீங்கள் அவர்களைப் பார்த்திராவிட்டாலும் கூட அவர்கள் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்).
20. வயதானவர்களிடத்திலும், வாலிபர்களிடத்திலும் அன்பு காட்டுங்கள். அவர்கள் அதிகமாக அதை விரும்புகிறபடியால் அதின் மதிப்பை உணர்ந்து கொள்வார்கள்.
21. உங்கள் செல்வாக்கு இருக்கும் மற்ற மதத்தினரிடம் அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி, ஆவிக்குரிய புத்தகங்கள் மற்றும் கைப்பிரதிகளைக் கொடுங்கள்.
22. மற்றவர்களிடத்தில் கருணை காட்டுங்கள்.
23. மற்றவர்களுக்காக இரங்கி கண்ணீர் விடுங்கள்.
24. உங்கள் வாழ்கையையும், இருதயத்தையும், உண்மையுள்ள -வைகளால், உயர்வானவைகளால், நீதியானவைகளால், சுத்தமானவைகளால், அழகானவைகளால் நிரப்புங்கள். அப்போது உங்களால் சமுதாயத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.
25. இப்படி மற்றவர்களுக்கு கிறிஸ்துவைப் போல சகலவற்றிலும் மாதிரியாக இருக்கும் போது ஒருவருக்கு உங்களால் பரலோகம் போவதற்கான வழியை நாம் காட்ட முடியும்.

## வித்தியாசமாயிருப்பது நல்லதா அல்லது கெட்டதா?

## *Is "Different" Good or Bad?*

***Jimmy Jividen***

ஆராதனையைத் தலைமையேற்று நடத்துபவர்கள் "நான் வித்தியாசமாக எதையாவது செய்ய வேண்டும்" என்று அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். இது நல்லதா அல்லது கெட்டதா?

வித்தியாசமானது, வேதவாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆராதனை ஒழுங்கிற்கும், நோக்கத்திற்கும் நெருக்கமாக இருந்தால் அது நல்லது தான். மீட்டமைக்கும் பணி நடந்து கொண்டு தானே இருக்கிறது.

ஆனால், வித்தியாசமானது, வேதவாக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆராதனை ஒழுங்கிற்கும், நோக்கத்திற்கும், இசைவாயிருக்கவில்லையென்றால் அது கெட்டது. ஏனென்றால், விழுந்து போகுதலும் தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கிறது. வித்தியாசமாயிருக்க வேண்டுமென்பதற்காக, வித்தியாசமாயிருப்பதில் எந்த நன்மையுமில்லை.

ஒவ்வொரு தலைமுறையிலும், சபையை நடத்துபவர்கள் தேவனுக்கேற்ற ஆராதனையை ஏறெடுப்பதில், இருவேறு பிரச்சனைகளைச் சந்தித்து வருகிறார்கள். ஒருமுனையில் துதித்தலின் உண்மையான நோக்கத்தையும், நடைமுறையையும் மூடி மறைக்கும் மனித பாரம்பரியங்கள். மறுமுனையில் ஆராதனையின் நோக்கத்தையும் முறைமையையும் மூடி மறைக்கும் கலாச்சாரத்தோடு ஒத்துப்போகும் நிகழ்கால ஆழிப்பேரலை. கடந்தகால மனிதப் பாரம்பரியங்களாக இருந்தாலும் சரி, புதிய ஏற்பாட்டு சபையின் ஒழுங்கிலிருந்தும், நோக்கத்திலிருந்தும் வேறுபட்டால் அது வீழ்ச்சியைத் தான் குறிக்கும். இத்தகைய காரியங்களை இயேசு கிறிஸ்து கடிந்து கொண்டார். "மாயக்காரரே உங்களைக் குறித்து; இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார். ( மத்தேயு 15 : 7-9 ).



ஒவ்வொரு தலைமுறையிலும் "ஆராதனையை மீட்டமைத்தலின் தேவை" இருக்கிறது. இது ஆராதனையில் மாற்றத்தைக் கொண்டு வந்து மனிதர்களுக்குப் பிரியமான ஆராதனையை ஏறெடுப்பதினால் வருவதில்லை. இது புதிய ஏற்பாட்டு சபையில் போதிக்கப்பட்டு கடைபிடிக்கப்பட்டு வரும் ஆராதனையில் மாற்றத்தை ஏற்படுத்தி, விக்கிரகாராதனைக்காரர்கள், களியாட்டங்களில் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த பரவச நிலையை அடைவதினால் வருவதில்தை. எப்போதும் தேவை என்னவென்றால் ஆராதகையை மனிதனுடைய ஆவி, மனம், மற்றும் இருதயத்தோடு ஆவிக்குரிய பிரகாரமாக ஈடுபடுவத்துவது தான். எப்போதும் தான் - அதாவது, தேவனுக்குப் பிரியமாக அவர் அங்கீகரித்திருக்கிறவைகளைச் செய்வதுதான். தேவன் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆராதனையின் அளவுகோல் பழைய பாரம்பரியத்துக்கோ அல்லது நிகழ்கால காலச்சாரத்திற்கோ இசைவாக ஆராதனையில் மாற்றங்களைச் செய்வதில் இல்லை. ஆனால், வேதவாக்கியங்களில் எவைகள் போதிக்கப்பட்டிருக்கிறதோ அவைகளுக்கு இசைந்த வாழ்கையை வாழ்வதில் தான் இருக்கிறது. †

## ராஜ்யத்தின் தன்மைகள்

- தேவனுடைய ராஜ்யம் தெய்வீக ஆரம்பத்தைக் கொண்டபடியால் அது என்றென்றைக்கும் அழியாதது, அது அசைக்க முடியாதது (தானி. 2:44; எபி. 12:28).
- இது எல்லைகளைக் கடந்து உலகெங்கும் வியாபித்திருக்கிறது (மாற்கு 16:15; மத்தேயு 28:19)
- கிறிஸ்துவுக்கு அவருடைய ராஜ்யத்தில் சகல அதிகாரமும் உண்டு (மத்தேயு 28:18)
- எல்லோரும் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்பட்டிருக்கிறார்கள் (மத்தேயு 28:20; யோவான் 12:48).
- மறுபடியும் பிறந்தவர்கள் அதாவது ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்தவர்கள் மட்டுமே இந்த ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும்.(யோவான் 3:35)
- இந்த ராஜ்யம் இப்பூமியில் இப்போதும் நம்மோடிருக்கிறது. இவ்வுலகம் முடிவுக்கு வந்தவுடன் தொடர்ந்து பரலோகத்தில் இது இருந்துகொண்டே இருக்கும். கிறிஸ்து இப்பூமிக்கு மறுபடியும் வரும் போது இப்பூமியை அக்கினியால் அழிப்பார். ஆனால், இந்த ராஜ்யத்தையோ பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பார். (II பேதுரு 3:10-13; I கொரி. 15:24).

# சில காரியங்கள் பலிகளை விட மேலானது

## Some things are greater than sacrifice

Cecil may Jr.

"பலி" என்னும் வார்த்தை தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கும் ஆராதனையில் இடம் பெற்றிருக்கும் சம்பிரதாயங்களையும், சடங்காச்சாரங்களையும் குறிக்கும். இரண்டு காரியங்கள் பலிகளைவிட மேலானது என்று வேதாகமம் சொல்கிறது. இது வழக்கமாக ஏறெடுக்கப்படும் ஆராதனை முறைமைகள் முக்கியமற்றது என்று பொருள்படாது. மாறாக, மற்ற காரியங்கள் இதைவிட முக்கியமானது என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறது.

### ❁ பலிகளைவிட கீழ்ப்படிதல் மேலானது ❁

சவுல் அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து, அவன் மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும்,ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக்கடவாய் என்று தேவனால் கட்டளையிடப் -பட்டிருந்தான். பின்பு அவன் யுத்தத்திற்குச் சென்றான். ஆனால், அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாகையும், ஆடுமாடுகளில் சிலவற்றையும் கொல்லாமல் விட்டுவிட்டான். சாமுவேல் தீர்க்தரிசி சவுல் கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படியாததைக் குறித்துக் கேட்டபோது அவன் சாக்குப்போக்குகளைச் சொன்னான்.



சவுல், சாமுவேல் தீர்க்கதரிசியிடம் ஜனங்களோ உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குக் கில்காலிலே பலியிடுகிறதற்காக கொள்ளையிலே சாபத்தீடாகும் ஆடு,மாடுகளிலே பிரதான -மானவைகளைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள் என்றான். அதற்குச் சாமுவேல் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும் ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம் என்று சொன்னார். ( *I சமுவேல் 15:21,22* )



தேவனுக்கு பலிகளைச் செலுத்துவதே தேவனுடைய கட்டளையாகத்தான் இருந்தது. பலிகளைச் செலுத்தாமல் இஸ்ரவேல் ஜனங்களால் தேவனுக்கு கிழ்ப்படிய முடியாது. ஆனால், அதே நேரத்தில் தேவனுக்கு ஆராதனை ஏறெடுப்பதற்காக மற்ற காரியங்களில் கீழ்ப்படியாமலிருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஆராதனையின் எல்லா முறைமைகளையும் சரியாக நிறைவேற்றினாலும் கூட, தேவனுடைய மற்ற கட்டளைகளை நாம் மீறினால் போக்குச் சொல்ல நமக்கு இடமில்லை.

### ❁ பலிகளைவிட இரக்கம் மேலானது ❁

ஓசியா தீர்க்கதரிசி, இஸ்ரவேல் மற்றும் யூதாவிலிருந்த விசுவாசமற்ற ஜனங்களிடம் பேசினார். ஆராதனையின் முறைமைப்படி அவர்கள் ஆராதனையில் ஒன்றுகூடி இருக்கிறார்கள். ஆசாரியர்களும் கூட அப்படி ஒன்று கூடியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் கொள்ளைக்காரர்களும், கொலைகாரர்களும், தங்கள் சுயதேசத்தவருக்கு விரோதமாய் கொடூரமான பாவங்களில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களிடம் தேவன் "பலியை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன் " (ஓசியா 6 : 6 ) என்றார்.

இயேசு கிறிஸ்து ஓசியாவின் இவ்வார்த்தைகளை இரண்டு முறை மேற்கோள் காட்டியிருக்கிறார். ஒன்று அவர் பாவிகளோடு போஜனம் பண்ணும் போது பரிசேயர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சந்தர்ப்பத்தில் (மத்தேயு9:13). மற்றொன்று, ஓய்வுநாளில் கிறிஸ்துவின் சீஷர்கள் கதிர்களைக் கொய்து தின்றபோது, அதற்கு பரிசேயர்கள் எதிர்ப்புத் தெரிவித்த போது (மத்தேயு12:7). மேற்கோள் காட்டியிருக்கிறார். இந்த வார்த்தைகளை அவர்கள் புரிந்து கொண்டால் தாம் யார் என்பதை அறிந்தது கொள்வார்கள் என்று இயேசு சொன்னார்.

மீகா தீர்க்கதரிசி தன்னுடைய தீர்க்கதரிசனத்தில் இதே கருத்தை வலியுறுத்துகிறார். "என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில் வந்து உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்து கொள்வேன்? தகனபலிகளைக் கொண்டும். ஒரு வயது கன்றுக்குட்டிகளைக் கொண்டும் அவர் சந்நிதியில் வரவேண்மோ? ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின் பேரிலும், எண்ணெயாய் ஓடுகிற பதினாயிரங்களான ஆடுகளின் பேரிலும் கர்த்தர் பிரியமாயிருப்பாரோ? என் அக்கிரமத்தைப் போக்க என் முதற்பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப் போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்க வேண்டுமா? மனுஷனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயஞ்செய்து இரக்கத்தைச் சிநேகித்து உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். ( மீகா 6 : 6-8 )

இவ்வசனத்தை நம் வாழ்வில் பொருத்திப் பார்த்தால்: கர்த்தருடைய நாளில் நாம் தேவனை ஆராதிப்பதற்காக ஒன்று கூடுவது, ஜெபிப்பது, கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவது போன்றவைகளெல்லாம் முக்கியமானதுதான். ஆனால், அதைவிட முக்கியமானது பிறனிடத்தில் அன்பு கூடுவது. பணிவான கீழ்ப்படிதலுடன் கர்த்தருக்குச் சேவை செய்ய நாடுவது. நாம் எப்படி நடத்தப்பட வேண்டுமென நினைக்கிறோமோ அப்படியே மற்றவர்களையும் நடத்துவது தேவையிலிருப்பவர்களுக்கு உதவி செய்வது போன்றவைகளாயிருக்கிறது.

நாம், தேவனை அவருடைய கட்டளைகளின்படி தவறாமல் ஆராதித்தால் கூட அது அனுதின ஜீவியத்தில் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு மாற்றாகாது. அதேபோல், இது மற்றவர்களை மோசமாக நடத்துவதற்கோ அல்லது மற்றவர்களைச் சுரண்டுவதற்கோ அனுமதி கொடுப்பதில்லை.

## அடிச்சுவடுகள்

ஒவ்வொரு குழந்தையும் யாரோ ஒருவரைப் பின்பற்றும்;
அக்குழந்தையின் மாதிரி யார் என்பது நமக்குத் தெரியாது
அக்குழந்தை யாருடைய அடிச்சுவடுகளில்
செல்லும் என்றும் நமக்குத் தெரியாது

ஒரு சிறுபையன் தன் தகப்பனைப் போல
செய்யவும் நடக்கவும் முயற்சிக்கலாம்
தகப்பன் சொல்லும் காரியங்களைக் கவனித்து
அதே மொழி நடையை அவன் பிரதிபலிக்கலாம்;

ஒரு சிறு பெண் தன் தாயைப் போல
ஒழுக்க நெறிகளைக் கையாள விரும்புகிறாள்
தன் தாய் செய்யும் எல்லாவற்றையும் பார்த்து
அதை அப்படியே பிரதிபலிக்க விரும்புகிறாள்

உறவினராக இருந்தாலும் அயலகத்தாராக இருந்தாலும்
நீங்கள் மாதிரியாக இருக்க முடியும்
ஒவ்வொரு குழந்தையும் யாரோ ஒருவரைப் பின்பற்றும்
அதற்கு நீங்களோ நானோ மாதிரியாக இருக்கமுடியும்.





# ஆராதனையில்
## On Worship

Dolton Key

சங்கீதக்காரனாகிய தாவீது, கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்னும் வார்த்தைகளைச் சொன்னபோது கேட்டபோது மகிழ்ச்சியாயிருந்தார். (சங்கீதம் 122:1). அப்போஸ்தலனாகிய பவுல் சீஷர்களுடன் அப்பம் பிட்கும்படி அதாவது ஆராதிக்கும்படி துரோவா பட்டணத்தில் ஏழு நாட்கள் தங்கியிருந்தார். ( அப் 20 : 7 ) அதற்கு முன்பு, பிலிப்பி பட்டணத்தில் பவுலும், சீலாவும் சிறையில் இருந்துகொண்டு நடுராத்திரியிலே தேவனை துதித்துப் பாடியிருக்கிறார்கள். ( அப் 16 : 25 ) தூய்மையான மற்றும் சரியான ஆராதனை மூலமாக நீதிமான்களின் உற்சாகம் இன்னும் அதிகமாகிறது.

இருந்தபோதிலும், நாம் ஆராதனையிலிருந்து எவைகளைப் பெற்றுக் கொள்கிறோமோ, அதைவிட அதிகமான காரியங்கள் அதிலிருக்கிறது. இதை வேறு விதமாகச் சொன்னால், ஆராதனையினால் நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் மாத்திரம் ஆராதனையின் நோக்கமல்ல. புதுப்பிக்கப்படுதல், நம்பிக்கை, பெலன் போன்ற அருமையான நன்மைகளை, ஆராதனையின் சரியான நோக்கத்தோடு கூட நாம் குழப்பிக் கொள்ளக்கூடாது. ஆராதனையின் அடிப்படை மற்றும் மையநோக்கம் தேவனைத் துதிப்பதும், போற்றுவதும், மகிமைப்படுத்துவதுமாயிருக்கிறது. ஆராதனையானது எப்போதுமே பிரதானமாக தேவனை நோக்கி ஏறெடுக்கப்படவேண்டும்.

நம் கண்களை பரத்திலிருந்து நாம் விலக்கும் போது அங்கே பிரச்சனைகள் எழும்பி விடுகிறது. தேவனை மாத்திரம் ஆராதிப்பதிலிருந்து நம் கவனம் சிதறும் போது, நாம் சபையாகக் கூடிவரும் போது கூட தேவனை ஆராதிக்காமல், நம்மை நாமே ஆராதிக்கத் தொடங்கி விடுகிறோம்.

ஆராதனையில் பரமபிதாவுக்கு எது பிரியமாயிருக்கிறது என்பதை விட நமக்கு எது நன்றாக இருக்கிறது என்கிற மனப்பான்மை மேலோங்கி நிற்பதை நாம் காண்கிறோம். ஆராதனையில் நாம் தேவனுக்கு மரியாதை செலுத்துவதற்குப் என்னும் மனநிலையுடன்

கடந்து செல்லுகிறோமே தவிர தேவனை மகிமைப்படுத்துவது குறித்த அக்கறை நமக்கில்லை.

நாம் சபை கூடுமிடத்தை விட்டுக் கடந்து செல்லும் போது எப்படி உணர்கிறோம் என்பது தான் ஆராதனை வெற்றி பெற்றதா அல்லது தோல்வியுற்றதா என்பதைத் தீர்மானிக்கிறது. பல சபைகளில் ஜெபங்கள், பாடல்கள், பிரசங்கங்கள் பொழுதுபோக்கு அம்சங்களாக மாறிவிட்டன என்னும் விமர்சனங்கள் எழும்பியிருக்கிறது.

பல சபைகளில் கைதட்டல் கட்டாயமாகிவிட்டது. ஒரு நல்ல ஆராதனையைக் கைதட்டிப் பாராட்டுவது நியாயந்தானே? என்னும் எண்ணம் மேலோங்கி நிற்கிறது. சத்தியம் மறக்கப்பட்டுவிட்டது. தேவன் ஒதுக்கப்பட்டிருக்கிறார். ஒழுங்கு, கிரமம் போன்ற காரியங்கள் பவுலின் நாட்களில் தான் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இது நமக்கானதல்ல என்னும் மனநிலை நிலவி வருகிறது. பொழுதுபோக்கு அம்சங்களில் நாம் மூழ்கிவிடுகிறோம்! இப்போது நாம் உண்மையாக யாரை ஆராதிக்கிறோம்? தேவனையா அல்லது நம்மை நாமே ஆராதித்துக் கொள்கிறோமா?

நாம் ஆராதனையில் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும். ஆராதனையில் தேவன் எவைகளில் பிரியமாயிருக்கிறாரோ அவைகளையே நாம் செய்ய வேண்டும். ஆனால், இந்த நன்மைகளெல்லாம் ஆராதனையின் நோக்கங்களாக இல்லாதிருந்தால், வழிவிலகிச் செல்லுதல் என்னும் உளையான சேற்றில் சிக்கித் தவிக்கிறவர்களாயிருப்போம்! நம் ஆராதனை சோதிக்கப்பட வேண்டும். அந்தச் சோதனை கூட்டக் கவர்ச்சியினாலோ, பொழுதுபோக்கு அம்சங்களினாலோ, பரவசமடைவதினாலோ அல்லாமல், தேவன் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவில் சுகந்த வாசனையான ஆராதனையாக இருக்க வேண்டும். †

## ✶ வாழ்க்கைத்துணை ✶

**முன்பொரு காலத்தில் நீ அந்நியனாயிருந்தாய்**
**பின்பு கனிவான பார்வையினால் என் கரங்களைப் பிடித்தாய்**
**நிர்மலமாக நாம் நிச்சியிக்கப்பட்டபோது நீ என் வாழ்வில்**
**ஒளியேற்றினபடியால் உன் இரு கரங்களையும் பிடித்துக் கொண்டேன்**
**இப்போது அக்காலம் கரைந்து கடந்துவிட்டது.**
**உண்மையாகவே நம் ஆத்துமாக்கள் ஒன்றிணைந்துவிட்டன**
**அனைவரும் கனாக்காணும் அவ்வன்பை அடைய**
**நீயும் நானும் கொடுத்து வைத்தவர்கள் தான்.**

-Laura veronica merodio





## கர்த்தருடைய பந்தியை கடைபிடிப்பதற்கான சில காரணங்கள்

Some reason for observing the Lord's supper

Ardron Hinton

1. இயேசு கிறிஸ்து "கர்த்தருடைய பந்தியை" தம்முடைய ராஜ்யத்தின் செயல்பாடுகளில் ஒன்றாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவருடைய ராஜ்யம் பெந்தேகொஸ்தே நாளிலே வல்லமையோடு ஆரம்பமானது.

2. இயேசு கிறிஸ்து தம்முடைய ஞாபகார்த்தமாக சிலைகளையோ, அல்லது தேவாலயங்களையோ எழுப்பச் சொல்லவில்லை. மாறாக, இருதயத்தோடு இணைந்த ஞாபகார்த்தச் செயலைச் செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

3. அவருடைய தியாகத்தை நாம் நினைவுகூருவது நமது கலைத்திறனைச் சார்ந்த ஒன்றல்ல, கலை நயத்தைச் சார்ந்த ஒன்றுமல்ல. கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும் ஒவ்வொருவரும் அவருடைய இருதயங்களில் சிலுவைக் காட்சியை உருவாக்கிக் கொள்ளவேண்டும். உதாரணமாக, அவருடைய கல்வாரி காட்சி ஒவ்வொருவருடைய கண்களில் அல்ல, ஒவ்வொருவரின் இருதயத்திற்குள்ளும் இருக்க வேண்டும் புதிய உடன்படிக்கையை இயேசு கிறிஸ்து முன்னறிவிக்கும் போது, அது இருதயத்திற்கானதாக இருக்கும் என்று சொன்னார்.

4. இயேசு கிறிஸ்துவோ அல்லது தேவ ஆவியினால் ஏவப்பட்ட தேவதாசர்களோ பூமிக்குரிய நினைவுச் சின்னங்களை அமைக்க அனுமதியோ, அதிகாரமோ கொடுக்கவில்லை. பூமிக்குரிய காரியங்களின் மீது கவனம் வைக்கப்படுவதற்குப் பதிலாக, சாதரண மக்களால் கூட எங்கும் செய்யக்கூடிய ஆவிக்குரிய காரியங்களில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த எளிய செயலினால் உலகெங்குமுள்ள விசுவாசிகள் பொதுவானதொரு காரியத்திற்காக நிற்கிறார்கள். இதற்குத் தடை, மனித சடங்காச்சாரங்களாலும், கட்டளைகளாலும் ஏற்படுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே இப்பந்தியை ஏற்படுத்தினபடியால், இது மிகவும் எளிமையானது. சாதாரண

வீட்டிலோ அல்லது சிறு அறையிலோ கடைப்பிடிக்க முடியும்.

5. நாம் கர்த்தருடைய பந்தியை தவறாமல் அனுசரிப்பதினால், இவ்வுலகத்திற்கு இயேசு கிறிஸ்து செய்ததை மறக்கவில்லை என்று அறிவிக்கிறோம். கர்த்தருடைய பந்தியானது இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையையும், இனி வரவிருக்கும் இரண்டாம் வருகையையும் இணைக்கிறது.

6. கர்த்தருடைய பந்தி, கிறிஸ்துவின் மரணத்தை நம் மனதில் பதியவைக்க அனுசரிக்கப்படுகிறது. கிறிஸ்து நமக்காகச் சகித்தவைகளை நாம் மறக்கவே கூடாது. கிறிஸ்துவின் மீது நமக்கிருக்கும் அன்பை, நம் மனதில், நம் எண்ணங்களில் நினைப்பூட்ட, வாரத்தின் முதல் நாளிலே கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதைவிட சிறந்த வழி எதுவாக இருக்க முடியும்? கர்த்தருடைய பந்தியை அலட்சியப்படுத்துவதோ அல்லது கர்த்தருடைய பந்தியின் போது நம் இருதயம் அங்கே இல்லாமலிருப்பதோ ஆவிக்குரிய நோய்க்கு வழிவகுத்துவிடும்.

"... என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்..." †

**தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் சம்மந்தமாகச் செய்யும் தவறுகள் (நீதி 31: 10-31)**

* குழந்தைகளின் ஆரம்ப வயதில் பணிச்சுமை காரணமாகவும் பணி மேம்பாட்டிற்காகவும் குழந்தைகளை விட்டு அடிக்கடி பிரிந்திருத்தல்
* வார்த்தைகளால் அவர்கள் முக்கியமற்றவர்கள் என்று தெரிவித்தல்
* குழந்தைகளின் கடந்தகால நடத்தை காரணமாக அவர்கள் மீது அவநம்பிக்கையை வெளிப்படுத்துதல்
* மற்றவர்களுடைய வார்த்தைகளால் தூண்டப்பட்ட குழந்தைகளுக்கு அளவுகோல்களை ஏற்படுத்துதல்
* அன்புக்கு மாற்றாக வேறு பொருள்களை அவர்களிடம் காட்டுதல்
* இல்லத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல்.





# பொறாமை

## *Envy*

WILKIN TOM ONEAL

இரு கழுகுகளைப் பற்றிய ஒரு கதை உண்டு. ஒரு கழுகு மற்ற கழுகைவிட உயரமாகவும், அழகாகவும் பறந்தபடியால் மற்றொரு கழுகு அதன் மீது பொறாமை கொண்டது. அதனால் அது தன் உடலில் இருந்து வலிமையான இறகுகளைப் பிடுங்கி அவைகளையே அம்புகளாக மாற்றி, மற்ற கழுகைக் காயப்படுத்த அல்லது கொல்ல எய்தது. இவ்விதமாக அந்தக் கழுகு தன்னைத்தானே அழித்துக்கொண்டிருந்தது. இருந்தபோதிலும் உயரமாகப் பறந்து கொண்டிருந்த மற்ற கழுகை, இக்கழுகால் தாக்க முடியவில்லை. ஆனால், அதற்குள் அது எல்லா சிறகுகளையும் இழந்து கடைசியாக கீழே விழுந்து இறந்துவிட்டது. இறுதியில், பொறாமை அக்கழுகை அழித்துவிட்டது.

பொறாமை ரோமர் 1:29-ல் பட்டியலிடப்பட்டிருக்கும் பாவங்களுள் ஒன்றாகக் காணப்படுகிறது. பொறாமையை அதின் போக்கில் நாம் விட்டுவிட்டால், அந்தக் கழுகு தன்னைத்தானே அழித்துக்கொண்டது போல், நம்மை அழிக்கும் வரை அது பெரிதாகிக் கொண்டே இருக்கும்.

என் பெற்றோர் மரச்சாமான் கிடங்கு வைத்திருந்தார்கள். அப்போது மரத்துகள்கள் என் கரங்களில் படிந்ததை நினைத்துப் பார்க்கிறேன். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கரங்களில் படிந்த மரத்துகள்களை எடுக்காமல் அப்படியே விட்டு விட்டேனா? நிச்சயமாகவே இல்லை! அந்த மரத்துகள்களை என் கரங்களிலிருந்து சீக்கிரமாகவே எடுத்துவிட்டேன். இது போலவே, பொறாமையாக இருந்தாலும், வேறெந்தப் பாவமாக இருந்தாலும் இது உண்மையாயிருக்கிறது. இந்தப் பொறாமையை சீக்கிரமாக நம்மிடமிருந்து எடுத்துப் போடப்பட்டால் தான், நாம் தேவனுடைய வார்த்தைக்கு இசைவான வாழ்க்கை வாழ்ந்து இவ்வுலகில் நாம் எப்படி இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ, அப்படிப்பட்ட வாழ்கை வாழ முடியும்.

வைராக்கியமும், விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும், சகல துர்ச்செய்கைகளுமுண்டு. பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும்,

சாந்தமும், இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும் பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது. ( யாக். *3:16-18)*

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும், சகலத்தையும் தாங்கும் சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும் *(I கொரி. 13 : 4-6 )*

களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம். (ரோமர் *13: 13)*

இயேசு கிறிஸ்து சிவவையில் அறையப்படுவதற்கு பொறாமையும் ஒரு காரணமாக இருந்தது. “பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக்கொடுத்தார்கள்” *( மாற்கு 15 : 10 )* “சொஸ்த மனம் உடலுக்கு ஜீவன்; பொறாமையோ எலும்புருக்கி” *( நீதிமொழிகள் 14: 30 )*

தேவனுடைய ஜனங்கள் மத்தியில் காணப்படும் அழிவுக்குரிய மனப்பான்மையானது பொறாமை என்னும் பாவம் தான். அது சபைகளைப் பிரிக்கிறது குடும்பங்களைப் பிரிக்கிறது. அதன் விளைவு பொய், ஏமாற்று, பகைமை கடைசியாக ஆத்தும நித்திய அழிவு அல்லது இழப்பு

பொறாமை உங்கள் ஆத்துமாவை அழித்துப்போட அனுமதித்து விடாதீர்கள். அதை வேரோடு பிடுங்கி எறிந்து அதற்குப் பதிலாக அவ்விடத்தை அன்பால் நிரப்புங்கள். †

## தேவனுடைய வார்த்தை

| | |
|---|---|
| 1. வல்லமையுள்ளது | – எபி. 4:12–13 |
| 2. சுத்தமாக்குகிறது | – சங். 119:9 |
| 3. ஆத்துமாவை சுத்திகரிக்கக்கூடியது | – 1பேதுரு. 1:22 |
| 4. ஒருவனைக் கட்டுகிறது | – அப். 20:32 |
| 5. மனந்திரும்புதலை ஏற்படுத்தக்கூடியது | – மத். 13:15 |
| 6. பூரணமானது | – யாக். 1:25 |
| 7. முழுமையானது | – 2தீமோ. 3:16–17 |
| 8. நிலைத்திருக்கக் கூடியது | – மத். 24:35 |





## காலம் உருண்டோடும் போது...

### As Time Rolls On...

David A. Sargent

Mark Brouwer என்பவர், நாம் எப்படி காலத்தை அளவிடுகிறோம் என்ற ஆழ்ந்த அறிவை நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார்.

கடிகாரங்கள் முதன் முதலாக பதிமூன்றாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகள் நமக்கு, காலத்தை அளக்கும் முறையை மிக நுணுக்கமாக, நேர்த்தியாகத்தந்தது. அது, கால அளவை காலை, மதியம், சாயங்காலம், இரவு என்று பகுத்துக் குறித்தது. இன்று நாம் காலத்தை அளக்கும் முறையிலும், கால அளவைப் பிரிக்கும் முறையிலும் அசுர வளர்ச்சியை அடைந்துள்ளோம் . அதாவது, இன்று நாம் அப்படி செய்தாலும்கூட, அதில் முக்கியமான ஒன்றைப் பார்க்கத் தவறிவிடுகிறோம்.

துல்லியமான நேரம் என்பது நம்மைக் குழப்புகிறது. ஏனென்றால், கடிகாரத்தினால் நேரத்தைக் கணிக்கும் போது, நேரம் பற்றிய தவறான எண்ணத்தை நமக்குக் கொடுக்கிறது.

பொதுவாகக் கடிகாரம் என்பது வட்டவடிவிலானது. அதிலுள்ள கடிகார முள் வட்டமாக நகர்ந்து செல்லுகிறது. அது முடிவற்ற நிலையில் திரும்பத் திரும்ப சுற்றுகிறது. டிஜிட்டல் கடிகாரங்களும் இதே விதமாகவே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. இது நேரம் திரும்பத் திரும்ப சுற்றிச் சுற்றி வருவது போன்ற எண்ணத்தையே நமக்குக் கொடுக்கிறது. ஒரு நாள் முழுவதையும் நீங்கள் செலவழிக்கிறீர்கள், அடுத்த நாள் காலையில் நீங்கள் எழுந்தவுடன் மறுபடியும் அதே நேரம் வருகிறது. எனவே, நேரம் முடிவற்று சுழற்சி முறையில் திரும்பத் திரும்ப வருகிறதாகத் தெரிகிறது.

ஆனால், உண்மையில் நேரமானது திரும்பத் திரும்ப வருவதில்லை! ஒவ்வொரு வருடத்தின் முதல் நாள் அதை நமக்கு நினைவுபடுத்துகிறது. சில நேரங்களில், நாட்கள் கூட்டப்படுவது போல் நாம் உணர்கிறோம். அப்படிக் கூட்டப்பட்ட நாட்களை நாம் வாழ்ந்து முடித்த பிறகு அவைகள் கடந்துபோய்விட்டது. திரும்பி ஒருபோதும் வருவதில்லை என்பதையும் நாம் உணர வேண்டும்

நேரம், நேராகக் கடந்து செல்லுகிறது. சுழற்சி முறையில் திரும்பத் திரும்ப வருவதில்லை. நாட்களும் திரும்பத் திரும்ப வருவதில்லை அவைகளுக்கு முடிவு உண்டு. நாம் அவைகளை ஒவ்வொன்றாக இழந்து வருகிறோம். கடிகாரமுள் நகர்ந்து தான் செல்லுகிறது.

நேரம், நேராகக் கடந்து செல்லுகிறது. சுழற்சி முறையில் திரும்பத் திரும்ப வருவதில்லை. நாட்களும் திரும்பத் திரும்ப வருவதில்லை அவைகளுக்கு முடிவு உண்டு. நாம் அவைகளை ஒவ்வொன்றாக இழந்து வருகிறோம். கடிகாரமுள் நகர்ந்து தான் செல்லுகிறது.

வேதாகமம், இந்த விஷயத்தைக் குறித்து, ஆழ்ந்த அறிவையும், புரிந்து கொள்ளுதலையும் நமக்குக் கொடுக்கிறது. சங்கீதம் *90: 12* - ல் **நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும் படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்** என்று நாம் ஜெபிக்கும்படி போதிக்கப்பட்டிருக்கிறோம்.

நாம் நேரத்தை விரயம் செய்யாமல், அதைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும் ( எபேசியர் *5:15,16*). நமக்குப் கொடுக்கப்பட்டுள்ள குறைவான காலத்தை முக்கியமான காரியங்களில் கவனத்தைச் செலுத்துவதின் மூலம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது, நம் குடும்பம், நண்பர்கள், தேவனோடு உறவு போன்றவைகளில் நேரத்தை ஞானமாக செலவிட வேண்டும்.

நாம் காரியத்தின் முடிவைப் பார்க்கும்போது, தேவனோடு நாம் கொண்டிருக்கும் உறவுதான் மிக முக்கியமானது. ஏனென்றால், அது, நித்திய விளைவைத் தன்னகத்தே கொண்டுள்ளது. **பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கார்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6 : 23)**

தேவன் நம்மீது கொண்ட அளவற்ற அன்பினால் நாம் என்றென்றும் அவரோடு வாழத்தக்கதாக அவருடைய ஒரே பேறான குமாரனையே, நம்முடைய பாவங்களுக்காக மரிக்கக் கொடுத்தார். *(1யோவான்2:25)* இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்து *(அப்.16:30,31)* பாவங்களிலிருந்து மனந்திரும்பி *(அப். 17:30,31)* மனுஷருக்கு முன்பாக கிறிஸ்துவை அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறுபவர்களுக்குத் தேவன் நித்திய ஜீவனை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் *(அப். 2:38 )*

நாம் எப்படி நேரத்தை பயன்படுத்துகிறோமோ, அதுதான் நம்முடைய நித்திய ஜீவனுக்கான இடத்தை நிர்ணயிக்கிறது. நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து அவரைப் பின்பற்றுவது தான், நம் நேரத்தை சிறந்த முறையில் செலவழிக்கும் வழியென்றும் நித்திய ஆசீர்வாதத்திற்கான வழியென்றும் தேவன் கட்டளையிடுகிறார். †

**தேவன் எப்போதுமே தம்முடைய குமாரனுடைய ஜெபத்தைக் கேட்கிறார். தேவனுடைய குமாரன் உன்னில் உருவாக்கப்பட்டால் தேவன் எப்போதுமே உன் ஜெபங்களைக் கேட்பார்.**



# உங்கள் தெரிந்துகொள்ளுதல்

## Your Choice

*Charles. V. Cash*

நம் அன்றாட வாழ்வில் முடிவுகள் எடுக்கப்படுகிறது. வாழ்க்கையே தொடர் முடிவுகளை உள்ளடக்கியது தான். சில முடிவுகள் தொலைதூர விளைவுகளை உள்ளடக்கியதாகையால் மிகவும் கடினமானதும் சிக்கல்கள் நிறைந்ததுமாயிருக்கிறது. சிலவேளைகளில் நாம், மீண்டும் முடிவுகள் எடுக்கப்பட வாய்ப்புகளைக் கொடுப்பதில்லை. நம்முடைய முடிவுகளை சரியாக எடைபோடுவது நமக்கு அவசியமாகிறது. சில முடிவுகளை நாம் குறுகிய கால நன்மைகளுக்காக எடுக்கிறோம். ஆனால், அவைகள் நீண்டகால நன்மைக்கானதாக இருக்கவேண்டும். எப்போதும் நாம் நீண்டகால கண்ணோட்டத்தோடு முடிவெடுக்கிற பிள்ளைகளாக இருக்க வேண்டும்!

நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்றும், நம் வாழ்க்கை முறை எப்படியிருக்க வேண்டுமென்றும் தெரிந்து கொள்கிறோம். நாம் எவ்விதமான மனிதர்களாக இருக்கவேண்டுமென்று தெரிந்து கொள்ளக்கூடாதா? தேவனுடைய கட்டளைகளையும், தேவனிடத்திலிருந்து வருபவைகளையும் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்கிறார்கள் அல்லது நிராகரிக்கிறார்கள். நித்தியம் என்பது நாம் இப்பூமியில் எடுக்கும் முடிவுகளைச் சார்ந்திருக்கிறது. தெரிந்துகொள்ளுதல் என்பதும் அன்றுமுதல் இன்றுவரை ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. **கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள் (யோசுவா 24:15)** †

# அன்புச் சங்கிலிகள்

**CHAINS OF ENDEARMENT**

*Randall Caselman*

இன்று கலாச்சாரம் என்கிற போர்வையில், பலர் திருமணம் என்பது பழங்கால முறைமையென்றும், பழைய பாணியென்றும், அது புராதானச் சின்னமாகத்தான் இன்று இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். இன்றைய நாட்களில் திருமணமான பல தம்பதியர் ஒருவருக்கொருவர் நீண்டகால அடிப்படையில் உறவு வைத்துக்கொள்வது அலுத்துப்போய்விட்டது என்று உணர்கின்றனர். வேறு சிலர், அவர்கள், உணர்வுகள் இருக்கும் வரை ஒருவருக்கொருவர் உண்மையாக இருக்கலாம் என்றும் முடிவெடுத்துக் கொள்கிறார்கள்.

வெறுமனே உணர்வுகளின் அடிப்படையிலான உறவுகள் பெரும்பாலும் தோல்வியிலேயே முடிகின்றன. உணர்வுகளை விட குடும்பத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். ஒரு திருமணம் வெற்றியாக முடியவேண்டுமென்றால் நாம் அன்புக் கயிற்றால் கட்டப்பட்டிருக்க வேண்டும் அப்போது தான் அது வெற்றியுள்ள திருமணமாக இருக்கும் அல்லது அமையும்.

## நம்மைக் கட்டிப்போடும் சில சங்கிலிகள் என்னென்ன?

பல திருமணங்கள் தோல்வியடைவதற்கான காரணம் தம்பதியர்களுக்கிடையே, எதிர்காலக் கடமை பற்றிய சிந்தனை எதுவும் இல்லாதது தான். விவாகரத்து இன்றைய நாட்களில் விருப்பமான ஒன்றாகி விட்டது. இன்றும் பலர், திருமணம் கசந்துவிட்டது என்றால் விவாகரத்துப் பெற்றுக் கொண்டு, வேறொரு திருமணம் செய்துகொள்ளலாம் என்ற முன்னேற்பாட்டோடே முதல் திருமணம் செய்து கொள்கிறார்கள். நாம், நம் வாழ்க்கைத் துணையுடன் அமர்ந்து, ஒருவருக்கொருவர் ஆற்ற வேண்டிய கடமைகளைக் குறித்துப் பேச வேண்டும். விவாகரத்து விருப்பப்பொருளாக மாற அனுமதிக்க வேண்டாம். எப்போதும் இணைந்திருக்க உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்!



### கூடல் என்னும் சங்கிலி

தம்பதியரிடையே காணப்படும் அன்பு தணியாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். ஒருவர் மற்றொருவரை உதாசினப்படுத்தி விடக்கூடாது. ஆனால், ஒருவருக்கொருவர் கவனித்துப் பேசுங்கள், புண்படும்படியான வார்த்தைகள் ஒருபோதும் வேண்டாம். ஒருவரோடொருவர் அன்பைப் பரிமாறிக் கொள்ளுங்கள்; பரிசுப்பொருட்களைக் கொண்டு ஒருவருக்கொருவர் அன்பைப் பரிமாறிக் கொள்ளுங்கள். நேரமும், வாய்ப்பும் கிடைக்கும் போதெல்லாம் இருவரும் இணைந்து வெளியூர்களுக்கு சுற்றுலாச் செல்லுங்கள். உணவு விடுதிகளில் உணவு உட்கொள்ளுங்கள். நாம் இவ்விதமாக வெளியே சென்று எத்தனை நாட்களாகிறது என்று எண்ணிப்பாருங்கள். அதுபோல் நம் கூடலும் இயத்திரத்தனமாக இருக்கக்கூடாது.

### நினைவு என்னும் சங்கிலி

பழையவைகளை நினைத்துப் பார்த்து, அந்நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையில் நேரிட்ட நன்மையான காரியங்களையும், தீங்கான காரியங்களையும் எப்படி நீங்கள் மேற்கொண்டீர்கள் என்பது குறித்தும் ஒருவருக்கொவர் பேசுங்கள். கடந்த காலங்களில் நடந்தவைகளை நினைத்துப் பார்ப்பது இன்று பெலனைக் கொடுக்கும். என் தாயும், தகப்பனும் என்னிடம், சபையைப் பற்றியும், குடும்பத்தைப் பற்றியும், விவசாயப்பண்ணை பற்றியும், வாழ்வில் நடந்த நற்காரியங்கள் பற்றியும் அவர்கள் பகிர்ந்து கொண்டவைகளை நினைத்துப் பார்க்கும் போது, எனக்கு ஒருபோதும் அலுப்பு ஏற்படுவதில்லை. மாறாக, எனக்குள் மகிழ்ச்சி தான் ஊற்றெடுக்கிறது.

### ஜெபம் என்னும் சங்கிலி

இணைந்து ஜெபிக்கும் குடும்பம் ஒற்றுமையாகவே நான் இருக்கிறது. இது உண்மை தானே? இணைந்து ஜெபிப்பதைவிட ஒருவரை மற்றொருவரிடம் நெருக்கமாக்கும் விஷயம் எதுவுமில்லை. நம் உறவான வாழ்க்கைத் துணையை தேவன் ஆசீர்வதிக்கும்படி அவரிடத்தில் கெஞ்சிக் கேட்பது அலாதியானது. இது உண்மையாகவே வல்லமையான காரியம்!

## மன்னிப்பு என்னும் சங்கிலி

உண்மையான அன்பு கடந்தகால தவறுகளைச் சேர்த்து வைப்பதில்லை. நாம் எல்லோருமே தவறு செய்கிறோம். சில வேளைகளில் பெரிய தவறுகளைக் கூட செய்து விடுகிறோம். ஆனால், திருமண உறவில் தவறுகளை மன்னிக்கிறவர்களாக, தீவிரமாக மறக்கிறவர்களாக இருக்க வேண்டும். இது கைகூடும் போது, தம்பதியர் முந்தைய சம்பவத்தைக் குறித்த பாரம் எதுவுமில்லாமல், அடுத்த கட்டத்திற்குக் கடந்து போகலாம். மனித மாண்பு மன்னிக்கக் கற்றுக் கொள்வதுதான்! ஆகவே, மன்னிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

## புதுமை என்னும் சங்கிலி

நீங்கள் இதற்கு முன் ஒருபோதும் செய்திராத புதுமையான காரியங்களைச் செய்யுங்கள் வீடு - வேலை, வேலை - வீடு என்னும் நிலை நிலவும் போது வாழ்வில் அலுப்பு ஏற்பட்டு ஏசனையற்றதாகிவிடும். திருமணத்திலும் அப்படியொரு நிலை ஏற்பட வாய்ப்புண்டு. ஆகவே, திருமண வாழ்வில் அலுப்பு ஏற்படாமலிருக்க அதை சுவாரஸ்யமாக மாற்றுங்கள்! வாழ்க்கையை நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாக மாற்றுங்கள்!!!

நம்முடைய நெருக்கம், தேவனோடு நாம் ஏற்படுத்தும் உறவினால் பலப்படுத்தப்படுகிறது. இப்படி இருவரிடையே நிலவும் உறவைவிட மேலான காரியங்கள் விவாகத்தில் உண்டு. விவாகத்தில் தேவன் நம்மோடு அங்கம் வகிக்க வேண்டும். நாம் தேவனிடத்தில் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறோமோ அதைபோல், அவ்வளவு நெருக்கமாக நமக்குள் இருப்போம். †

எங்களை ஒன்றாகக் கட்டும் கர்த்தாவே
எங்களை ஒன்றாகக் கட்டும் கர்த்தாவே
அன்புச் சங்கிலியால் எங்களைக் கட்டும்

எங்களை ஒன்றாகக் கட்டும் கர்த்தாவே
எங்களை ஒன்றாகக் கட்டும் கர்த்தாவே
அறுக்க முடியாத சங்கிலியால் எங்களைக் கட்டும்.




ஹேய் குட்டீஸ்...

# நியாயமான உலகம்

## A Fair world

Spc ALEX GIBSON

நான் எவ்விஷயத்தைப் பற்றி எழுதப்போகிறேனோ அவ்விஷயம் கடினமானது என்பதை மனதார ஒத்துக்கொள்கிறேன். நான் நியாயமான உலகம் என்னும் தலைப்பில் எழுதுகிறேன். என் நண்பன் ஒருவர், கார் விபத்தில் சிக்கிக்கொண்ட, தன்னோடு வேலை செய்பவருடைய குடும்பத்திற்கு ஆறுதல் சொல்வதற்காக என்னிடம் ஆலோசனை கேட்டபோது இத்தலைப்பானது உதித்தது. அந்த நண்பர் என்னோடு உரையாடியபோது, அந்த உரையாடலே மிகக் கடினமான ஒன்றாக மாறிவிட்டது. காரணம் என்னவென்றால், நான் அவரிடம் ஜெபம் என்னும் வார்த்தையைக் குறிப்பிட்டபோது, அவர் என்னைப் பார்த்து எரிச்சலடைந்து, அன்புள்ள தேவன், என் நண்பரைப் போன்ற ஒரு நல்ல மனிதருடைய குடும்பத்திற்கு இப்படியொரு சோக சம்பவத்தை எதற்காக அனுமதித்தார்? என்றார். அக்கேள்வி கேட்கத்தக்கதான ஒரு கேள்வி தான். ஆனால், அதற்கான பதில், இவ்வகையான கேள்வி எப்பொழுதாவது ஒருமுறைதான் விரும்பப்படுகிறது.



பெரும்பாலான மக்கள் தங்கள் வேதனையில் கதறுகிறார்கள். ஆனால், என் நண்பரோ, தேவன் அனுமதித்த அச்சோக சம்பவத்தை வைத்து, அவர் அன்புள்ள தேவனல்ல, மாறாக அவர் ஒரு கொடூரமான தேவன் என்று கடுமையாகச் சாடினார். நான் அவரிடம், தேவன் அனுமதித்த அச்சோக சம்பவத்தை நியாயப்படுத்தினேன். மீண்டும் அவரிடம் நான் தொலைபேசியில் உரையாடின போது மறுமுனையில் அவரிடமிருந்து ஏன் என்ன காரணம்? என்பது போன்ற தொனி. இப்போது நான் அவருடைய கவனத்தை ஈர்த்துவிட்டேன் என்று எண்ணியபடியே

உங்களுடைய கவனத்தையும் ஈர்த்துவிட்டேன் என்றே எண்ணுகிறேன்.

உண்மை என்னவென்றால், மழை நல்லோர் மேலும், தீயோர் மேலும் ஒரே மாதிரியாக விழுகிறது? இது உண்மையாகவே நியாயமாகத் தோன்றுகிறது இல்லையா? அதைபோல், ஒரு ராணுவ வீரனாகிய என்னை, நான் இதற்கு முன் சென்றிராத இடங்களுக்கு, அதாவது தன் அரசாங்கத்தை விட கால்பந்தை அதிகமாக நேசிக்கும் தேசத்தைப் பாதுகாப்பதற்காக அனுப்பினார்கள். இதற்குச் சான்றாக, அந்த தேசத்தில் கால்பந்து அணிகள் எத்தனை, பயிற்சியாளர்கள் எத்தனை என்பவைகளைப் பற்றிய புள்ளி விபரங்களை நாட்டு மக்களிடம் பட்டியலிடச் சொல்லுங்கள். அதே நேரத்தில் அவர்களிடம், தேசத்து பிரதிநிதிகளுடைய பெயரையோ, அல்லது பட்டத்து மேயருடைய பெயரையோ பட்டியலிடச் சொல்லுங்கள். அப்போது வேடிக்கையாக இருக்கும். மறுபடியும், இவைகளெல்லாம் நியாயமானது என்று நான் சொல்லிக்கொண்டிருந்த நம் பாடத்திற்கு வருவோம்.

மத்தேயு *5 : 43 -48* - ம் வசனங்களில், "உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைப் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும், நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால் நீங்கள் விசேஷத்துச் செய்கிறது என்ன? ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" (தேவன், இவ்வுலகில் தம்மைத் தெரிந்து கொள்வதற்கு நல்லோருக்கும், தீயோருக்கும் நேரத்தைக் கொடுக்கிறார் என்பதை இவ்வசனங்கள் எடுத்துரைக்கின்றன )

இவைகளுக்கெல்லாம் காரணம் தேவனுடைய அன்பும் அவருடைய பூரணத் தன்மையும் தான். இது தான் நம் நம்பிக்கையாயிருக்க வேண்டும். நான் சொல்வதைக் கவனியுங்கள், ஒரு வேளை தேவன் இப்படிச் சொல்வதாக வைத்துக் கொள்ளுங்கள், அலெக்ஸ், நான் உன்னை நேசிக்கிறேன், எனவே, நீ உனக்கும், மற்றவர்களுக்கும் தீங்கை ஏற்படுத்தக்கூடிய காரியத்தைச் செய்ய ஒருபோதும் நான் அனுமதிக்க மாட்டேன். அதைபோல், உன்னைக்



காயப்படுத்தும் காரியங்களை மற்றவர்கள் உனக்குச் செய்கிறதற்கும் அனுமதிக்கமாட்டேன் என்று சொன்னால் அப்போது என் பெரும்பாலான செயல்பாடுகளும், மற்றவர்களுடைய செயல்பாடுகளும் வரையறுக்கப்பட்டுவிடும். அதனால், எது சரி, எது தவறு என்று தெரிந்து கொள்ளும் உரிமை என்னிடமிருந்து பறிக்கப்படுகிறது. ஏனென்றால், அது ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுவிட்டது. ஒரு வேளை அதனால் நான் ஒரு போதும் பாவம் செய்யாமல் இருக்கலாம். அதே நேரத்தில், நான் ஒரு இயந்திரம் போல செயல்படுவதால் அது கிட்டத்தட்ட ஆவிக்குரிய பலவந்தமாகிவிடுகிறது.

அதாவது சம்மதமில்லாமல் , ஒன்றை அடைவதை இது குறிக்கிறது. இதைக்குறித்து நான் ஆராய்ந்து பார்த்த போது, கடைசியில் அது தேவனுடைய செயல் அல்ல என்பதை அறிந்துகொண்டேன். தேவன் நமக்கு முழுச் சுதந்திரத்தையும் அதாவது, எது நல்லது, எது கெட்டது என்று தெரிவித்துகொள்ளும் உரிமையை நமக்குத் தந்திருக்கிறார். நான் ஏற்கனவே, வலி, வேதனைவிட்டு விலகிய தன் விளைவுகள் தான். இது ஒரு தனிப்பட்ட மனிதனுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த மனித இனத்துக்கும் பொதுந்துகிற பொது விதிதான் என்பதை மனுக்குலம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒருவன் குடித்துவிட்டு வாகனத்தை ஓட்டி, இன்னொரு வாகனத்தின் மீது மோதி பலரைக் கொன்றுவிடுகிறான். இது அந்தக் குடிகாரனுடைய தவறுதான். மாறாக தேவனுடைய தவறல்ல. இத்தகைய சம்பவங்களைக் குறித்து தேவன் துக்கப்படுவதில்லை என்று நினைக்கிறீர்களா? இல்லை, அவர் நிச்சயமாகவே துக்கப்படுகிறார். அதிலும், குறிப்பாக மரித்துப்போனவரால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்காக அவர் மிகவும் துக்கப்படுகிறவராயிருக்கிறார். பலவேளைகளில் மக்கள், தூரத்திலிருந்து விளையாட்டுப் பொம்மையை வேடிக்கை பார்ப்பது போல் உலகதத்தில் நடக்கும் சம்பவங்களை வேடிக்கை பார்க்கும் பந்த பாசமற்றவர் என்ன கோணத்தில் தேவனைப் பார்க்கிறார்கள். ஆனால், உண்மையென்னவென்றால், தேவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறார். அதே வேளையில், தேவன் அவைகளில் தலையிட்டுக் கொள்வதில்லை இதன் பொருள் தேவனுக்கு அன்போ, வல்லமையோ இல்லை என்பதல்ல மாறாக அவர் எல்லோருடைய தெரிந்துகொள்ளும் உரிமையையும் மதிக்கிறார். மேலும் நாம் யாரையெல்லாம் தீமையானவர்கள் என்று கருதுகிறோமோ அவர்களுடைய தெரிந்துகொள்ளும் உரிமையைக் கூட தேவன் மதிக்கிறவராக இருக்கிறார்.

இது என்ன நியாயம் என்று நீங்கள் கேட்கிறீர்கள். அப்படித்தானே உண்மையாகவே நியாயமான ஓர் உலகத்தை நீங்கள் கேட்காமல், கிருபையையும், இரக்கத்தையும் உடைய உலகத்தை மாத்திரம் நீங்கள்

விரும்புகிறீர்கள். அதாவது, உங்கள் விருப்பமெல்லாம் தயவும், பாதுகாப்பும், இரக்கமும் நல்லவர்களுக்கு மாத்திரம் கிடைக்க வேண்டும், தீயவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்பது. இதைத்தான் தேவனும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் நன்மை செய்தால் மேன்மை இல்லையோ என்று. இவ்வுலகில் வலி, வேதனைகள் இருந்தாலும், இறுதியில் நமக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிற பலன்களை எண்ணிப் பார்த்தால் அல்லது அவைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இக்காலத்துப் பாடுகள் ஒரு பொருட்டே அல்ல. ஆகவே, நாம் தீமைக்கு விலகி நன்மை செய்யப் பழகுவோம். இயேசு கிறிஸ்துவும் நன்மை செய்கிறவராகவே நாடெங்கும் சுற்றித் திரிந்தார். எனவே, நன்மையில் தான் மேன்மை உண்டு.தீமையை வேரறுப்போம். நன்மையை நிலைநாட்டுவோம்.

நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதால், கடினமான நேரங்களில் தேவன் பேரில் நம்பிக்கை வைத்து, நமக்குப் பாடுகள் வந்தாலும் அவரில் விசுவாசம் வைத்து, காயப்பட்டிருக்கிறவர்களை சுகப்படுத்தி, அவர்களுக்காக ஜெபித்து, அவர்களிடம் அன்பு செலுத்த இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அநேகமாக, இதற்கு மிகச் சிறந்த உதாரணம், இயேசு கிறிஸ்து லாசருவை எழுப்பியது தான். கல்லறைக்கு அருகில் போய் தாம் என்ன செய்யப் போகிறார் என்பதை அவர் அறிந்திருந்தாலும் கூட, அவருடைய முதல் செயல்பாடு அக்குடும்பத்தாரோடு துக்கப்பட்டது தான்.

நான் இக்கட்டுரையை சில கேள்விகள் கேட்டு முடிக்க ஆசைப்படுகிறேன். அன்புள்ள தேவன், இவ்வுலகத்தை சிருஷ்டித்தபோது இவ்வுலகம், எவ்விதமாக மாறும் என்பதை அறிந்திருப்பார் தானே, அப்படியென்றால் முடிவு என்னவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? (ரோமர் 8 : 18-22) -ம் வசனங்களில் சொல்லப்பட்டது போலிருக்குமா?

"ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். மேலும், தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டுத் தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே அந்த சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது."

இவ்வுலகிலுள்ள தீமையான காரியங்களை நாம் பார்க்கும்போது, இது நியாயமற்றது என்று நாம் கதறும் போது, அதாவது வேதனைக்கு



இவ்வுலகிலுள்ள தீமையான காரியங்களை நாம் பார்க்கும்போது, இது நியாயமற்றது என்று நாம் கதறும் போது, அதாவது வேதனைக்கு மத்தியில் நாம் கதறும் போது உண்மையாகவே, அது சரி என்று சொல்லுகிறோம். ஏனென்றால், நம் வாழ்விலுள்ள பாவங்களுக்கும் நாம் விலை கொடுப்பதற்குப் பதிலாக நாம் இரக்கத்தை விரும்புகிறோம்.

நாமே மற்றவர்களை அதிகமாகக் காயப்படுத்தினால், நம் சத்துரு அச்சூழ்நிலையிலிருந்து நம்மை தூரப்படுத்தி காயத்தை இன்னும் ஆழப்படுத்தி விடுவான். இது எவ்வளவு விநோதமாயிருக்கிறதென்று பாருங்கள். பாடுகளினால் காயப்பட்டிருக்கிறவர்களுக்கு நாம் ஆறுதல் அளித்து அவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும். உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக என்று (ரோமர் 12:9). வேதமும் எடுத்துரைக்கிறது. †

## ஒருவர் ஜெபிக்கும் போது செய்யும் காரியங்கள்

1. ஒருவர் ஜெபிக்கும்போது பரமதகப்பனிடத்தில் பேசுகிறார் (மத்தேயு 6:9)
2. ஒருவர் ஜெபிக்கும்போது தேவனால் தன் ஜெபத்திற்கு பதிலளிக்க முடியும் என்றும் தன் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார் (யாக்கோபு 1:5,6)
3. ஒருவர் ஜெபிக்கும்போது இயேசு கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றுகிறார் (மத்தேயு 26:29)
4. ஒருவர் ஜெபிக்கும்போது தனக்குப் பதிலாக செயல்பட தன்னுடைய மத்தியஸ்தராக கிறிஸ்துவை அனுமதிக்கிறார் (I தீமோத்தேயு 2:5)
5. ஒருவர் ஜெபிக்கும்போது தேவனைப் பிரியப்படுத்துகிறார் (நீதி.15:8).

ஹேய் குட்டீஸ்...

# நம் கிரியைகள் நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்கிறதா?

## Working our way to heaven?

Ashley Bates

யாராவது ஒருவர் பரலோகம் போவதற்குத் தானாகவே கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்று குற்றச்சாட்டப்படுவதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பரலோகம் செல்வதற்கு நாமாகவே கிரியை நடப்பிக்க முடியுமா? கிறிஸ்தவர்களாக நம்முடைய கிரியைகளின் நோக்கம் என்ன? அவைகள் நம் இரட்சிப்புக்கு அவசியமா?

இத்தலைப்பைக் குறித்து பலர் கேள்விகேட்பதை நான் கேட்டிருக்கிறேன். இதைக் குறித்து தேவன் என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனித்து நேரத்தை எடுத்துக் கொள்வோம். வேதாகம் முழுவதும் விசுவாசம் என்பது நற்கிரியைகளில் தான் முடிகிறது என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபு *2:17*ல் கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது என்றும் எச்சரிக்கிறது. எனவே, இது ஒருவர் கிரியைகளில்லாமல் உண்மையுள்ள கிறிஸ்தவனாக இருக்கவே முடியாது என்பதை நம்பச் செய்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் சஞ்சரித்த நாட்களில் பல கிரியைகளை நடப்பித்திருக்கிறார்.

தனிபட்ட முறையில், பரலோகம் செல்வதற்கு நாமாகவே கிரியை நடப்பித்துக் கொள்வதாக நம்மீது ஒரு குற்றச்சாட்டு உண்டு. ஆனால் பரலோம் போக நம்மைவிட வாய்ப்புக் குறைவானவர்களுக்கு நாம் உதவவேண்டுமென்று வேதாகமம் நமக்குக் கட்டளையிடுகிறது. நம்முடைய கிரியைகளைக் குறித்து நாமே பெருமை பாராட்டக்கூடாது. ஏனென்றால், நம்முடைய கிரியைகளை மனிதர்கள் கண்டு நம்மை மெச்சக்கூடாது. மாறாக, அது தேவனுடைய மகிமைக்காக இருக்கவேண்டும். (எபேசியர் *2:8-10*) நம்முடைய கிரியைகளைப் பற்றி விவாதிக்கிறது. **கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினாலே உண்டானதல்ல;ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.** எனவே, நாம் நற்கிரியைகளில் நல்ல கிறிஸ்தவர்களாக இருக்கிறோம் என்பதைக் காட்டுவதற்காக அல்ல. இவ்வசனப் பகுதிகளிலிருந்து, பரலோகம் போவதற்கு, நாமாகவே கிரியை நடப்பிக்க முடியாது என்பதைப் புரிந்துகொள்கிறோம்.



என்னிடம், பலர் நம் கிரியைகள் நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லவில்லையென்றால், அக்கிரியைகளின் நோக்கமென்ன? என்று கேட்கின்றனர். மத்தேயு *5:16* - **இவ்விதமாகச் சொல்லுகிறது. இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா மகிமைப்படுத்தும் படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.** நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்தவனுடைய கிரியை மற்றவர்கள் மீது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நாம் வாழும் சமுதாயத்தில் நம் கிரியைகள் மற்றவர்கள் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். நாம் பல எளிய வழிகளில் சமுதாயத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி, சுவிசேஷத்தைக் கேள்விப்படாதவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

இன்னும் சிலர், நம் கிரியைகள், நம்மை பரலோகம் அழைத்துச் செல்லவில்லையென்றால் அல்லது பரலேத்தில் நமக்கான ஓர் இடத்தை ஆயுத்தம் செய்யவில்லையென்றால் அது நம்முடைய இரட்சிப்புக்காவது வழிவகுக்கிறதா? என்றும் கேட்கின்றனர். இதற்குக் குறிப்பு வசனமாக, எனக்குப் பிடித்தமான வசனங்களுள் ஒன்றாகிய யாக்கோபு *2:26*- ஐ மேற்கோள்காட்ட ஆசைப்படுகிறேன். ஏனென்றால், பரலோகம் போவதற்கு நானே கிரியை நடப்பித்துக் கொள்ளுகிறேன் என்று குற்றம் சாட்டப்படும் போது, இவ்வசனத்தை மேற்கோள் காட்ட ஆசைப்படுவேன். **அப்படியே ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.** யாக்கோபு *2:18*-ல், விவரிக்கப் பட்டிருக்கிறபடியே நம் கிரியைகளினாலே நாம் விசுவாசத்தைக் காண்பிக்கிறோம்.

நம் இரட்சிப்புக்கு விசுவாசம் அவசியமானது என்பதை நாமெல்லாரும் அறிந்திருக்கிறோம். ஆகவே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறபடியால் நம் இரட்சிப்புக்கு கிரியைகள் எவ்வளவு அவசியமானது என்பதை இவ்வசனங்கள் தெளிவாகச் சொல்லுகின்றது. இது சரியாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது என்று நான் நம்புகிறேன். யாக்கோபு *2:19*-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. இதன் மூலம், விசுவாசம் மாத்திரம் இரட்சிப்புக்குப் போதுமானதல்ல என்று தெளிவாகப் பார்க்கிறோம்.

நாம் நற்கிரியைகள் செய்யவேண்டுமென்று நமக்குப் போதிக்கிற வசனங்களில் எனக்குப் பிடித்தமான வசனம் (*I* தீமோத்தேயு *6:17- 19*) ஆகும். **இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும் நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களாயிருக்கவும், நித்திய ஜீவனைப்**

பற்றிக் கொள்ளும்படி, வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும், அவர்களுக்குக் கட்டளையிடு."

உண்மையுள்ள கிறிஸ்தவர்கள், நற்கரியைகள் செய்து தேவையில் இருப்பவர்களுக்கு உதவ வேண்டும். தேவையில் இருப்பவர்களின் வாழ்வில் ஒளியேற்ற நமக்குப் பல வாய்ப்புகள் இருக்கின்றன. நாம் அவைகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக காயப்படுத்தப்பட்டவர்களுக்கு நம் கிரியைகள் அருமருந்தாய் இருக்கவேண்டும். நான் தேவையில் இருந்த போது நற்கிரியைகளினால் எனக்கு உதவிசெய்த கிறிஸ்தவர்களை என்னால் மறக்கவே முடியாது.

நாம் யாக்கோபு *2:18*ல் விவரிக்கப்பட்டிருக்கிற மனிதனாக இருக்க வேண்டும். **ஒருவன் : உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே** கிரியைகளினாலே நம் விசுவாசத்தைக் காட்டுகிறவர்களாக நாம் இருக்க வேண்டும். ஏனென்றால் கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது என்று வேதத்தில் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

உண்மையாகவே, விசுவாசம் மிக முக்கியமானது தான். ஆனால், இதையே உங்களைக் கிறிஸ்தவனாக வேறுபடுத்திக் காட்டுகிற விஷயமாக இருக்க அனுமதிக்க வேண்டும். ஏனென்றால், உங்களைப் பற்றி அறியாதவர்களுக்கு உங்கள் கிரியைகளினால் உங்களைக் கிறிஸ்தவர்களென்று காட்டுங்கள்.

கிரியைகள் என்பது நம் வாழ்வை நாம் தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்திருக்கிறோம் என்பதற்கு நிரூபணமாயிருக்கிறது. உதாரணமாக, நம் பாவங்கள் கழுவப்படும்படியாக, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள கட்டளையிடப்பட்டிருக்கிறோம். ஞானஸ்நானமானது நம் அர்ப்பணிப்பையும், அறிக்கையையும் வெளிப்படையாக்கி, நாம் கிறிஸ்துவைப் பின்பற்ற உண்மையாகவே நம் சிலுவையைச் சுமந்து செல்லுகிறோம் என்பதையே காட்டுகிறது.

ஞானஸ்நானமே நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதை நிரூபிக்கும் கிரியையாயிருக்கிறது. நம் கிரியைகள் நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லாது. ஆனால், இப்பூமியில் விசுவாசமில்லாமலிருக்கும் மற்றவர்களிடமிருந்து அவைகள் நம்மை ஜீவனுள்ளவர்களாக வேறுபடுத்திக் காட்டும். †





# சுவரில் கையெழுத்து

## *The Hand Writing on the wall*

*Randall Caselman*

நாம் கற்றுக்கொண்டு பயனடையும்படியான மாபெரும் பாடங்களை வேதாகமம் உள்ளடக்கியிருக்கிறது. நாம் செய்யவேண்டியதெல்லாம், அவைகளை வாசித்து, அவைகளைக் குறித்து சிந்தித்து நாம் கற்றுக்கொண்டவைகளை நம் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது தான். "வேதவாக்கியங்களெல்லாம், தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது'' *(IIதீமோத்தேயு 3:16,17)* என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

தானியேல் புத்தகத்தின் ஐந்தாம் அதிகாரத்தில் பெல்ஷாத்சார் என்னும் பாபிலோனிய ராஜாவைப் பற்றிப் பார்க்கிறோம். இந்த ராஜாவின் இருதயம் சுயநலத்தால் நிறைந்திருந்தது. செல்வச்செழிப்பாக, அதே வேளையில் ஊதாரித்தனமாக, எவ்விதக் கட்டுப்பாடுமில்லாமல் அவன் இருந்தான். அவன் தன் பிரபுக்களுக்கு ஒரு பெரிய விருந்தை ஆயத்தம்பண்ணினான். அவ்விருந்தின் போது, அவர்கள் திராட்சரசம் குடித்து, பொன்னும், வெள்ளியும், வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தார்கள் (5:4). அவன் அந்த உயிரற்ற தேவர்களைப் புகழ்ந்து கொண்டிருந்த அந்நேரத்திலே மனுஷ கைவிரல்கள் தோன்றி, விளக்குக்கு எதிராக ராஜ அரமனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று. கொடுக்கப்பட்டிருக்கிற வசனப் பகுதியை வைத்துப் பார்க்கும் போது, நம்மால், அவனுடைய ஆச்சரியத்தை கற்பனை செய்து பார்க்க முடியும். உண்மையில் அப்போது ராஜாவின் முகம் வேறுபட்டது. அவனுடைய நினைவுகள் அவனைக் கலங்கப் பண்ணியது. அவனுடைய இடுப்பின் கட்டுகள் தளர்ந்தது அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது. (வசனம் 6 )

தானியேல், பெல்ஷாத்சாரிடம் அவனுடைய தகப்பனாகிய நேபுகாத்நேச்சாருடைய, அரசாட்சியைப் பற்றி நினைவுபடுத்தினார். மேலும், எவ்வளவு அபரிதமாக நேபுகாத்நேச்சாரை தேவன் ஆசீர்வதித்தார், ஆனாலும் அவருடைய இருதயம் மேட்டிமையாகி, அவருடைய ஆவி கர்வத்தினாலே கடினப்பட்ட போது. தேவனாலே, அவர் தமது சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டார். உன்னதமான

தேவன் மனுஷரின் ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமானவனை அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்பதை நேபுகாத்நேச்சார் உணர்ந்து கொள்ளும்படி தேவன் அவரை ராஜ்யத்திலிருந்து தள்ளினார் என்று தானியேல் சொன்னார். அதன்பின்பு, தானியேல் முக்கியமான கருத்தை பெல்ஷாத்சார் ராஜாவுக்கு விளக்கினார். அவருடைய குமாரனாகிய பெல்ஷாத்சார் என்னும் நீரோவென்றால், இதையெல்லாம் அறிந்திருந்தும், உமது இருதயத்தைத் தாழ்த்தாமல் பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக உம்மை உயர்த்தினீர் (வசனம் 22) என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து, தானியேல் ராஜாவைக் கடுமையாகக் குற்றஞ்சாட்டினார். நீரும் உம்முடைய பிரபுக்களும் உம்முடைய மனைவிகளும் உம்முடைய வைப்பாட்டிகளும் தேவாலயத்தின் பாத்திரங்களில் திராட்சரசம் குடித்தீர்கள். இதுவுமின்றி தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும், உமது வழிகளுக்கு எல்லாம் அதிகாரியுமாகிய தேவனை நீர் மகிமைப்படுத்தாமல், காணாமலும், கேளாமலும், உணராமலும் இருக்கிற வெள்ளியும், பொன்னும், வெண்கலமும், இரும்பும், மரமும், கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தீர் *(5:23)* என்று ராஜாவை, தானியேல் கடுமையாகச் சாடினான்.

இப்போது தானியேல் சுவரில் எழுதப்பட்ட எழுத்தின் அர்த்தத்தை ராஜாவுக்கு விளக்கினார். மெனே - என்பதற்கு தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார் என்றும், தெக்கேல்- என்பதற்கு நீ தராசிலே நிறுக்கப்பட்டு குறை காணப்பட்டாய் என்றும், பெரோஸ்- என்பதற்கு உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு மேதியருக்கும், பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்றும் அர்த்தமாம் என்றான். அன்று ராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான். மேதியனாகிய தரியு தன் அறுபத்திரண்டாம் வயதில் ராஜ்யத்தைக் கட்டிகொண்டான்.

ராஜா, தன் ராஜ்யத்திலிருந்த ஞானிகளை வரவழைத்து சுவரில் எழுதப்பட்ட எழுத்தை வாசித்து, அதின் அர்த்தத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று கட்டளையிட்டான். ஆனால், அந்த ஞானிகளால் அதன் அர்த்தத்தை வெளிப்படுத்த முடியவில்லை. ராஜாத்தி, தானியேலை நினைவு கூர்ந்து அவனைப் பற்றி ராஜாவிடம் சொன்னாள். தானியேல் பெல்ஷாத்சார் ராஜாவுக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டு சுவரில் எழுதப்பட்ட கையெழுத்தை வாசித்து அதற்கான அர்த்தத்தைச் சொன்னால் தகுந்த சன்மானம் அளிக்கப்படுமென்று அவனிடம்



அறிவிக்கப்பட்டது. ஆனால், தானியேல் அந்த வெகுமதிகளை வாங்க மறுத்தார். அதே நேரத்தில் அவர் அக்கையெழுத்தின் அர்த்தத்தைக் தெரிவித்தார்.

## இதிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும்?

- நாம் ஒருபோதும் தேவனுக்கு விரோதமாக நம் இருதயத்தை உயர்த்திப் பெருமை பாராட்டக்கூடாது என்பதைக் கற்றுக்கொள்ள முடியும். அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை *(நீதி 16:18)* ஏற்றக்காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் *(1பேதுரு5:6)* இதை நாம் நிச்சயமாகவே அறிந்து கொள்ள வேண்டும்
- நாம் ஜீவனுள்ள தேவனைத் தவிர வேறெதையும் மகிமைப்படுத்தவோ, தொழுதுகொள்ளவோ கூடாது என்பதைக் கற்றுக்கொள்கிறோம் *( உபாகமம் 5:7-9 ; 6:5,6;லூக்கா 4:8 )*
- நாம் ஒவ்வொருவரும் உண்மையாகவே தேவனுடைய நியாயத் தராசிலே நிறுக்கப்படுவோம் அப். *17:31 II* கொரி.*5:10;* ரோமர் *14:12* வெளி *20:12;22:12* போன்ற வசனங்களைப் பார்க்கவும். நியாயத்தீர்ப்பின் நாளிலே நாம் குறையாகக் காணப்படாதபடி இப்போதே எல்லா முயற்சிகளையும் எடுக்கவேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வோம். ✝

## கிறிஸ்துவின் சபை

தேவனுடைய குடும்பமாயிருக்கிறது

தேவனுடைய வீடாக இருக்கிறது

கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறது

கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறது.

இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமாயிருக்கிறது

தேவனுடைய வீட்டிற்கு இயேசுவானவர் வழியாக இருக்கிறார்.(யோ 10:9 எபி 3:6 தீமோ 3:15) ஞானஸ்நானத்தினால் பாவங்களற நாம் கழுவப்படும் பொழுது இயேசுவின் வழியாக நாம் தேவனுடைய வீட்டிற்குள் பிரவேசிக்க முடியும் (I கொரி 12:13).

## எபேசியர் நிருபத்தில் எதிர்மறையான போதனைகள்

*Paul's Negative Teaching in Ephesians*

Albert Gardner

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் முதல் மூன்று அதிகாரங்கள் உபதேச காரியங்களையும், அடுத்த மூன்று அதிகாரங்கள் நடைமுறை கிறிஸ்தவக் கடமைகளையும் உள்ளடக்கியிருக்கிறது. பவுல், பெரும்பாலும் நேர்மறையான உபதேசங்களைக் கையாண்டிருந்தாலும், சில எதிர்மறையான போதனை முறையையும் கையாண்டிருக்கிறார். உதாரணமாக, ஒருவர் வேலைசெய்து பிழைப்பை நடத்தவேண்டும் என்று சொல்லும்போது, திருடக்கூடாது என்பது அதன் உட்பொருளாகும். அதேபோல், ஒருவர் திருடக்கூடாது என்று சொல்லும்போது, அவர் வேலைசெய்து பிழைப்பை நடத்தவேண்டுமென்பது அதன் உட்பொருளாகும். எதிர்மறையான போதனையினால் கோபமடைந்து அதை நிராகரிக்கிறவர்கள், பவுலைவிட, உந்துதல் பேச்சாளரான பீலேவின் தாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். எதிர்மறையான போதனைகளைச் செய்யவேண்டாமென்று மக்கள் சொல்வதைக் கேட்பது சுவாரஸ்யமாக இருக்கிறது. ஆனால், பவுல் எதிர்மறையான போதனைகளைச் செய்திருக்கிறார்.

1. நாம் இனிக் குழந்தைகளாயிராமல், பலவிதக் காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல் (4:14)
2. மற்றப் புற ஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல் நீங்கள் இனி நடவாமலிருங்கள் (4:17)
3. பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன் (4:25)
4. நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள் (4: 26)
5. பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள் (4: 27)
6. திருடுகிறவன் இனித் திருடாமல் (4: 28)



7. தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். (4:30)
8. சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக் கடவது (4: 31)
9. வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது (5: 3)
10. வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள் (5:4)
11. அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள் (5:7)
12. கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள் (5:11)
13. துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல். (5:18)
14. மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாய் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல் (6: 6)

†

## மீகா தீர்க்கனின் நாட்களில் நிலவிய பாவங்கள்

| | | |
|---|---|---|
| 1. | விக்கிரகாராதனை | - மீகா 1:7 |
| 2. | பொருளாசை | - மீகா 2:2 |
| 3. | ஒடுக்குதல் | - மீகா 2:2 |
| 4. | கொடுமைச் செயல்கள் | - மீகா 3:10 |
| 5. | பொய் தீர்க்கதரிசிகளை ஊக்குவித்தல் | - மீகா 2:6 |
| 6. | அதிபதிகளின் ஊழல்கள் | - மீகா 3:1-3 |
| 7. | தீர்க்கதரிசிகளின் ஊழல் | - மீகா 3:5-7 |
| 8. | ஆசாரியர்களின் ஊழல் | - மீகா 3:11 |
| 9. | கையூட்டு | - மீகா 3:9 |
| 10. | நாணையமற்ற தன்மை | - மீகா 6:10 |

# மதியிலிருந்து மதியீனத்திற்கு
## From wise to Foolish

*Bonnie Rushmore*

தாவீதுக்கும், பத்சேபாளுக்கும் பிறந்த இரண்டாவது மகனான சாலொமோன் ( II சாமுவேல் 12). இப்பூமியில் பிறந்த எல்லோரையும்விட ஞானமுள்ளவராக இருந்தார் (Iராஜாக்கள் 3:12).சாலொமோன் இஸ்ரவேலின் மூன்றாவது ராஜாவானபோது, கர்த்தர் சாலொமோனுக்கு, இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார். அதற்குச் சாலொமோன்: என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியான் உம்மைப்பற்றி உண்மையும், நீதியும், மனநேர்மையுமாய் உமக்கு முன்பாக நடந்தபடியே தேவரீர் அவருக்குப் பெரிய கிருபை செய்து அந்தப்பெரிய கிருபையை அவருக்குக் காத்து, இந்நாளில் இருக்கிறபடியே அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர். இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே நானோ -வென்றால் போக்குவரவு அறியா சிறு பிள்ளையாயிருக்கிறேன். நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும், இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன். ஆகையால், உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும் நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும். ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான். (Iராஜா.3:4-9). இந்த வேண்டுகோள் தேவனுக்குப் பிரியமாயிருந்தபடியால் தேவன் உடனே அதை சாலொமோனுக்கு வாய்க்கச் செய்தார். (Iராஜா.3:12-14).ஆயினும் தேவன் சாலொமோனுக்குச் செய்த வாக்குத்தத்தங்களில் சில வாக்குத்தத்தங்கள் அவருக்குப் பிரியமாயிருந்தபடியால், தேவன் உடனே அதை சாலொமோனுக்கு வாய்க்கச் செய்தார் (Iராஜா.3:12-14). ஆயினும், தேவன், சாலொமோனுக்குச் செய்த வாக்குத்தத்தங்களில் சில வாக்குத்தத்தங்கள் சாலொமோன் தேவனுக்கு முன்பாக உண்மையாயிருப்பதைச் சார்ந்திருந்தன.



சாலொமோன், தன்மீது தேவனால் பொழிந்தருளப்பட்ட ஞானத்தை இருபெண்கள் ஒரு குழந்தைக்காகச் சொந்தம் கொண்டாடி நியாயம் கேட்டுத் தன்னிடம் வந்தபோது பயன்படுத்தினார். ஒரே வீட்டில் குடியிருந்த இரண்டு ஸ்திரீகள் பிள்ளைகளைப் பெற்றார்கள். அதாவது, ஒருத்தி பிள்ளைபெற்ற மூன்றாம் நாளிலே இன்னொரு ஸ்திரீயும் பிள்ளை பெற்றாள். இராத்திரி தூக்கத்திலே ஒரு ஸ்திரீ தன் பிள்ளையின்மேல் புரண்டு படுத்ததினால் அது செத்துப்போயிற்று. அப்போது அந்த ஸ்திரீ மற்றொரு ஸ்திரீயின் பக்கத்தில் கிடந்த பிள்ளையை எடுத்து தன் மார்பிலே கிடத்திக் கொண்டு, செத்த தன் பிள்ளையை எடுத்து மற்றொரு ஸ்திரீயின் மார்பிலே கிடத்திவிட்டாள். இது சம்பந்தமாக இரு ஸ்திரீகளுக்கிடையில் நடந்த சண்டையின் நிமித்தம் நியாயம் கேட்டு சாலொமோன் ராஜாவிடம் வந்தார்கள். அப்போது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும், பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்று கட்டளையிட்டார். அப்பொழுது, உண்மையாக பிள்ளையின் தாய் ராஜாவை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லவேண்டாம்: அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்றாள். மற்றவள், அது எனக்கும் வேண்டாம் உனக்கும் வேண்டாம், பிளந்துபோடுங்கள் என்றாள். அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லாமல் அவளுக்குக் கொடுத்துவிடுங்கள்; அவளே அதன் தாய் (I ராஜாக்கள் 3:16-28). என்று தீர்ப்பு வழங்கினார்.

தாவிது ராஜா தேவனுக்கென்று ஓர் ஆலயத்தைக் கட்ட விரும்பினார். இருந்தபோதிலும், தாவீது ஒரு யுத்தவீரனாக இருந்து இரத்தம் படிந்த கரங்களை உடையவராக இருந்தபடியால், தாவீது தேவாலயத்தைக் கட்டுவதற்கு தேவன் அனுமதிக்கவில்லை. தேவன், தாவீதின் குமாரனாகிய சாலொமோன் தமக்கென்று தேவாலயத்தைக் கட்டுவான் என்று தாவீதுக்குச் சொல்லியிருந்தார். தாவீது ராஜா தேவாலயத்துக்கான கட்டுமானப் பொருட்களை ஆயத்தப்படுத்தினார். சாலொமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவான நாலாம் வருஷத்தில் கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத் தொடங்கினான். (Iராஜா.6:1 நாளா.226-16). கடைசியாக, ஏழு வருடங்களில் சாலொமோன், ஜனங்கள் தேவனை ஆராதிப்பதற்கென்று ஒரு மிகப்பெரிய தேவாலயத்தைக் கட்டி முடித்தான் (I ராஜா. 6 :38).

சாலொமோன் ராஜா தனக்கென்றும் ஓர் அரண்மனையைக் கட்டினான். அதைக் கட்டிமுடிக்க பதின்மூன்று வருடங்கள் ஆனது. சாலொமோன் கர்த்தருக்கென்று கட்டின ஆலயத்தைவிட தனக்கென்று கட்டின அரண்மனை மூன்று மடங்குக்கு மேல் பெரிதாக இருந்தது. அதேபோல், தேவாலயம் கட்டிமுடிப்பதற்கு எடுக்கப்பட்ட காலத்தை

விட கிட்டத்தட்ட இன்னொரு மடங்கு காலம் எடுத்துக்கொள்ளப்பட்டது (Iராஜா.7:1-2). அநேகமாக இது, சாலொமோன் தன் இருதயத்தில் தேவனுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தை, கொடுக்க வேண்டிய அளவுக்கு கொடுக்கவில்லை என்பதைத் தான் காட்டுகிறது.

சாலொமோன் ராஜாவின் ஞானம் உலக முழுவதிலும் பிரசித்தமானது. ஒரு சந்தர்பத்தில் சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனின் ஞானத்தைச் சோதிப்பதற்காக ஏறத்தாழ ஆயிரம் மைல்தூரம் பயணம் செய்தாள்.(Iராஜா.10:1). அந்த ராஜஸ்திரீ மிகுந்த பரிவாரத்தோடு, கந்தவர்க்கங்களையும், மிகுதியான பொன்னையும், இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும் எருசலேமுக்கு வந்தாள் (Iராஜா.10:2). அவளுடைய எல்லாக் கேள்விகளுக்கும் சாலொமோன் பதிலளித்தான். தன்னுடைய அரண்மனையையும், மிகுந்த ஆஸ்திகளையும், ராஜஸ்திரீக்குக் காட்டினான். அவளுடைய பயணத்தின் இறுதியில் அவள் "ராஜாவை நோக்கி: உம்முடைய வர்த்தமானங்களையும், உம்முடைய ஞானத்தையும் குறித்து நான் என் தேசத்தில் கேட்ட செய்தி மெய்யாயிற்று நான் வந்து அதை என் கண்களால் காணும்மட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை. இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன்; நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உம்முடைய ஞானமும், செல்வமும் அதிகமாயிருக்கிறது". என்று சொன்னாள் (Iராஜா.10:6,7). மேலும், பலர் சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்பதற்காகவே வந்தார்கள் வருஷாவருஷம் அவரவர் தங்கள் காணிக்கையாகிய வெள்ளிப் பாத்திரங்களையும், பொற்பாத்திரங்களையும், வஸ்திரங்களையும், ஆயுதங்களையும், கந்தவர்க்கங்களையும், குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும் கொண்டு வந்தார்கள் (I ராஜா. 10: 25).

அதன்பிறகு, சாலொமோனுடைய வாழ்க்கை மதியீனத்தை நோக்கிச் சென்றது. "ராஜாவாகிய சாலொமோன் பார்வோனின் குமாரத்தியை நேசித்ததுமல்லாமல், மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும், சீதோனியரும் ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள் மேலும் ஆசை வைத்தான். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் அவர்களைண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது. அவர்கள் நிச்சயமாய் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார். (I ராஜா. 11:1,2). சாலொமோன் தேவனால்



தெரிந்துகொள்ளப்பட்ட தேசமாகிய இஸ்ரவேல் தேசத்தை அரசாண்டு கொண்டிருக்கும் போது ஏழுநூறு மனையாட்டிகளும் முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள் அவர்களில் பெரும்பாலானோர் இஸ்ரவேலர்கள் விவாகம் பண்ணக்கூடாது என்று தேவனால் தடைசெய்யப்பட்டிருந்த அந்நிய தேசத்து ஸ்திரீகளாயிருந்தார்கள் (யாத்.34:16,17). தேவன் முன்னறிவித்தபடியே சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள். அதனால், அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. அவன் தன் மனைவிகளுக்காக வழிபாட்டு ஸ்தலங்களைக் கட்டி அதிலே தூபங்காட்டினான் (Iராஜா.11:4-8). சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப் போல பூரணமாய் பின்பற்றாமல் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

இரு சந்தர்ப்பங்களில் தேவன் சாலொமோனிடம், "நீ எனக்கு உண்மையாயிருந்தால் நான் உன்னை ஆசீர்வதிப்பேன், தாவீதின் சந்ததியாகிய நீ இஸ்ரவேல் தேசத்தை தொடந்து ஆட்சி செய்வாய்" என்று சொல்லியிருந்தார். சாலொமோன் மிகுதியான அறிவைப் பெற்றிருந்த போதிலும், அந்த உடன்படிக்கையை மீறினான். அவன் தன் மனைவிகளால் தன் இருதயத்தை தேவனிடத்திலிருந்து திருப்ப அனுமதித்துவிட்டான். ஆனால், தேவன் தமது உடன்படிக்கையை மீறாமல், இஸ்ரவேல் தேசத்துக்கான தமது திட்டத்தைச் செயல்படுத்தினார். மேலும், தேவன், தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்தபடியே, சாலொமோனுடைய வாழ்நாள் முழுவதும், இஸ்ரவேலின் ராஜாவாக இருக்க அனுமதித்தார். சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் ஆண்டு வந்தான். மீதமுள்ள பத்துக் கோத்திரங்களை உள்ளடக்கிய வடக்கு ராஜ்யத்தை யெரோபெயாம் ஆண்டு வந்தான் (Iராஜா.11:9-13, 12:1-24). எருசலேம் பட்டணத்தில் சாலொமோன் ராஜா நாற்பது வருடங்கள் ஆட்சி செய்தான். பின்பு மரித்து அங்கேயே அடக்கம் பண்ணப்பட்டார்.

சாலொமோன் தன் அரசாட்சியை தாழ்மையாகவும் கீழ்ப்படிதலுமுள்ள ஒரு தேவதாசனாக தொடங்கினார். கடைசியில் அவருடைய அந்நிய தேசத்து மனைவிகளினிமித்தம் அவருடைய இருதயம் ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களை வழிபட வழி வகுத்தது. இப்பூமியில் வாழ்ந்த மனிதர்களில் சாலொமோனைப் போல் ஞானவான் யாருமில்லை. இருந்தபோதிலும் தேவனிடத்தில் தனக்கிருந்த பக்தியையும் விசுவாசத்தையும் தன் அந்நிய மனைவிகள் எடுத்துப்போட அனுமதித்தான்.

ஒருவேளை, சாலொமோன் தன் வாழ்நாளின் இறுதியில் மனந்திரும்பியிருக்கலாம். ஏனென்றால், நாளாகமப் புத்தகம் அவருடைய வீழ்ச்சியைப் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. மறுபடியும், பிரசங்கி புத்தகம் அவருடைய சோகத்தின் உச்சகட்டத்தை வெளிப்படுத்துகிறது. இங்கே, அவர் அநேகமாக மனந்திரும்பிய நிலையில் தன் பழைய வாழ்க்கையைத் திரும்பி பார்க்கும் விதமாகத்தான் இருக்கிறது. மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. உன்னதப்பாட்டுப் புத்தகம் சாலொமோன் இளமையில் தேவனிடத்தில் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்துகிறது. அதேபோல் நீதிமொழிகள் புத்தகம், சாலொமோனுக்கு தன்னுடைய வாழ்க்கையின் மத்திய காலத்தில் இருந்த முதிர்ச்சியை வெளிப்படுத்துகிறது. பிரசங்கி புத்தகம் சாலொமோன் தன் இளமையைத் திரும்பிப் பார்க்கும் நிகழ்வை வெளிப்படுத்துகிறது.

சாலொமோன் ராஜா தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டது போல், நம் வாழ்க்கையை நாம் முடித்துக்கொள்ள வேண்டாம். வேதவாக்கியங்களைப் படித்து ( II தீமோ.*2:15* ). நம் வாழ்க்கை தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருக்கத்தக்கதாகச் செய்து, நியாயத் தீர்ப்பின் நாளிலே, "உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்னும் வார்த்தையை கேட்கத்தக்கதாக நாம் ஆயத்தமாவோம் (மத். *25: 21 -23*). †

## வேதாகமத்தில் கொடுப்பவர்கள்

| | | |
|---|---|---|
| ஆபிரகாம் | - மனப்பூர்வமாக கொடுத்தார் | - ஆதி. 22 :1-19 |
| சவுல் | - கஞ்சத்தனமாக கொடுத்தார் | - I சாமுவேல் 15:17- 25 |
| தாவீது | - தியாகப் பூர்வமாகப் கொடுத்தார் | - II சாமுவேல் 24:24 |
| அனனியா, சப்பீராள் | - பொருளாசையுடன் கொடுத்தனர் | - அப். 5:1-11 |
| மக்கதோனியர்கள் | - கொடியதரித்திரத்திலும் கொடுத்தனர் | - கொரிந்தியர் 8:1-15 |





# தேவனைப் பிரியப்படுத்திய ஒரு மனிதனுடைய விசுவாசம்
## A MAN WHOSE FAITH PLEASED GOD

T. Pierce Brown

மிகப்பெரிய விசுவாசத்தைக் கொண்டிருந்த நூற்றுக்கதிபதியைக் குறித்து மத்தேயு *8: 5-10*; லூக்கா *7:1 - 9* ஆகிய வசனப்பகுதிகளில் நாம் பார்க்கிறோம். நூற்றுக்கதிபதி என்கிற இக்கதாப்பாத்திரம் மிகவும் சுவாரஸ்யமானது. இச்சம்பவமானது தீவிரமான ஆலோசனைக்கு தகுதி வாய்தந்தாயிருக்கிறது. முதலாவது, இந்த நூற்றுக்கதிபதி எப்படிப்பட்ட மனிதன் என்பதையும், இரண்டாவது, அவருடைய விவாசம் எப்படிப்பட்டதென்பதையும், மூன்றாவது அவ்வகையான விசுவாசத்தின் நன்மை பற்றியும் பார்ப்போம்.

முதலாவது, யூதக் கண்ணோட்டத்தில் அவன் ஒரு புற ஜாதியானாக இருந்தான். இரண்டாவது, அவன் ஒரு ரோமனாக இருந்தான். அதாவது, அவன் ரோமனாக, இருந்தபடியால் அவன் பெருமைக்காரனாக வெறுப்புணர்வு உள்ளவனாக, இரக்கமற்றவனாக இருக்கவேண்டுமென்று நினைப்பது இயற்கையே. மூன்றாவது, அவன் ரோமப் பட்டாளத்திலே நூற்றுக்கதிபதியாக இருந்தான். இப்பதவி ஒருவருக்கு இவர்மீதிருந்த தவறான எண்ணத்தை இன்னும் அதிகரிக்கச் செய்தது. விசுவாசத்திற்கு மாதிரியாக மெச்சப்பட்ட இம்மனிதனைப் பற்றி சிந்திப்பதற்கு முன்பாக, நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான பாடமொன்று இருக்கிறது.

இங்கே பாடம் என்னவென்றால், நாம் ஒரு சிலரை வகைப்படுத்தி, இவர் இப்படித்தான் இருப்பார் என்று யூகித்து முத்திரை போட்டு விடுகிறோம். மேலும், நாம் சமுதாயத்தில் அரசியல்வாதிகள், சட்ட அதிகாரிகள், ஓட்டுநர்கள், அரசு ஊழியர்கள் அல்லது ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்களென்று வகைப்படுத்தி அவர்கள் இப்படித்தான் நடந்து கொள்வார்கள் என்று முன்தீர்த்து விடுகிறோம். ஆனால், உண்மையென்னவென்றால், நாம் அவர்களுக்குக் குத்தும் முத்திரையினாலே அல்ல, அவரவருடைய தனிப்பட்ட செயல்பாடுகளினாலே மதிப்பீடு செய்யப்படுகிறார்கள்.

இச்சம்பவத்தில் நாம் பார்க்கும் போது, இந்த நூற்றுக்கதிபதி அன்பில்லாதவனாக எதிர்பார்க்கப்பட்டாலும், "அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான்" என்று லூக்கா 7:5 சொல்லுகிறது. அவன் தேவபக்தியற்றவனாக மற்றவர்களால் எதிர்பார்க்கப்பட்டாலும் அவன் நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவன் ஆதிக்கம் செலுத்துகிறவனாக,

பெருமையுள்ளவனாக, அகங்காரம் உள்ளவனாக மற்றவர்களால் எதிர்பார்க்கப்பட்டாலும், நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல (லுக்க7:6) என்றான். அவன் இரக்கமற்றவனாக மற்றவர்களால் எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும் கூட அவன் தன் வேலைக்காரனித்தில் பிரியமாயிருந்து அவனுடைய நலனை விரும்பியிருக்கிறான்.

எனவே, வழக்கத்திற்கு மாறான மனிதனாக இருந்திருக்கிறான். இவன் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் மற்றுமொரு நூற்றுக்கதிபதியை நினைவுபடுத்துகிறான். நாம் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த நூற்றுக்கதிபதி எதற்காக அல்லது எப்படி இப்பண்புகளை வளர்த்துக் கொண்டான் என்று நமக்குத் தெரியாது. இருந்தபோதிலும், இந்த உண்மையில் மற்றுமொரு கவனிக்கத்தக்க பாடம் இருக்கிறது. எல்லாவிதமான எதிர்மறையான சூழ்நிலைகளிலும் தேவனுக்கென்று நேர்மறையான உண்மையான ஆத்துமாக்கள் உண்டு. அப்போஸ்தலர் *18:10*-ல் அப்பட்டணம் விக்கிரக ஆராதனை மற்றும் தேவபக்தியற்ற மக்களால் நிறைந்திருந்த ஒரு பட்டணமாக இருந்திருந்தாலும் கூட, இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்று கர்த்தர் சொன்னார்.

இரண்டாவதாக, நாம் பின்பற்றுவதற்கும், நம் ஆழ்ந்த சிந்தனைக்கும் தகுதி வாய்ந்த இம்மனிதனுடைய விசுவாசத்தை நாம் கவனிப்போம். முதலாவது, அவன் இயேசுவை அழைத்து தன் வேலைக்காரனை சுகப்படுத்தும்படியாகக் கேட்டுக் கொண்டது, இயேசு கிறிஸ்துவுக்கு சுகமாக்கும் வல்லமை உண்டு என்றும், அவர் மனதுருக்கம் கொண்டவர் என்றும் அவனுக்கிருந்த விசுவாசத்தை வெளிப்படுத்தியது. இயேசுவானவர் தாம் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா என்று இந்த நூற்றுக்கதிபதி புரிந்துகொண்டதாக நம்மால் யூகிக்க முடியவில்லை. இங்கே நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள முடியும். உங்கள் விசுவாசம் எந்த அளவாக இருந்தாலும், உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியத்தை நீங்கள் விசுவாசித்து, அதின்படி செயல்பட்டால் உங்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டு, விசுவாசத்தில் விருத்தியடையும் படி செய்யும்.

உதாரணமாக, நீங்கள் கிறிஸ்துவைப் பற்றி வாசித்து, அவர் நல்லவர், நேர்மையானவர் என்று நீங்கள் ஒத்துக்கொண்டால், அவர் நல்லவர், நேர்மையானவர் என்பது உண்மையான இருந்தாலும் கூட அந்த விசுவாசம் உங்களை இரட்சிப்பதற்குப் போதுமானதல்ல. இருந்தபோதிலும், இயேசு நல்லவர், நேர்மையானவர் என்பதை நீங்கள் உண்மையாகவே விசுவாசித்து, அதன்படி செயல்பட்டால், அவர் தேவனுடைய குமாரன் என்று நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். இயேசு கிறிஸ்து நல்லவராக நேர்மையானவராக இருக்கிறபடியால், அவர் ஏமாற்றுபவராக இருக்க முடியாது. இயேசு கிறிஸ்து வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் உடையவராக, தேவனுடைய குமாரனாக



இருக்கிறார் என்கிற உண்மையின் அடிப்படையில் செயல்பட்டால், உங்கள் விசுவாசம் வளர்ந்து பலன் தரும். அதன் பின்பு நீங்கள் அந்த அதிகாரத்திற்கு கீழ்ப்படியும் போது, இரட்சிப்பையும் அதோடு சம்பந்தப்பட்ட அனைத்து ஆசீர்வாதங்களையும் பெறுவீர்கள்.

எனவே, இவ்வகையான விசுவாசத்தின் விளைவுகள் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதும், முக்கியமானதுமாயிருக்கிறது. கிரியை செய்கிற விசுவாசம் சிறிய அளவாயிருந்தாலும், அதன் முக்கியத்துவத்தைப் பற்றி கிறிஸ்து இவ்வாறு சொல்லியிருக்கிறார். கடுகளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால் நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும் (லூக்கா*17:6*) சிறிய விசுவாசத்தால் என்ன செய்ய முடியுமென்பதை அவர் வலியுறுத்தவில்லை. ஏனென்றால், இங்கே அவர்கள் சிறிய விசுவாசத்தை உடையவர்களாயிருந்தார்கள். சிறிதளவு விசுவாசத்தையும் செயல்படுத்தினால் அது என்ன செய்யும் என்பதைத்தான் இயேசு கிறிஸ்து இங்கே வலியுத்துகிறார். இங்கே பாடம் என்னவென்றால் **உங்களுக்கு இருக்கும் கொஞ்ச விசுவாசத்தையும் நீங்கள் பயன்படுத்துங்கள்.** அப்பொழுது நீங்கள் பூரணமாக ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.

†

## அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் "முதல்"களின் பட்டியல்

1. பரிசுத்த ஆவியானவர் **முதலில்** இறங்கியது - அப்.2-ம் அதி.
2. **முதல்** சபையின் ஆரம்பம் - அப்.2-ம் அதி.
3. **முதல்** நற்செய்திப் பிரசங்கம் - அப்.2-ம் அதி.
4. இயேசுவின் நாமத்தில் **முதல்** திருமுழுக்கு - அப். 2:38.
5. புதிய ஏற்பாட்டு சபையின் **முதல்** ஆராதனை - அப். 2:42.
6. சபையின் எழுந்த **முதல்** பிரச்சனை - அப்.6-ம் அதி.
7. உதவிக்காரர்கள் **முதலில்** தெரிந்தெடுத்தல் - அப்.8-ம் அதி.
8. **முதல்** கிறிஸ்தவ சிரந்தசாட்சி - அப்.7-ம் அதி.
9. **முதல்** நற்செய்திப் பிரசங்கி - அப்.8-ம் அதி.
10. புறவனத்திலிருந்து **முதல்** மனமாற்றம் - அப்.10,11-ம் அதி.
11. **முதல்** புறவினத்து சபை - அப்.11-ம் அதி.
12. **முதல்** நற்செய்திப் பயணம் - அப்.11-ம் அதி.
13. ஐரோப்பாவில் **முதல்** சபை - அப்.16-ம் அதி.

# நான் எங்கே இருக்கிறேன் ?

## WHERE AM I ?

Rebecca Rushmore

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்புகளையும் கவனமாக வாசித்து யோசியுங்கள். முதல் குறிப்பிலேயே என் பெயரை நீங்கள் யூகித்துவிட்டால் 100 மதிப்பெண் களை உங்களுக்கு நீங்களே கொடுத்து -விடுங்கள். ஐந்தாவது குறிப்பிற்குப் பிறகு நான் யார் என்பதைக் கண்டுபிடித்தால் உங்கள் மதிப்பெண் 60. என் அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையைச் சரிபார்க்கக் கொடுக்கப்பட்டுள்ள வேதவசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.




1. நான், இஸ்ரவேலில், கடுமையான வறுமையின்போது வாழ்ந்தேன் (நியா. 6:6)
2. என் தகப்பன் பெயர் யோவாஸ் (நியா. 6 :11)
3. என் ஜனங்கள் மீதியானியரிடமிருந்து தங்களை ஒளித்துக் கொள்ள வேண்டியதாயிருந்தது. (நியா. 6:26)
4. கர்த்தருடைய தூதன் இறைச்சியையும், புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டபொழுது, அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி, இறைச்சியையும், அப்பங்களையும் பட்சித்ததை நான் கண்டேன் (நியா. 6:21)
5. நான், இரவு வேளையில், பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, அதன் அருகேயிருக்கிற தோப்பை வெட்டிப்போட்டு, கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினேன் (நியா.6 :25 -27 )
6. நான் பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்துப் போட்டதினால் யெருபாகால் என்று அழைக்கப்பட்டேன் (நியா. 6:32 :7. 1)
7. நான், தேவனிடம் மயிருள்ள ஒரு தோலையும், பூமியையும் வைத்து ஓர் அடையாளம் கேட்டேன் (நியா. 6:36-40).
8. என்னோடிருந்த ஜனங்கள், அதாவது என்னுடைய சேனை மிகுதியாயிருந்தது என்று தேவன் சொன்னார் ( நியா. 7 :2)
9. தண்ணீரண்டையில் தண்ணீர் குடிக்க முழங்கால் ஊன்றிக் குனிந்தவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்கள் (நியா. 7 :3-7)
10. 300பேர்களைக் கொண்ட என் சேனை மீதியானியரை மேற்கொண்டது (நியா.7 :16 -8 :22).

†





# பிரிஸ்கில்லா மற்றும் ஆக்கில்லா மற்றும் அப்பொல்லோ

## Priscilla and Aquila and Apollos

*Harvey Porter*

நாம் ஆக்கில்லாவையும், அவனுடைய மனைவியாகிய பிரிஸ்கில்லாளையும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 18-ம் அதிகாரத்தில் தான் பார்க்கிறோம். பவுல் கொரிந்து பட்டணத்திற்கு வந்த அக்காலகட்டத்தில்தான் ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் கொரிந்து பட்டணத்திற்கு வந்தார்கள். அவர்களும், மற்ற யூதர்களோடு ரோமாபுரியை விட்டு வெளியேறினார்கள். ஏனென்றால், யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கிலவுதிராயன் கட்டளையிட்டுடிருந்தான் (அப்.18:2). யூத மார்க்கத்திற்கும் கிறிஸ்த மார்க்கத்திற்கும் இடையே இருந்த நெருக்கமான உறவு காரணமாக கிறிஸ்தவர்கள் ரோமாபுரியிலிருந்து வெளியேற்றப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் நம்புகிறார்கள். ஆக்கில்லா ஒரு யூதனாக இருந்தான். யூதர்களாக இருந்தாலும் கிறிஸ்தவர்களாக இருந்தாலும், தங்கள் நம்பிக்கைக்காக அவர்கள் துன்பப்படுத்தப்பட்டார்கள்.



அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்து பட்டணத்தை விட்டுச்சென்ற போது ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவரோடு சென்றார்கள். அவர்களெல்லாரும் சேர்ந்து எபேசு பட்டணத்துக்குப் போனார்கள். அங்கே ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் தங்கிவிட்டார்கள். பவுல் சீரியாவுக்கு கடந்து சென்றார். இந்த எபேசு பட்டணத்தில் தான் அவர்கள், யூதனும் எகிப்தின் அலெக்சந்திரியா பட்டணத்தைச் சேர்ந்தவனுமாகின அப்பொல்லோவைச் சந்தித்தார்கள். லூக்கா ஆசிரியர் இந்த அப்பொல்லோவை சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமானவன் என்று விவரிக்கிறார். (அப்.18:24).

இந்த அப்பொல்லோ கற்றறிந்தவனாக, கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டிருதான். கிரேக்க மொழியில் கற்றறிந்தான் என்பது மெத்தப் படித்த, சொல்வன்மை வாய்ந்தவன் என்று பொருள்படும். லூக்கா தொடந்து அப்பொல்லோவைப்பற்றி இவ்விதமாக விவரிக்கிறார். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக்கொண்டு வந்தான் என்று. இந்த அப்பொல்லோ ஜெப ஆலயத்தில் கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றி பேசிக்கொண்டிருந்தபோது, கூடாரம் போடுகிற பணி செய்கிறவர்களாயிருந்த ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தைப் பற்றிய முழு சத்தியத்தையும் அப்பொல்லோ அறியவில்லை என்பதைக் கண்டுபிடித்துவிட்டார்கள் இதை லூக்கா ஆசிரியர், அவன் யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்தான் என்று அடையாளப்படுத்தினதிலிருந்து தெரிகிறது.

அப்பொல்லோ யோவானின் ஞானஸ்நானத்தை மாத்திரம் அறிந்திருந்ததில் என்ன முக்கியமான கருத்து இருக்கிறது? இன்றைய நாட்களில் பல நல்ல மக்கள் ஞானஸ்நானம் சம்பந்தமாக பல நம்பிக்கைகளைக் கொண்டிருக்கிறார்கள். சிலர் குழந்தைகளுக்கு ஞானஸ்நாம் கொணடக்கிறார்கள். சிலர் விசுவாசம் இல்லாதவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். சிலர் ஞானஸ்நானம் இரட்சிப்புக்கு அவசியம் என்கிறார்கள். வேறு சிலர் அது அவசியமில்லை என்கிறார்கள்.

இந்த ஒரே காரியத்திற்காக இந்த நேர்மையான மனிதனை யாராவது சரியாக வழிநடத்த வேண்டுமா? பெரும்பாலானோர், இவன் கற்றறிந்த மனிதனாக இருந்தபடியால் அவனை நெருங்குவதற்கே பலர் வெகுநேரம் யோசிப்பார்கள். அக்காலகட்டத்தில் ரோம சாம்ராஜ்யத்தில் மிக நேர்த்தியான பல்கலைக்கழகம் அலெக்சாந்திரியாவில் தான் இருந்தது. இது யூதமார்க்கத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்கு மையமாக இருந்தது. இந்த அப்பொல்லோ பழைய ஏற்பாட்டின் காரியங்களையும் நன்கு அறிந்திருந்தான். என்ன ஒரு பொருத்தம்! இவன் உலகப் பிரகாரமான கல்வியையும் பெற்றிருந்தான், வேதவாக்கியங்களைப் பற்றிய அறிவையும் பெற்றிருந்தான். ஒருவேளை இன்றைக்கு தாராளமாகத் இருந்திருந்தால், எந்த ஒரு சபையும் அவரை ஓர் பிரசங்கியாராக தெரிந்துகொண்டிருக்கும். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டபடியால், கிறிஸ்தவத்தைப் பற்றி அவனுக்கு அதிகமாகத் தெரிந்திருக்கும். அவன் கிறிஸ்துவை குறித்துப் பிரசங்கிக்கத் தன் வாழ்க்கையையே கொடுத்தபடியால், எது அவசியமோ அது



தனக்குத் தெரியும் என்று நினைத்தான். அவன் ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக் கொண்டு வந்தான்" என்று வசனம் சொல்லுகிறது.

நாமெல்லோரும் இவனுடைய பிரசங்கத்தைக் கேட்க விரும்புவோம். கொரிந்துப் பட்டணத்தில் இவர் ஓர் வல்லமையான பிரசங்கியாராக இருந்திருக்கிறார் என்று நாம் கற்றுக்கொள்கிறோம். ஆனால், அவர் ஞானஸ்நானத்தைப் பற்றிய காரியத்தில் மாத்திரம் போதுமான அறிவு இல்லாதிருந்தார்.

நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? சாமர்த்தியமும், நேர்மையும் உடைய இந்த நல்ல மனிதனைப்போல் ஒருவனிடத்தில் யாராவது எதையாவது சொல்ல வேண்டுமென்று நினைப்போமா?

ஆனால் கூடாரவேலை செய்கிற ஒரு தம்பதி சொல்வன்மை மிக்க இந்த மனிதனுக்கு உதவ நினைத்தார்கள். அவர்கள் எல்லாருக்கும் முன்பாக வைத்து அப்பொல்லோவைத் திருத்த நினைக்கவில்லை. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு அவனைச் சேர்த்துக்கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாய் அவனுக்கு விவரிக்கக் காண்பித்தார்கள் (வசனம் 26) இவனுடைய காலகட்டத்தில் யோவானின் ஞானஸ்நானம் வழக்கத்தில் இருந்தது. அது கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தப்படுத்தியது. ஆனால், பெந்தெகொஸ்தே நாளிலே ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டபோது விசுவாசிகளுக்கு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இது தேவனுடைய அதிகாரத்தால், தேவருமாரனும், நம் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் கொடுக்கப்பட்டது. அந்த ஞானஸ்நானம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே கொடுக்கப்பட்டது (மத்தேயு 28:18-20; அப். 2: 38).

ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் சரியானதைத்தான் செய்தார்கள். அவர்கள் அப்படிச் செய்வது அன்று முக்கியமாகக் காணப்பட்டது. ஞானஸ்நானம் ஒரு விசுவாச செயல், அது ஒருவரை ராஜ்யத்திற்குள் கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபைக்குள் இருக்கச் செய்கிறது. அது நம் பாவங்களைக் கழுவுகிறது. இதன் மூலம் ஒருவர் இயேசு கிறிஸ்துவோடு மரணம் ,அடக்கம் , உயிர்த்தெழுலில் இணைகிறார்.

அப்பொல்லோவுக்கு, ஞானஸ்நானத்தைப் பற்றிய காரியம் போதிக்கப்பட வேண்டியதாயிருந்தது. திருத்தமாகப் அக்காரியம் தனக்கு திருத்தமாகப் போதிக்கப்பட்டபோது அவர் அதை நேர்மறையாக எடுத்துக்கொண்டார். ஏனெனில், அவர் தேவனுடைய திட்டத்தை இன்னும் அதிகத்திட்டமாய் அறிய விரும்பினார். நாம் அப்படி இருக்கிறோமா? †

# நல்ல தேவனால் தண்டிக்க முடியுமா?

## Can a good God punish?

**Jhon Gipson**

இன்றைய உலகில் தேவனால் துன்மார்க்கரை அழிக்கவே முடியாது போலத் தெரிகிறது. ஏனென்றால், அவருடைய பங்கு அன்பு செலுத்துவதும், மன்னிப்பதும் தான். மாறாக, தண்டிப்பதல்ல என்ற எண்ணம். பலர் அவருடைய அன்பைப் பற்றி பேசுவார்கள். ஆனால், தேவனுடைய கோபத்தைப்பற்றி பேசுவதென்பது பலருடைய உணர்வுகளுக்கு அருவருப்பாகவும், அசௌகரியமாகவும் இருக்கிறது. இன்னும் சிலர் அவருடைய இரக்கம், தயவு போன்றவைகளைப் பற்றிக்கூட பேசுவார்கள். ஆனால், தேவனுடைய கோபம், தேவனுடைய நீதி என்று வரும்போது தங்கள் வாயைத் திறவாதிருக்கிறார்கள்.

ஆயினும், நாம் தேவகோபாக்கினையைப் பற்றிப் பேச விரும்பாம -லிருப்பது போல் வேதாகமம் இருப்பதில்லை. கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன்; கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர், உக்கிர கோபமுள்ளவர்; கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர், அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்துவைக்கிறவர் ( நாகூம் 1:2) இதைப் பழைய ஏற்பட்டு வசனங்கள் மட்டுமல்ல புதிய ஏற்பாட்டு வசனங்களிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து இவ்விதமாகக் சொன்னார் குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவர்கள் மேல் நிற்கும் என்றார். (யோவான் 3:36). அப்போஸ்தலனாகிய பவுல், சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய் தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார் (ரோமர் 1:18) மேலும் தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தம்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும் (தெச.1:7,8) மனுஷர் பர்வதங்களையும், கன்மலைகளையும் அழைத்து, நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவரருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்(வெளி.6:16) என்று சொல்லுவார்கள்.



இங்கே, காரியம் ஒருமித்தும், தெளிவாகவும் இருக்கிறது. தேவன் நீதியைச் சரிக்கட்டுகிறவர், உக்கிரகோபமுள்ளவர், அவர் நிதியைச் சரிகட்டத் தவறுவதேயில்லை. துன்மார்க்கர் நிதிமான்களைத் தொடர்ந்து துன்பப்படுத்துவதைத் தேவன் சகித்துக் கொள்வாரா? கற்பனை செய்து பார்க்கக்கூடிய எல்லாவகையான பாவங்களும் தண்டிக்கப்படாமல் போய்விடுமோ? நம் நீதி அமைப்பு, எந்த ஒரு கொலைகாரனையாவது, பலாத்காரம் செய்பவனையாவது தண்டிக்காமல் விட்டுவிட்டால் நாம் கடுங்கோபம் கொள்வோம். ரோமர் 12; 19-ல் பழிவாங்குதல் எனக்குரியது நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லும்போது, இது அநியாயம் என்று சொல்லுகிறறோம். இது கேலிக் கூத்தாயிருக்கிறது!

நல்ல ஒரு தேவனால் தண்டிக்க முடியுமா? அவரால் முடியும் என்பது மாத்திரமல்ல, அவர் அப்படிச் செய்யவும் வேண்டும்! அப்பொழுது தான் நீதியுள்ள தேவன் ✝

# ஒவ்வொரு நாளும்

- **ஒவ்வொரு நாளும்** தேவன் தம்முடைய வாத்தைமுலமாக உங்களிடம் ஏதாவது சொல்லட்டும்
- **ஒவ்வொரு நாளும்** தேவனிடம் ஜெபத்தின் மூலமாக ஏதாவது சொல்லுங்கள்
- **ஒவ்வொரு நாளும்** யாரோ ஒருவனிடம் தேவனுக்காக ஏதாவது ஒன்றைச் சொல்லுங்கள்
- **ஒவ்வொரு நாளும்** தேவனுக்காக யாரே ஒருவருக்கு ஏதாவது செய்யுங்கள். எவ்வித சந்தேகமுமின்றி தேவனை அதிகமாய் துக்கப்படுகிற நஷ்டம் நித்தியத்தில் நம் ஆத்மாவுக்கு ஏற்படுகிற நஷ்டம்தான் நாம் இயேசுவினிடத்தில் திரும்பி அவருடைய வார்த்தைக்குச் செவி கொடுத்து அதற்குக் கீழ்படிந்தால் அந்த நஷ்டம் ஏற்படாது
- **ஒவ்வொரு நாளும்** தேவன் தம்முடைய வார்த்தை முலமாக உங்களிடம் ஏதாவது சொல்லட்டும்

# வேதாகம கேள்விகள்

## *Questions On Baptism*


**Keith parker**

*1.தேவனுடைய மீட்பின் திட்டத்தில் மனிதனுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட ஞானஸ்நானம் இருக்கிறதா?*

இல்லை. ஆனாலும் சிலர், ஒருவர் தெளிப்பு ஞானஸ்நானம் பெற்றாலும், முழுக்கு ஞானஸ்தானம் பெற்றாலும் அது எவ்வித வித்தியாசத்தையும் ஏற்படுத்துவது இல்லை என்கின்றனர். வேறு சிலர், ஒருவர் தண்ணீர் ஞானஸ்தானத்தையும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்தானத்தையும் அனுபவிக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். ஆனால், வேதவசனங்கள் ஒரே ஞானஸ்நானம் என்று தான் உறுதி -படுத்துகின்றன (எபேசியர் 4:5)

*2. தண்ணீர் ஞானஸ்நானத்தில் தண்ணீர் பாவங்களைக் கழுவுகிறதா?*

இல்லை. தண்ணீரில் நம் பாவங்களைக் கழுவத்தக்க வல்லமை எதுவுமில்லை. ஆனாலும், உண்மையில் ஒரு பாவி தன் பாவங்கள் கழுவப்பட தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெற்றே ஆகவேண்டும்



(அப்.22:16) அப்பொழுது, இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் ஒரு பாவியின் பாவங்கள் கழுவப்படுகின்றன (வெளி.1:5) ஒருவர் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறும்போது கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறார் (ரோமர் 6:3), ஏனென்றால், கிறிஸ்து மரித்துஇரத்தம் சிந்தினதினால் (யோவான்9:34) மனிதன் நீதிமானாக்கப்படுவது சாத்தியமானது (ரோமர் 5:9) என் பாவங்களை எது கழுவும்? என்பீர்களானால், "இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றும் என் பாவத்தைக் கழுவாது" என்று நீங்கள் உறுதியாக நம்பலாம்.

*3. ஒருவருடைய ஞானஸ்நானத்தின் உண்மைத்தன்மையானது ஊழியர் ஞானஸ்நானங் கொடுக்கும்போது எந்த வழிமுறையைப் பயன்படுத்துகிறாரோ அதைச் சார்ந்திருக்கிறதா?*



இல்லை. சமீபத்தில் ஒரு மார்க்கப்பிரிவினைக் கூட்ட பிரசங்கியாரிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, ஒரு பிரசங்கியார் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு முன்பாக, "நான் இயேசுவின் நாமத்தில் உன்னை ஞானஸ்நானப்படுத்துகிறேன்" என்று சொல்லவேண்டும் என்றார். நாம் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறவேண்டும் நாம் இதை தேவனுடைய சித்தத்திற்கு இசைவாகச் செய்யவேண்டும் (அப்.2:38). நாம் என்ன செய்ய வேண்டுமென்றுதான் வேதம் சொல்லுகிறதே தவிர வேறொன்றுமில்லை. நாம் எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் அதையெல்லாம் இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினாலும், அங்கீகாரத்தினாலும், செய்ய வேண்டும் (மத்தேயு 28:18-20; கொலொசெயர் 3:17).

*4. ஞானஸ்நானம் பாவம் நிறைந்தஉறவுகளைப் பரிசுத்தமாக்குகிறதா?*

இல்லை. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்துக்கு எழுதும் போது, "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள் (1கொரிந்தியர்6:11) என்று எழுதுகிறார். ஆனால், அவர்கள் அந்நிலையை அடைவதற்குப் பழைய பாவ பழக்கவழக்கங்களை விடவேண்டியதாயிருந்தது. ஒருவர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு அவர் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் (அப்.2:38). மனந்திரும்புதல் என்பது வாழ்க்கை மாற்றத்திற்கு வழிவகுக்கும் மனமாற்றமாகும் (மத்தேயு 21:28,29). ஒருவர் விபச்சாரத்தில் வாழ்ந்துகொண்டிருந்தால் (கொலொசெயர் 3:5-7) ஞானஸ்நானத்தின் மூலம் அந்தக் கேவலமான உறவைச் சரிசெய்ய இயலாது. ஞானஸ்நானம் பாவங்களைக் கழுவுகிறது. ஆனால், இயல்பாகவே மனிதனுக்குள் காணப்படுகிற தவறான உறவை ஒருபோதும் அது பரிசுத்தப்படுத்துவதில்லை.

*5.ஒருவர் வேதாகத்தில் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளும் வரை ஞானஸ்நானம் பெறக் காத்திருக்க வேண்டுமா?*

இல்லை. இது உண்மையாக இருந்தால் யாருமே கீழ்ப்படியமாட்டார்கள். முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் தாங்கள் இரட்சிக்கிப்பட என்ன செய்யவேண்டுமென்று அறிந்துகொண்டபோது, அவர்கள் அதற்கு உடனே கீழ்ப்படிந்தார்கள் (அப்.2:41;16:34). இங்கே அவர்கள் மாதத்தின் ஏதோ ஒரு ஞாயிற்றுக்கிழமைக்காகவோ அல்லது விஷேசத்த தருணங்களுக்காவோ காத்திருக்கவில்லை. இங்கே, ஞானஸ்நானம் என்பது மனிதனுக்கான தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் ஒரு பகுதி என்பதை நமக்குக் காட்டுகிறது. இப்பொழுது, கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் (அப்.22:16) அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். (அப்.2:41,47) †

# பிரச்சினையின் மையம்

## The heart of the problem

Paul harvey

ஒரு நாளை எடுத்துக் கொள்ளுங்கள். ஏதாவது ஒரு நாளை எடுத்துக்கொள்ளுங்கள்; அதில், ஒரு செய்தித்தாளை எடுத்துக் கொள்ளுங்கள். ஏதாவது ஒரு செய்தித்தாளை எடுத்துக் கொள்ளுங்கள்...

இஸ்ரேலில் சண்டை, ஹைதியில் கைது, ஏமன் மற்றும் போஸ்னியாவில் போர் இன்னும் உலகின் பல இடங்களில் வழக்குகள், இனவெறி, மோசடி, போதை மருந்து என செய்திதாள்களின் பக்கங்களில் பார்க்கிறோம்.

சிங்கப்பூரின் மூத்த அமைச்சரான Lee Khan yew என்பவர் தமது உரையில்... வருந்தத்தக்கதென்றாலும் கூட, மனிதர்கள் உள்ளூர கொடூர குணமுடையவர்கள் என்று தெரிவித்தார்.

கலகம் நிறைந்த இவ்வுலகில் நாம் பார்க்கும்போது அவர் சொன்னது நிச்சயமாகவே சரிதான். குற்றம், விவாகரத்து, கருக்கலைப்பு, பேராசை, பொறுப்பின்மை போன்றவைகள் இயற்கையாகவே நம்மிடத்திலிருந்து ஊற்றெடுத்து வருகின்றன.

நம்மால் தடுக்கமுடியாத வியாதிகளுக்கு மருந்து கண்டுபிடிக்க அரசாங்க அதிகாரிகள் தீர்வுகளைத் தேடுகிறார்கள். நாம் சட்டங்களுக்கு மேல் சட்டங்களை இயற்றி, சட்டங்களின் மூலமாக இரட்சிப்பைத் தேடுகிறோம். ஏனென்றால், சீனாய் பர்வதத்திலிருந்து மோசே கொண்டு வந்த பத்துக் கற்பனைகள் முக்கியமற்றது என்று கருதுகிறோம்.

இவ்வுலகில் ஏன் குற்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன? மக்கள் அடுத்தவர்களை நஷ்டப்படுத்தி தங்கள் தேவைகளைச் சந்திக்க முயற்சிப்பதனால் தான்.


இவ்வுலகில் யுத்தங்கள் நடைபெறுவதற்கான காரணங்கள் என்ன? தேசங்கள் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்களை நஷ்டப்படுத்தி தங்கள் தேவைகளைச் சந்திக்க முயற்சிப்பதினால் தான்.

விவாகரத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் ஏன்? கணவனும், மனைவியும் ஒருவடைய நலனில் மற்றவர் அக்கறை கொள்ளாமல், தன்தன் நலனில் அக்கறை கொள்வதினால் தான் விவாகரத்துக்கள் ஏற்படுகின்றன.

இவ்வுலகில் ஏன் இனவெறி, மதுப்பழக்கம், குழந்தைகளைத் தவறாக நடத்துவது, மனிதர்களை மனிதர்களே மிருகத்தனமாக நடத்துவது, பொய், ஏமாற்று, போராசை, சோம்பேறித்தனம்,



சிறுவயதில் கர்பந்தரித்தல் (அதாவது திருமணமாகமலே) போன்றவைகளெல்லாம் ஏன் நடந்துகொண்டிருக்கின்றன? முதலாவது நான், அடுத்தது தான் மற்றவர்கள் என்கிற மனபோக்கு இருப்பதனால் தான்.





இப்போது சுயத்தை மையமாகக்கொண்டு செயல்படுகிறவர்களை சுயக் கட்டுப்பாடுடைய மனிதர்களாக மாற்றுவது எப்படி? பல அரசாங்கத் திட்டங்கள், பல ஒழுக்க நடவடிக்கைகள் மாற்றத்தை ஏற்படுத்துமா? சமத்துவக் கொள்கையானது பல முயற்சிகளை எடுத்துத் தோற்றுப்போனது.

**கடைசி முயற்சியாக மனிதனுக்குத் தேவையான அறிவுரைகளை உள்ளடக்கிய வேதாகமத்திற்குச் சென்று, அது என்ன சொல்லுகிறதென்று நாம் கவனிப்போம்.**

- வேதாகமம், வேலை செய்வதில் நாம் சோம்பலாக இருக்கக்கூடாது என்று சொல்லுகிறது. உண்மையைச் சொன்னால், வேலை செய்யாதவன் சாப்பிடவும் கூடாது என்றும் சொல்லுகிறது.
- வேதாகமம்,ஸ்திரீகள் கண்ணியமான உடைகளையே அணிய வேண்டுமென சொல்லுகிறது.
- வேதாகமம், எதையும் திருடாதே என்று சொல்லுகிறது
- வேதாகமம், மது அருந்தவே கூடாது என்று சொல்லுகிறது
- வேதாகமம், தன் சொந்த மனைவியோடே மகிழ்ந்திரு என்றும் சொல்லுகிறது.
- வேதாகமம், நீங்கள் எதை விரும்புகிறீர்களோ, அதைச் செய்ய வேண்டாம். மாறாக நீங்கள் வேதத்தின் படி எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யுங்கள் என்றும் சொல்லுகிறது. மேலும், மனச்சாட்சியில் சூடுண்டவர்கள். செய்யத்தக்கவைகள் எவைகள், செய்யத்தகாதவைகள் எவைகளென்றும் குறிப்பாகச் சொல்லுகிறது.

நாம் இவ்வேதபுத்தகத்தைக் கண்டுகொள்ளாமலிருக்கலாம் அல்லது இதை மறுக்கலாம். நாம் இதற்குச் சவால்விடலாம், இதை விமர்சிக்கலாம், இதை நிராகரிக்கலாம். ஆனால், மிக மோசமான காரியங்களை நாம் செய்யும் போது கூட, நமக்காக காத்திருந்து நம் மனதை ஆக்கிரமித்து, நன்றாக நடந்து கொள், இல்லையேல் அழிந்து போவாய் என்றும், விசுவாசித்து இரட்சிக்கப்பட்டு என்றும் நமக்கு எச்சரிக்கிறது. ✝


## சத்திய வழி




- பேச்சாளர் : சகோ. P.R. சுவாமி (ஊழியர்)
- ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
- நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

தொடர்புக்கு : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்




- பேச்சாளர் : சகோ. B. அர்ஜுனன்
- தமிழன் : திங்கள் காலை 6:00 மணி & சனி மாலை 6:15 – 6:30 மணி
- மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ரேடியோ : SW 25 & 41 M (சனி மாலை 5.30 5.45)
  Srilanka all Asia Service



ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம் ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்தலகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை




- பேச்சாளர் : சகோ. B. பிலேமோன் ராஜா
- தமிழன் : ஞாயிறு காலை 6:45 மணி & வெள்ளி காலை 6:00 மணி
- பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- தமிழ் மாதப் பத்திரிக்கை : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- English Quaterly Magazine : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பணி
- J.C. School of Evangelism : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

தொடர்புக்கு : செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420



## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:15 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:00 | மணி |

## அஞ்சல் வழி வேதாகமகல்வி

வேதாகமஅஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு :இயக்குனர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் **பல்வேறு தலைப்புகளில்** வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன **கைப்பிரதிகள்** (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

| | |
|---|---|
| E.Z.S. ராஜநாயகம்: 98427 30382 | P.C. பிலேமோன் ராஜா: 924420 4420 |
| P.R. சுவாமி : 098440 70763 | B. அர்ஜுனன் : 994435 58041 |

## " சத்தியத்தின் குரல் " சந்தா விண்ணப்பம்

☐ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 (4 இதழ்கள்) (அ) ரூ. 200 (8 இதழ்கள்) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

☐ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய ................................ முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. .................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

☐ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி


**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.

Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385

E-mail : rajarichal@yahoo.co.in


பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________



## WHO AM I ? நான் யார்?

Rebecca Rushmore

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்புகளையும் கவனமாக வாசித்து யோசியுங்கள். என் பெயரை நீங்கள் முதல் குறிப்பிலேயே யூகித்துவிட்டால், 100 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்து விடுங்கள். ஐந்தாவது குறிப்பிற்குப் பிறகு நான் யாரென்பதைக் கண்டுபிடித்தால் உங்கள் மதிப்பெண் 60. என் அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையைச் சரிபார்க்க வேதவசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

1. நான் பாலஸ்தீன வரைபடத்தில் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கிறேன்.
2. நான் பல்வேறுபட்ட வித்தியாசமான பெயர்களால் அழைக்கப்பட்டிருக்கிறேன்
3. என்னுடைய நீளம் ஏறத்தாழ 13 மைல்களும், அகலம் 8 மைல்களும்
4. இயேசு கிறிஸ்து என்னைச் சுற்றிலுமுள்ள பட்டணங்களில்தான் பெரும்பாலான அற்புதங்களைச் செய்தார்
5. பேதுரு, அந்திரேயா, யோவான், யாக்கோபு போன்றோர் இயேசு கிறிஸ்து தங்களை அழைத்தபோது என்னிடத்தில் தான் மீன்பிடித்துக் கொண்டிருந்தார்கள் ( மாற்கு 1 : 16 )
6. இயேசு கிறிஸ்து மலைப் பிரசங்கத்தை எந்த மலையிலிருந்து செய்தாரோ அந்த மலை அநேகமாக என்னிலிருந்து மேல்நோக்கிப் பார்க்கத்தக்கதாகத்தான் இருந்திருக்கிறது ( மத்தேயு 4 : 23 - 5 :1)
7. நான் பலத்த காற்றுடன் பொங்கி எழுந்தபோது இயேசு கிறிஸ்து என்னை அமைதிப்படுத்தினார் ( மாற்கு 4 : 36 - 41 )
8. என் அமைப்பு தலைகீழாக வைக்கப்பட்ட பேரிக்காயைப் போன்றது
9. யோர்தான் நதி என் வழியாகத் தான் பாய்கிறது
10. நான் எருசலேமிருந்து வடக்காக 60 மைல்கள் தூரத்தில் இருக்கிறேன்.

For Further Information, Please Contact :




# சத்தியத்தின் குரல்




## சத்தியத்தின் குரல் நூலை நீங்கள் எப்படிப் பயன்படுத்தலாம்?

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**

**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

தமிழன் TV

| | | |
|---|---|---|
| திங்கள் | காலை | 7:00 |
| வியாழ | இரவு | 9:30 |
| சனி | காலை | 7:15 |

| | | |
|---|---|---|
| ஞாயிறு | காலை | 6:45 |
| திங்கள் | காலை | 6:00 |
| வெள்ளி | காலை | 6:00 |
| சனி | மாலை | 6:15 |

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

'திருமறை ஆசான்'
'கிருபையுள்ள வார்த்தை'
'வேர்டு ஆப் கிரைஸ்ட்'

மேலும் வி[illegible] .S. ராஜநாயகம், தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
[illegible]257 230030, செல் : 98427 30382, 99655 30385